# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 222 ஆனி 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை 06 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## புதிய அரசமைப்பால் பொருளாதார நன்மைகள்

### கிட்டும் என்கிறார் அமெரிக்கத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஜூலை 6

புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதன் ஊடாக இலங்கை பொருளாதார ரீதியில் நன்மையடைய முடியும் என்று இலங்கையிலிருந்து விடைபெற்றுச் செல்லும் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக கடமையாற்றி பிரியாவிடை பெற்றுச் செல்லும் தூதுவர் அதுல் » 23



## பொலிஸார் தீவிர சோதனை

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள சமூக விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலிஸார் வீதிச் சோதனை மற்றும் ரோந்து நடவ » 23

## சிறுத்தை கொல்லப்பட்டதால் கைதானோருக்குப் பிணை

கிளிநொச்சி, ஜூலை 6

கிளிநொச்சி, அம்பாள்புரம் கிராமத்துக்குள் நுழைந்த சிறுத்தை அடித்துக் கொல்லப்பட்டமை தொடர்பில்கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்ட 10 பேருக்கும் நேற்றுப் பிணை வழங்கப்பட்டது.

இந்த வழங்கு நேற்று கிளிநொச்சி நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது பிணை அனுமதி வழங்கப்பட்டது.

சந்தேகநபர்கள் 10 பேரும், தலா 5 ஆயி » 23

## யாழ். இந்து மாணவனுக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம், ஜூலை 6

பன்னாட்டு கணித ஒலிம்பியாட் போட்டி » 23

## பெற்றோல் டீசலின் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 6

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகைளில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரேன் 92 ரகப் பெற் » 25

## அக்கராய மன்னனுக்கு கிளிநொச்சியில் சிலை

கிளிநொச்சி, ஜூலை 6

அக்கராய மன்னனின் உருவச் சிலை நேற்றுக் கிளிநொச்சியில் திறக்கப்பட்டது. கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அக்கராயனில் அமைந்துள்ள நாற்சந்தியில் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. » 23

## கிளிநொச்சி வீதிகளில் தென்பட்ட புலிச் சின்னம்

### விசாரணைகளும் ஆரம்பம்




கொழும்பு, ஜூலை 6

கிளிநொச்சி, அக்கராயன்குளம் மற்றும் ஸ்கந்தபுரத்தில் முதன்மை வீதிகளில் விடுதலைப் புலிகளின் இலட்சினை, தமிழீழ வரைபடம் உள்ளிட்டவை பாதைகளில் வரைந்தும் வேறு வழிகளி » 06

## ஒஸ்டின் ஓய்வு

கொழும்பு, ஜூலை 6

அரச தலைவரின் செயலர் ஒஸ்டின் பெர்னாண்டோ தனது பதவியிலிருந்து நேற்று விலகியுள்ளார். சுகாதாரம் மற்றும் தனிப்பட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பதவியிலிருந்து விலகுவதாக அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு அவர் அனுப்பியுள்ள பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2017ஆம் » 23

## விலகினார் விஜயகலா

கொழும்பு, ஜூலை 6

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகியுள்ளார். தனது பதவி விலகல் கடிதத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அனுப்பியுள்ளார். » 23

### மக்களுக்காகவே பதவி துறந்தேன்

விஜயகலா விளக்கம் » 24

### பதவி விலகினாலும் விசாரணை நிற்காது

கொழும்பு, ஜூலை 6

சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அவரது அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலோ அல்லது அவ' » 24

## நந்தகுமாரின் பெயரில் துணுக்காயில் கிராமம்

முல்லைத்தீவு, ஜூலை 6

முல்லைத்தீவு, துணுக்காய் உதவி மாவட்ட செயலராகக்கடமையாற்றி, போர் நடவடிக்கையின்போது உயிரிழந்த நந்தகுமார் நினைவாக மாதிரிக் கிராமம் உருவாக்கப்படவுள்ளது. நினைவு சுமந்த நந்தகுமார் நகர் எனும் மாதிரிக் » 06

## தாயகத்தின் பல இடங்களில் கரும்புலிகள் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 6

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் ஜூலை 5ஆம் திகதி கரும்புலிகள் தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் கரும்புலிகள் தின நினைவேந்தல்கள் நடைபெற்றன. » 23



## வடக்குத் தடகளம் இன்று

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

இன்று ஆரம்பமாகும் இந்தத் தொடர் 5 நாள்களுக்கு நடைபெறவுள்ளன. (ம-10823)

## இந்திய மீனவர்கள் மீது புதிய சட்டத்தில் வழக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 6

இலங்கைக் கடலுக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேருக்கும் புதிய சட்டத்தின்படி வழக்குத் தாக்கல் செய்யப் » 23

## திணைக்கள அதிகாரிகளுக்கு டெனீஸ்வரன் இன்று கூட்டம்!

### வேறு எவரின் உத்தரவுகளையும் ஏற்கக் கூடாதெனவும் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் வர்த்தக வாணிப அமைச்சுக்குரிய திணைக்களத் தலைவர்கள், வேறு எந்தவொரு அமைச்சர்களினதும் உத்தரவுகளை ஏற்றுச் செயற்பட வேண்டாம் என்று » 25

## புனையப்பட்ட ஒரு கதையே புலிகளின் மீளுருவாக்கம்

ருவான் விஜேவர்த்தன தெரிவிப்பு » 25

## மாகாணத் தேர்தலை நடத்துமாறு தமிழ்க் கூட்டமைப்பு பிரேரணை

கொழும்பு, ஜூலை 6

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் நாடாளுமன்றத்தில் இன்று ஒத்திவைப்பு » 23





நாடு முழுவதும் பரந்துள்ள கிளை வலையமைப்பு மற்றும் நெகிழ்ச்சித் தன்மையுள்ள சேவைகள் பலவற்றை தருகிறது DFCC லீசிங்.
கார் ஒன்றை வாங்க சிறந்த லீசிங்.

DFCC லீசிங்

அழையுங்கள் 0112 350000

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு



## யாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை.6
கதிர்காம ஆடிவேல் விழா உற்சவத்தை முன்னிட்டு பாதயாத்திரையில்செல்லும்பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

இதில் அம்பாறை உதவி மாவட்டச் செயலர் க. விமலநாதன், பிரதேச செயலாளர் சந்துருவன், உதவி பிரதேச செயலர் கே. நவநீதன், காரைதீவுபிரதேசசபைத்தவிசாளர் கே. ஜெயசிறில் மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நுவன் வெத்தசிங்க, பொத்துவில் பொலிஸ் பொறுப்பதிகாரிநிசாந்த, இராணுவ பொறுப்பதிகாரி மேஜர்ஜெனரல் எமல். உம். முதலிகே என பலர் கலந்துகொண்டனர். (ரி4)

## வீதியில்சென்றோர்மீதுதாக்குதல்

வீதியில் சென்றவர்கள் மீது இனம்தெரியாத கும்பல் ஒன்று வழிமறித்துதாக்குதலை மேற்கொண்டுதப்பிச் சென்றுள்ளது. இந்தச்சம்பவம்நாவற்குளிதச்சன்தோப்புவீதியில்நேற்று முன்தினம்இடம்பெற்றது. தாக்குதலில்காயங்களுக்குள்ளானவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். நல்லூரிலிருந்து தென்மராட்சி தெற்கில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றவர்கள் மீதே தாக்குதல் மேற்கொள் ளப்பட்டது எனக் கூறப்பட்டது. மேலதிக விசாரணை களை கோப்பாய்மற்றும்சாவகச்சேரிபொலிஸார்மேற்கொண்டுள்ளனர். (ரி4,9)



## கடமைகளை பொறுப்பேற்றார் இம்ரான் மஹ்றூப்

கொழும்பு,ஜூலை 6
கல்வி அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்றூப் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கல்வி அமைச்சில் சர்வமத வழிபாடுகளுடன் தமது கடமைகளை நேற்று ஆரம்பித்தார். கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இரா தாகிருஸ்ணன் உட்படகல்விஅமைச்சின்செயலாளர்கள் அதிகாரிகள் இம்ரான் மஹ்றூப்க்குவாழ்த்துதெரிவித்தனர். (ரி4)

# தங்கத்துக்கான வரியால் மோசமான பிரதிபலிப்புகள்

## அரச தலைவரிடம் சுட்டிகாட்டு

கொழும்பு, ஜூலை 6
தங்கத்துக்கு விதிக்கப்பட்டுள்ள 15 வீத இறக்குமதி வரி மற்றும் அதனால் ஆபரண தொழிற்துறையில் ஏற்பட்டுள்ள மோசமான பிரதிபலிப்புகள் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கவ்னத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று அரச தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. தேசிய இரத்தினக் கற்கள் ஆபரண அதிகார சபையின் சில முன்மொழிவுகள் இதன்போது அரசதலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த தொழிற்துறையில் உள்ளவர்களும், வர்த்தகர்களும் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக அரச தலைவரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இரத்தினக்கல் அகழ்வுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது அரச நிறுவனங்களிடமிருந்து பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்சினைகள் மற்றும் தாமதம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளில் தற்போது தீர்வுகளை வழங்கக் கூடியவற்றுக்கு உடனடியாக தீர்வுகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு அரச தலைவர் பணிப்புரை விடுத்தார். ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களின் பங்குபற்றுதலுடன் எதிர்வரும் 12ஆம் திகதி மீண்டும் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறும் அரச தலைவர் ஆலோசனை வழங்கினார்.

அமைச்சர் தயா கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. கே. விஜேதுங்க, மகாவலி அபிவிருத்தி
சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளர் அநுர திசாநாயக்க, இரத்தினக்கல் ஆபரண அதிகார
சபையின் தலைவர் பேசல பண்டார ஜயரத்ன ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ரி4)

## வட்டுக்கோட்டையில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 6
வட்டுக்கோட்டை அராலியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

வீட்டின் வெளியே நேற்றிரவு அவர் உறங்கினார் என்றும் காலையில் உயிரிழந்து காணப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா நாகசாமி (வயது 70) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

இவரின் கழுத்தில் கயிற்றால் இறுக்கப்பட்ட அடையாளமும் அருகே கயிறு ஒன்றும் காணப்பட்டது எனக் கூறப்பட்டது.

இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

விசாரணையின் பின்னர் உடல் கூற்றுப் பரிசேதனைக்காக மருத்துவமனையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (ரி4,26)

## 170 டைனமைட் வைத்திருந்தவர்கள் கைது

திருகோணமலை,ஜூலை 6
திருகோணமலையில் அனுமதிப்பத்திரமின்றி 170 டைனமைட் துண்டுகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவர் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறி யலில் வைக்கப்பட்டனர். சந்தேகநபர்கள்திருகோணமலைநீதிமன்றநீதிவான்முன்னிலையில்நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜமாலியாவைச்சேர்ந்த 34 மற்றும் 51வயதுடையவர்களே இவ்வாறுவிளக்கமறியலில்வைக்கப்பட்டனர். சம்பூர் கடற்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மீன் பிடிப்பதற்காக டைனமைட் பொருள்களை பயன்படுத்திய போதே சந்தேகநபர்கள் கடற்படையினரால்கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள்திருகோணமலைநீதிமன்றநீதிவான்முன்னிலையில் முற்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டார். (ரி4)

## இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை.6
நெடுந்தீவு கடலில் 2 படகுகளுடன் 12 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துமீறி இலங்கைக் கடலில் மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் காங்கேசன்துறை கடற்படையினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீரியல் வளதுன்றயினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நீரியல் வளத்துன்றயினர் மேற்கொண்டனர்.

இந்த ஆண்டில் இதுவரை 8 படகுகளுடன் 32 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ரி4-26,114)

## வாகனவிபத்தில் இளைஞன் சாவு

கொழும்பு,ஜூலை 6
மாத்தறைவெலிகமையில்நேற்றுநடந்த வாகனவிபத்தில்இளைஞன்ஒருவர்உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளும் தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதிலேயே விபத்துஇடம்பெற்றதுஎனப்கூறப்பட்டது.

வெலிகமைதப்பரதொட்டத்தைச்சேர்ந்த 19 வயதான இளைஞனே விபத்தில் உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞன் இரண்டு நாள்களுக்கு முன்னரே திருமணம் செய்து கொண்டார்எனத்தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிகவிசாரணைகளைப்பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## டிப்ளோமா கற்கைக்கான தகுதிப் பரீட்சை நாளை

கொடிகாமம், ஜூலை 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பகுதிநேரப்பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பித்த பட்டதாரி ஆசிரியர்களுக்கான தகுதிகாண் பரீட்சைகள் பல்கலைக்கழக கலைப்பீட பரீட்சை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறவுள்ளன. தேர்வுக்கான அனுமதி அட்டைகள் பல்கலைக்கழக மூத்த உதவிப் பதிவாளரால் உரிய பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள், அனுமதி அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் பரீட்சைக்குச் சமூகமளிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-159)

## கால்வாயில்இருந்து ஆணின் சடலம் மீட்பு

சிலாபம்,ஜூலை 6
சிலாபம் மாதம்பை பழைய நகரிலுள்ள கால்வாயிலிருந்து ஆணின் சடலம் மீட்கப்பட்டது.

சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர். மாதம்பை பழைய நகரைச் சேர்ந்த 67 வயதுடைய முதியவரே சடலமாகமீட்கப்பட்டார்.

சம்பவம்தொடர்பில்மேலதிகவிசாரணைகளைப்பொலிஸார்மேற்கொண்டனர். (ரி4)



## தொழில்நுட்பவியல் கல்லூரிக்கு நேரில் சென்றார் சரத் அமுனுகம

யாழ்ப்பாணம்,ஜூலை 6
கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரியின் கற்றல்நடவடிக்கைகளைதொழில்சார் பயிற்சிமற்றும்கண்டிமரபுரிமைகள்அமைச்சர்சரத்அமுனுகமநேற்றுமுன்தினம்நேரில் சென்று பார்வையிட்டார். இதன் போது தொழில்பயிற்சிகளை முழுமை செய்த மாணவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்க அரசு எதிர்பார்த்துள்ளது.

கற்றல்நடவடிக்கைகளுக்குமாணவர்களை அதிகமாக்குங்கள் என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து திறன் அபிவிருத்தி முயற்சிபயிற்சிகளைகற்றுவரும்மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் அவர்களின் தொழில் வாய்ப்புகள் பற்றியும் அமைச்சர் கேட்றிந்து கொண்டார்.

தொடர்பாடல் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறிக்கான ஆய்கூட வசதிகள், நிர்மாண வேலைகளுக்கான டிப்ளோமாக் கற்கை நெறிக்கான ஆய்வுகூட வசதிகள் மற்றும் முழுமைப்படுத்தப்படாமல் உள்ள கட்டட வேலைகளை முழுமைப்படுத்து வதற்கான உதவிகளை செய்ய வேண்டும் என்று கல்லூரி சார்பாக அமைச்சருக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பில் யாழ் தொழில்நுட்பவியல் கல்லூரிபணிப்பாளர் எ. முகுந்தன், அமைச்சின்உயர்அதிகாரிகள்மற்றும்யாழ்தொழில்நுட்பவியல்கல்லூரியின்உயர்அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ரி4,7)

# இராணுவம் இருக்கும்போது எவ்வாறு போதைப்பொருள்?

## வடக்கின் நிலையால் அதிர்ச்சி என முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

வடக்கில் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுகின்றபோதும் தினமும் போதைப்பொருள்கள் வட மாகாணத்துக்குள் கொண்டுவரப்படுவதும் பிற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதும் அதிர்ச்சியூட்டுகின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

வவுனியா கல்நாட்டினகுளம் இயற்கை சுற்றுலாத்தலம் மற்றும் சிறுவர் பூங்கா நேற்று மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது. வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சுற்றுலாத் தலத்தைத் திறந்தார். அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

சுற்றுலாத்துறை விருத்தி செய்யப்படும் அதே நேரத்தில் எமது பாரம்பரியங்களும் கலை பண்பாட்டு விழுமியங்களும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளும் பேணப்பட வேண்டும். தற்கால சூழ்நிலையில் மேலைத்தேய நாகரீகம் எமது மக்களை கவர்ந்துள்ளது.

மேலைத்தேய கலாசாரங்கள் அங்கு வாழும் மக்களுக்கும், அங்கு காணப்படும் காலநிலைக்குஏற்ப உருவாக்கப்பட்டவை. அவற்றைப் பிரதி பண்ணி எமது பகுதிகளில் நடைமுறைப்படுத்த முயல்வது கலாசார பிறழ்வுகளுக்கு வழிசமைப்பனவாக அமையும்.

இவ்வாறான சுற்றுலா மையங்களுக்கு அண்மித்துள்ள பகுதிகளில் தனிப்பட்டவர்கள் தமது பிரத்தியேக நிலங்களில் சிறியளவிலான சுற்றுலாகுடில்களையும் மற்றும் தங்குமிட வசதிகள், உணவு விற்பனை நிலையங்கள், உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையங்கள் என்பனவற்றை ஆரம்பிப்பதன் மூலம் இப்பகுதிகளுக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்க முடியும்.

சுற்றுலாத் தலங்கள் சீரமைக்கப்படும் அதே சமயம் அவற்றின் பாதுகாப்புக்கள் உறுதிப்படுத்தப்படவேண்டும். உள்ளூர் மக்களுக்கு இடையூறுகள் ஏற்படாமல் இருத்தல் அவசியம். பெண்கள், சிறு குழந்தைகளின் பாதுகாப்பு ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்தப் பகுதியை மது போதையற்ற, போதைப் பொருள் பாவனையற்ற ஒரு பிரதேசமாக மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். பல இயற்கை அழகுடைய சுற்றுலாத் தலங்கள் மதுப்பிரியர்களின் கைகளில் சிக்கி அவர்கள் மட்டும் ஆட்சி செய்கின்ற பிரதேசமாக மாற்றப்பட்டிருப்பது கவலை தருகின்றது.

மதுபாவனை, போதைப்பொருள்பாவனை ஆகியவற்றால் சீரழிகின்ற ஒரு பகுதியினர் வன்முறைகளிலும், சண்டை சச்சரவுகளிலும், களவு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருப்பது வருத்தத்திற்குரியது. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரின் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஏதாவது குறைபாடுகள் இருக்கின்றனவா என்று ஆய்ந்தறிவது அவசியம்.

தேவை இருந்தால் அவற்றை விரைந்து களைய வேண்டும். நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். எமது எதிர்காலத்தின் தலைவர்களாகவும், நம்பிக்கை நட்சத்திரங்களாகவும் விளங்க வேண்டிய இளைஞர்கள் பலர் அநியாயமாக துர்நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது உடல் வலுக்களை இழப்பதுடன் விபத்துக்களில் சிக்கி உயிரிழப்பது வேதனையானது.

சூழல்கள் மேம்படவேண்டும். குற்றங்கள் இருப்பின் களையப்பட வேண்டும். அதற்கு நாம் அனைவரும் இணைந்துகொண்டு பாடுபட வேண்டும். என்றார்.

நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது

மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் எல்லை கிராமங்களை பாதுகாக்க வேண்டிய கடமை எமக்கிருக்கிறது. எல்லைஓரத்திலே இப்படிப்பட்ட திட்டத்தைச் செய்யவேண்டும் என்று இந்தக்கிராமத்தை சேர்ந்த இளைஞர்கள், கிராமஅபிவிருத்திச்சங்கத்தினர் பொதுமக்கள் ஆகியோர் காட்டிய அக்கறையின் விளைவே மாகாண சபை இதனை செயற்படுத்துவதற்கு காரணம்.

அனைத்து மக்ளையும் இந்தப் பகுதிக்கு வரவைப்பதன் மூலமே எங்களுடைய பிரதேசமாக தக்ககவைத்துகொள்ளவும் விருத்தி செய்து கொள்ளவும் முடியும். இந்தப்பகுதிக்கு வருபவர்கள் தேவையற்ற சமூகவிரோத செயற்பாடுகளில் ஈடுபடாமல் எமது கலை கலாசார வழுமியங்களை பேணிப் பாதுகாக்கும் ஒரு இடமாக பயன்படுத்த வேண்டும். என்றார்.

வடமாகணத்தின் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த சுற்றுலாத் தலம் 8 மில்லியன் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் து.நடராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாணசபை உறுப்பினர்களான யி. ரி. லிங்கநாதன், ப.சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதாரலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ. மயூரன், வவுனியா நகர சபை தலைவர் இ.கௌதமன், பிரதேச சபை உறப்பினர்கள், பொதுமக்கள் எனபலரும் கலந்து கொண்டனர். (ரி4-110)

## பற்றைக்குள் சடலமாக 76 வயதுப் பெண் மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 6

கிளிநொச்சி, ஜெயந்திநகரில் வயோதிபப்பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச்சேர்ந்த 76 வயதுடைய பேரின்பநாதன் மகேஸ்வரி என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த 24 ஆம் திகதி தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்று வருவதாகக் கூறிச் சென்ற வயோதிபப் பெண் வீடு திரும்பவில்லை. அதைத் தொடர்ந்து வயோதிபப் பெண்ணின் மகனால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் ஜெயந்தி நகரிலுள்ள பற்றைக்குள் இருந்து வயோதிபப் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி நீதிவானின் பணிப்பின்படி திடீர் இறப்பு விசாரனை அதிகாரி சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு விசாரணையை மேற்கொண்டார்.

சட்ட மருத்துவ அதிகாரியின் மூலம் உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு இறப்பு விசாரணை அதிகாரியால் கிளிநொச்சி பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. உயிரிழந்தவர் நோய் காரணமாகவே இறந்துள்ளார் என்று உடற்கூற்றுபரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது என கூறப்பட்டது. (ரி4,159)

## விபத்தில் இருவர் காயம்



யாழ்ப்பாணம், ஜூலை 6

சாவகச்சேரி சங்கத்தானை மடத்தடி சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றது எனத்தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஹைஏஸ் வாகனமே விபத்துக்குள்ளானது. வீதியின் குறுக்கே வந்த மோட்டார் சைக்கிளால் ஹைஏஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியோர பேருந்து தரிப்பிடத்துடன் மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் ஹைஏஸ் வாகனத்தில் பயணித்த 17 வயது சிறுவன் காயமடைந்துள்ளான். சாரதி சிறுகாயங்களுக்கு உள்ளானார். ஹைஏஸ் வாகனமும் பேருந்து தரிப்பிடமும் சேதங்களுக்கு உள்ளாகின.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4,7,9)

## விபத்தில் குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 6

குளியாப்பிட்டி மாதம்பே வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 4 வயதுடைய ஆண் குழந்தையொன்று உயிரிழந்தது. இது தொடர்பில் பாரவூர்தியின் சாரதி கைதுசெய்யப்பட்டார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாதம்பேயிலிருந்து குளியாப்பிட்டி நோக்கிச் சென்ற உந்துருளியும் கிளை வீதியில் இருந்து பிரதான வீதிக்குல் சென்ற பாரவூர்தி யொன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனக் கூறப்பட்டது. தனது உறவினரொருவருடன் உந்துருளியில் பயணித்த குழந்தையே இந்த விபத் தில் உயிரிழந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி கொள்ளை

கொழும்பு, ஜூலை.6

கிருலபனையில் பொண்ணொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி தங்கச் சங்கிலியைக் கொள்ளையிட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

27 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியில் தனிமையில் சென்று கொண்டிருந்த பெண்ணை காட்டுப்பகுதிக்கு கடத்திச் சென்றே பெண்மீது தாக்குதலை மேற்கொண்டார் எனக் கூறப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான பெண் பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்ட முறைப்பாட்டை யடுத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

இவரிடமிருந்து கூரிய ஆயுதமும் தங்கச் சங்கிலியும் மீட்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. தாக்குதலுக்கு இலக்கான பெண், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## ஆயுதங்கள் மீட்பு


கொழும்பு, ஜூலை.6

மெதிரிகிரியவிலுள்ள வீடொன்றில் இருந்து வெடிகுண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது ரி 56 ரக துப்பாக்கி ஒன்று மற்றும் அதற்கான 6 தோட்டாக்கள், கைக்குண்டுகள், இராணுவத்தினரின் சீருடைகள் மற்றும் இராணுவத்தினர் பயன்படுத்தும் போத்தல்கள் உள்ளிட்ட சில பொருள்கள் மீட்கப்பட்டன எனக் கூறப்பட்டது. (ரி4)





## போதைபொருள்கள், மதுபான போத்தல்கள் மீட்பு

கொழும்பு, ஜூலை.6

ஒருகொடவத்தையில் பாரவூர்தி ஒன்றிலிருந்து ஒருகோடியே ஒரு இலட்சத்து 57 ஆயிரம் ரூபா பெறுமதியான போதைப்பொருள்களும் வெளிநாட்டு மதுபானங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத்தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவை நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாரவூர்த்தியிலிருந்து 2.9 மில்லியன் ரூபா பெறுமதியான 2 கிலோ 945 கிராம் ஹஷீஸ் போதைப்பொருளும், 80 மில்லியன் பெறுமதியான குஷ் என்ற கஞ்சா 2 கிலோகிராமும் கைப்பற்றப்பட்டது என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவற்றுடன் அதிக செறிவைக் கொண்ட 220 மதுபான போத்தல்களும் 225 வைன் போத்தல்களும் 100 பியர்களும் கைப்பற்றப்பட்டன. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

## மதுபானப் போத்தல்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை.6

சட்டவிரோத மதுபானப் போத்தல்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

இந்தியாவைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

இவரிடமிருந்து ஒன்பது வெளிநாட்டு மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முற்ப டுத்தப்பட்ட போது 9 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். (ரி4)

# பேருந்துச்சேவை சீரின்மை மாணவர்கள் பெரும் அவதி

யாழ்ப்பாணம், ஜுலை 6

யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கென இருவேளை நடத்தப்படும் 769 மார்க்கப் பேருந்துச்சேவை ஒழுங்கில்லாமல் சேவையில் ஈடுபடுவதால் மாணவர்கள் பருவகாலப் பயணச்சீட்டு பெற்றிருந்தும் தனியார் பேருந்துகளின் உதவியை நாடவேண்டியுள்ளதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களுக்கென மிருசுவில் உசனிலிருந்து புறப்படும் அரச பேருந்து கடந்த மே மாதத்திலிருந்து ஒழுங்காகச் சேவையில் ஈடுபடுவதில்லை. பருவகாலப் பயணச்சீட்டுப் பெற்றுள்ள மாணவர்கள் அரச பேருந்துக்காக காத்திருந்து செல்லும் வேளையில் பாடசாலையில் தாமதமாக வந்தமைக்காகத் தண்டனைகளையும் பெற்றுள்ளனர்.

அத்துடன் பாடசாலை முடிந்ததும் யாழ். இந்துக்கல்லூரியிலிருந்து புறப்பட்டு உசன் வரை செல்லும் தென்மராட்சிப் பிரதேசப் பாடசாலை சேவை கடந்த மூன்று மாதங்களாக நடத்தப்படவில்லை. இதனால் மாணவர்கள் பேருந்து நிலையம் வரை நடந்து சென்று வேறு பேருந்துகளில் வீடுகளுக்குக் காலதாமதமாகச் செல்கின்றனர்.

இதனால் பல மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் வாய்ப்பினை இழந்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் சாலை முகாமையாளருக்குக் கடந்த ஜூன் 9 ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தும் இது வரை பயன்கிடைக்கவில்லை எனவே உரியவர்கள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கோண்டாவில் பேருந்து சாலையுடன் தொடர்புகொண்டு கேட்டபோது "இரவு நேரச் சேவையை முடித்துக் கொண்டு உசனில் தரிக்கும் பேருந்து காலை நேரப் பாடசாலை சேவையைத் தினமும் ஆற்றுகின்றது. எனினும் சில நேரங்களில் தான் சேவைக்கு தவறுகின்றது. அத்துடன் பிற்பகல் பாடசாலை முடிந்ததும் ஆற்றுகின்ற சேவைக்கு தேவையான சாரதி மற்றும் நடத்துனர் பற்றாக்குறை காரணமாக தொடர்ச்சியான சேவையை வழங்கமுடியாமை உள்ளது. எனவே எமக்கான ஆளனிப்பற்றாக்குறை நிவர்த்திசெய்யப்படும் பட்சத்தில் உரிய வகையில் சேவையாற்றுவோம்" எனத் தெரிவிக்கப்பட்டது. (114.9)



யாழ்ப்பாணம் அல்வாய் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைரவிழா அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாகப் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் அ.சா. அரியகுமார், கரவெட்டிப் பிரதேச சபை தலைவர் த. ஐங்கரன், வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் நிலையை உபதலைவர் எஸ் சுரேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.



## இலத்திரனியல் நூல் நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 6

36 ஆவது துன்னாட்டு இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இலத்திரனியல் நூல் நிலையம் கடந்த புதன்கிழமை மாலை 5 மணியளவில் சுன்னாகம் ஐயனார் இளைஞர் தினத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகத்தலைவரும், நல்லூர்ப் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தருமான இ.யுகராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு நாடா வெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்வில் வலி. வடக்குப் (காங்கேசன்துறை) பிரதேச சபை உறுப்பினர் சொ.சபேசன், உடுவில் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி சி. அனுசன், ஐயனார் சனசமூக நிலையத் தலைவர் இ.யுகராஜ் மற்றும் இளைஞர் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (113)



## லயன்ஸ் கழகத்தின் ஆண்டு நிறைவும் நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வும்

சாவகச்சேரி, ஜுலை 6

யாழ்ப்பாணம், சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவும் நடப்புவருட நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வும் டச் சாலை ஐங்கரன் மணிமண்டபத்தில் நாளை மறுதினம் மாலை 6.30 மணிக்கு கழகத் தலைவர் லயன் உ. சிசில் றெமிண்டஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாகப் பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306 பி1 மாவட்ட முதலாவது உதவி ஆளுநர் லயன் பீ.மகேந்திரன், லயன் சீமாட்டி சங்கீதா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் மரக்கன்று வழங்கல், பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கல் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கல் போன்றவையும் இடம்பெறவுள்ளன.

கழகத்தின் 40 ஆவது வருடத்தின் புதிய தலைவராக லயன் கு. பிரணவராஜா தலைமையிலான பிரதிநிதிகள் பொறுப்பேற்கவுள்ளனர். கழக புதிய நிர்வாகத்தின் நலனோம்புத்திட்டங்களும் முதன்மை விருந்தினர்களால் ஆரம்பித்துவைக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (9)

## சங்காபிசேகம்

புலோலி, ஜுலை 6

யாழ்ப்பாணம் புலோலி குரும்பசிட்டி ஞான வைரவர் ஆயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான நாளை சனிக்கிழமை காலை வைரவப்பெருமானுக்கு 1008 சங்காபிசேகம் இடம்பெற்று தொடர்ந்து பூசை நடைபெற்று அன்னதானமும் வழங்கப்படும். மாலை திருக்கல்யாணம், திருஊஞ்சல் மற்றும் சுவாமி வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளன. (124)



## பரிசளிப்பு நிகழ்வு

காரைநகர், ஜுலை 6

யாழ்ப்பாணம், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் கல்லூரி அதிபர் தி. மதிவதனன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் இ. இளங்கோவன், சிறப்பு விருந்தினராகக் ஓய்வுநிலை வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச்செயலர் ப. விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (250)

## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஜுலை 6

நல்லூர் பாரம்பரிய றோட்டறக்டகழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் நடமாடும் குருதிக்கொடை முகாம் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த உயிர்காக்கும் உன்னதப் பணியில் தன்னார்வக் குருதிக் கொடையாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கழகத்தின் தலைவர் கிருஷாந்தி வன்னியசிங்கம் தெரிவித்துள்ளார்.



## மகோற்சவம்

யாழ்ப்பாணம், வடமராட்சி அல்வாய் மாலைசந்தை வரதராஜ விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை ஆடிப்பிறப்பன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (124)

## அனுமதியின்றி மணல் ஏற்றிவந்த சாரதிக்கு ரூ. 50 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி ஜுலை 6

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் மணலையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் தினமும் வாகனங்களில் மணல் ஏற்றப்படுவதாகப் பொதுமக்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர்.

கடந்த சனிக்கிழமை காலை யாழ் பொலிஸ் நிலைய அதிரடிப் பொலிஸார் வருகை தந்த போது அல்லாரைப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிவந்தவனத்தை மறித்து வாகனத்தையும் சாரதியையும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றினார் என்ற குற்றச்சாட்டுடன் வாகனச் சாரதிக்கு எதிராகப் பொலிஸார் நேற்று முன்தினம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்திருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் மணலையும் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

## நீராழி மலர் வெளியீட்டு நிகழ்வு



யாழ்ப்பாணம் ஸ்ரீ ஞான வைரவர் உயிர் பாதுகாப்பு சேவைகள் அமைப்பின் 40 ஆவது ஆண்டு நிறைவும், நீராழி மலர் வெளியீடும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய அரங்கில் அமைப்பின் தலைவர் நா. தில்லைராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிகச்செயலர் சுகுணரதி தெய்வேந்திரமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகின் உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி, வேலணை தெற்கு பிரதேச செயலர் அம்பலவாணர் சோதிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதன்மை விருந்தினர் மலரினை வெளியிட்டுவைக்க அதன் முதற் பிரதியை விவாகப் பதிவாளர் கா. ஜெயசிவதாசன் பெற்றுக் கொண்டார். (159)

## விளையாட்டு நிகழ்வு

வடமராட்சி, ஜுலை 6

யாழ்ப்பாணம், வடமராட்சி திருநாவலூர் நாவலர் சன சமூக நிலையத்தின் நாவலர் இலவசப் பாலர் கல்வி நிலைய வருடாந்த விளையாட்டு நிகழ்வு மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலய மைதானத்தில் நாளை சனிக்கிழமை மதியம் 2மணிக்கு இடம்பெறவுள்ளது.

முன்பள்ளி ஆரம்பப் பிள்ளைப்பருவ முகாமைத்துவக் குழுத் தலைவரும், நிலையத் தலைவருமான வ.ச.செல்வராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி. தில்லைநாதன் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜுலை 6

உடுவில் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையும் உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து வடக்குப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா மருதனார்மடம் வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மதியம் 2 மணிக்கு உடுவில் பிரதேச செயலர் சிவராஜசிங்கம் ஜெயகாந்த் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பாலமுரளி அபிராமி, மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கலாசார உத்தியோகத்தர் மார்க்கண்டு அருள்சந்திரன், மூத்த கலைஞர் வல்லிபுரம் குமாரசாமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## முன்பள்ளி மழலைகள் விளையாட்டு நிகழ்வு

சாவகச்சேரி, ஜுலை 6

தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி அலகின் ஏற்பாட்டிலான வலய நிலை முன்பள்ளி மழலைகள் விளையாட்டு நிகழ்வு கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை மதியம் 2.30 மணிக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் வினோஜிதா கணேசநாதனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவனும், மதிப்புறு விருந்தினராக திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வலயத்தில் சாவகச்சேரி, கொடிகாமம், கச்சாய், மட்டுவில், வரணி, கைதடி ஆகிய குடும்ப முன்பள்ளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு இதில் கொடிகாமம், சாவகச்சேரி கோட்ட முன்பள்ளிகளுக்கான விளையாட்டு நிகழ்வு சாவகச்சேரியில் கடந்த மாதம் நடத்தப்பட்டது. அவற்றில் வெற்றி பெற்ற முன்பள்ளி அணிகளுக்கிடையில் வலய நிலைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (9-159)

# கோப்பாயில் மைய சந்தையை அமைப்பதற்கு நடவடிக்கை

அச்சுவேலி, ஜுலை 6

வலி.கிழக்குப் பிரதேச சபைப் பிரிவில் மத்திய சந்தையை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைப் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. கூடிய விரைவில் மத்திய சந்தை இராச வீதி, கோப்பாய் – மருதனார்மடம் வீதி நாற் சந்திக்கு அருகில் செயற்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருவதாக வலி. கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா நிரோஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வலி.கிழக்குப் பிரதேச மத்திய சந்தை வெளிமாவட்ட சந்தைகளுடன் இணைந்த நிலையில் செயற்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். இந்த வகையில் தம்புள்ள சந்தை, கொழும்பு புறக்கோட்டைச் சந்தை மற்றும் வெளிமாவட்டங்களிலுள்ள சந்தைகளுடன் இணைப்புச் செய்யப்படும். வலி. கிழக்குப் பிரதேச சபைப் பிரிவு பெருமளவில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பிரதேசமாகும். வலி. கிழக்கில் 16 ஆயிரம் குடும்பங்கள் முழு நேர விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். 8 ஆயிரம் விவசாயத் தொழிலாளர் உள்ளனர். ஆனால் பொருத்தமான சந்தை வசதியின்றி உள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் நெருக்கடியைச் சந்திப்பதுடன் பிரதேச சபைக்கும் வருமான இழப்பு ஏற்படுகிறது.

மத்திய சந்தை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொருத்தமான காணியைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். காணிக் கொள்வனவில் அரசின் மதிப்பீட்டுப் பெறுமதிக்கும் உள்ளூர்க் காணிப் பெறுமதிக்கும் இடையே இடைவெளி காணப்படுகின்றது.

இதனால் காணிக்கொள்வனவில் தாமதம் நிலவுகின்றது. இதற்குப் பொருத்தமான ஏற்பாடுகள் மூலம் காணி கொள்வனவு செய்யப்பட்டதும் குறித்த இடத்தில் சந்தை செயற்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுச் சந்தை செயற்படும்- என்றார். (11)

## கலைஞர், எழுத்தாளர் ஒன்றுகூடல்

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் கலைஞர், எழுத்தாளர் ஒன்றுகூடல் நிகழ்வு காரைநகர் கலாசார மத்திய நிலையத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாரப் பேரவையின் தலைவர் உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை காரைநகர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் ச. தனுஜன் ஆற்றவுள்ளார். தொடர்ந்து சிறப்பு நிகழ்வுகளாக பிரதேச கலாசார அபிவிருத்தி தொடர்பான கருத்துப்பரிமாற்றமும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

எனவே, காரைநகரின் கலைஞர்கள் எழுத்தாளர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நடமாடும் சேவை

வடமராட்சி, ஜுலை 6

பருத்தித்துறை நகரசபை ஆரம்பித்துள்ள நடமாடும் சேவையின் முதல் சேவை முதலாம் வட்டார மான சுப்பர் மடத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

ஆதனவரி, சைக்கிள், மோட்டார் சைக்கிள் உரிமம் புதிய கட்டடங்களுக்கான அனுமதி காணிகளின் உரிமம் மற்றும் உள்ளிட்ட வரியிறுப்பாளர்களுக்குரிய அனைத்துச் சேவைகளும் இந்த நடமாடும் சேவையின் போது வழங்கப்படும் எனப்பருத்தித்துறை நகரசபை தெரிவித்துள்ளது. (173)

## சின்னம்சூட்டும் நிகழ்வு

அளவெட்டி, ஜுலை 6

யாழ்ப்பாணம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் சாரணிய மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்றுக் கல்லூரி மண்டபத்தில் சாரணிய ஆசிரியர் சி.சிவகரன். தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன், சாரணிய மாவட்ட ஆணையாளர் செ.ஜெயபாலன், முன்னாள் மாவட்ட ஆணையாளர் சற்குணராசா ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான சின்னங்களை சூட்டினர். (63)



## சாரணர் இயக்கத்தின் பவளவிழா



யாழ்ப்பாணம், ஜுலை 6

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் சாரணர் இயக்கத்தின் 75 ஆண்டு பவள விழா நிகழ்வுகள் நேற்றுக் காலை 9 மணிக்கு ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமானது.

இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் இ. மகேந்திரன் கலந்துகொண்டார்.

ஆண்டு விழாவின் சிறப்பு நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. இறுதி நாள் நிகழ்வுகள் பாடசாலையின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (7)



## ஆண்டு நிகழ்வும் பொதுக்கூட்டமும்

வட்டுக்கோட்டை, ஜுலை 6

வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணி விநாயகர் கிராம நல்லொழுக்க சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் 30ஆவது ஆண்டு நிகழ்வும் 31ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும் ஜனசக்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தலைவர் சி.குமாரவேலு தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண மகளிர் விவகார சமூக சேவைகள் கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# கடல் தண்ணீரால் உக்கிய தூண்கள் முறிந்து விழும் அபாய நிலையில்


காரைநகர், ஜுலை 6

தொலைப்பேசிச் சேவையை வழங்கக்கடலுக்குள் நிறுவிய தூண்கள் கடல் தண்ணீரால் உக்கிக் காற்று வீசினால் முறிந்து விழும் அபாய நிலையில் காணப்படுவதால் வீதியால் போக்குவரத்தை மேற்கொள்வோர் பாதிக்கப்படுவதாகக்கவலை தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், காரைநகர் பொன்னாலை தொடக்கம் வலந்தலை வரை, சிறிலங்கா டெலிகொம் நிறுவனத்தினர் கடலுக்குள் தூண்களை நிறுவிக் காரைநகருக்குத் தொலைபேசிச் சேவையை வழங்கி வருகின்றனர், கடலுக்குள் நிறுவிய தூண்களில் பல கீழ்ப்பகுதியில் வெடிப்புகள் காணப்படுகிறது. தூண்களுக்கு உள் இருக்கும் கம்பிகள் கடல் தண்ணீருக்குள் ஊறித் துருப்பிடித்து வெடிப்பு உடன் காணப்படுகிறது. வீதிக்குமிக அருகிலே காணப்படும் தூண்கள் பலத்த காற்று வீசினால் முறிந்து விழும் அபாயம் உள்ளது இதனால் வீதியில் போகும் மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண சிறிலங்கா ரெலிகொம் முகாமையாளர் மற்றும் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் நேற்றைய தினம் சிறிலங்கா ரெலிகொம் தொழில்நுட்ப முகாமையாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது "இந்தத் தூண்கள் தொடர்பான முறைப்பாடு கள் கடந்த சில வாரங்களுக்கு முதலே எமக்குக் கிடைத்துள்ளன. குறித்த பகுதிக்கு எமது தொழில்நுட்பக் குழுவினரை அனுப்பி நிலைமைகளை ஆராய்ந்துள்ளோம். மேலும் இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் முகமாக விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" - என்றார் (114)



## நிறுவுநர்தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜுலை 6

யாழ்ப்பாணம் விக்டோரியா கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு அதிபர் ச.சிவகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக அவுஸ்திரேலியா குடிசார் பொறியியல் நிபுணத்துவ ஆலோசகர் விக்ரோறியன் அ.நித்தியானந்த மனுநீதி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட காசநோய்த் தடுப்புச் சங்கத்தின் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்தில் நாளை சனிக்கிழமை மதியம் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் பழைய அங்கத்தவர்கள், புதிதாக இணைய விரும்பும் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு மருத்துவ அதிகாரி சி.எஸ்.யமுனாநந்தாவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாகாணத் தேர்தலில் ஒற்றுமை அவசியம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கூறுகிறார்

வவுனியா, ஜூலை 6

கொள்கைப் பிடிப்புள்ள முதலமைச்சர் வடக்கு மாகாணத்துக்குத் தேவை என்பது உறுதியானது. அதனை சரியாக உணர்ந்து நாம் கொள்கைப்பிடிப்புள்ள பலமான ஐக்கிய கூட்டமைப்பை உருவாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது. மாகாண சபைத் தேர்தலில் பிரிந்து நின்றால் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் சூனியமாவதை எவராலும் தடுக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

வவுனியா, கல்நாட்டினகுளத்தில் நேற்றுச் சுற்றுலா தலம் ஒன்றை திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

வடமாகாணத்தில் உள்ள மூன்று உள்ளூராட்சி மன்றங்களை தவிர அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் நிதிப்பற்றாக்குறை காணப்படுகின்றது. அவற்றுக்கான நிதியை பெற்றுக்கொடுக்க மாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற ரீதியில் முதலமைச்சரிடம் கோரிக்கையை முன்வைத்தாலும் மாகாண சபைக்கான நிதியை கொழும்பு அரசு கடந்த மூன்று வரவு செலவுத் திட்டங்களிலும் குறைத்தே வழங்கியிருக்கிறது. மத்திய அரசின் ஊடாக நிதியை பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே உள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக முதலமைச்சர் நிதியத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கடுமையாக முயற்சிக்கின்றபோதும், கொழும்பு அரசு இது தொடர்பாக எதுவித கருசனையையும் காட்டுவதாகத் தெரியவில்லை. மாகாண சபைக்கான அதிகாரங்களை வழங்குவதற்கு கொழும்பு அரசு நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றவர்களும் அதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை.

அரசு எவ்விதமான அபிவிருத்தி திட்டங்களையும் போரால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்படாத நிலையில் மாகாண முதலமைச்சருக்கு எதிராக இனவாத கருத்துக்களை அரச தலைவர், தலைமை அமைச்சர் உட்பட அமைச்சர்களும் முன்வைக்கின்றனர். வடமாகாண முதலமைச்சருக்கு கூட புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்ற நிலையிலேயே அவர்கள் இருக்கிறார்கள்.

எதிர்வரும் மாகாணசபை தேர்தலில் எந்தக்கட்சி என்ன முடிவெடுக்கிறார்களோ இல்லையோ தமிழ் மக்கள் மீண்டும் வடக்கு மாகாணத்துக்கான முதலமைச்சராக விக்னேஸ்வரனே வரவேண்டும் என விரும்புகிறார்கள். அந்த விருப்பத்தை நிறைவேற்றுகின்ற பொறுப்பு மக்களாகிய ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு அல்லது அதற்கு வெளியே இருப்பவர்கள் ஒரு கொள்கையின் அடிப்படையில் ஐக்கியபட வேண்டிய தேவை இருக்கின்றது. அவ்வாறு இல்லாமல் மாகாணசபை தேர்தலில் பிரிந்துநிற்போமாக இருந்தால் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் சூனியம் ஆவதை யாரும் தவிர்க்க முடியாது. என்றார். (ற-110)

---

### நந்தகுமாரின்...

கிராமத்துக்கான ஆரம்ப நிகழ்வு இன்று துணுக்காயில் நடக்கவுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகார சபை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ நிகழ்வில் கலந்து கொள்வார் என்று முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் கே.கமகே தெரிவித்தார்.

இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு நேற்று மாங்குளத்தில் நடைபெற்றது. அதில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் லக்கி விஜய சாகர பலன்சூரிய மற்றும் மாவட்ட முகாமையாளர் கே.கமகே கருத்துக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் பல வீட்டுத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களின் வீட்டு தேவைகளை நிறைவு செய்துகொள்ளும் வகையில் பல மாதிரி கிராமங்களையும் வீட்டுத் திட்டங்களையும் வடக்கில் முன்னெடுக்க அதிகளவிலான நிதி ஒதுக்கீட்டை அமைச்சர் சஜித் பிரரேமதாசா மேற்கொண்டுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாதிரி கிராம நகர் வடக்கில் போரில் உயிரிழந்த உதவி மாவட்ட செயலரின் பெயரில் அமைக்கப்படுவது இதுவே முதற்தடவை. (ற-ரி3)

### கிளிநொச்சி...

லும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. சில இடங்களில் கரும்புலிகள் தினம் தொடர்பான கையேடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அக்காராயன் குளம் பொலிஸாரும் பிராந்திய பயங்கரவாத தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரும் உளவுத் துறையினரின் உதவியுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன. (5.71)

---

# மகிந்தவுக்கு வழங்கவில்லை மறுக்கின்றது சீன நிறுவனம்

## மேற்குலக நாடுகள் சதி எனவும் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 6

அரச தலைவர் தேர்தலின்போது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு சீனத் துறைமுக நிறுவனம் நிதி வழங்கியது என்று பன்னாட்டு ஊடகங்களால் வெளியிடப்பட்டுள்ள செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று சீனத்துறைமுக நிறுவனம் நேற்றுத் தெரிவித்தது.

கொழும்பிலுள்ள சீனத் தூரகத்தில் அழைக்கப்பட்ட செய்தியாளர்களுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பில், சீனத் தூதரகத்தின் பேச்சாளரும், சீன துறைமுக நிறுவனத்தின் பிரதிநிதியும் இவ்வாறு தெரிவித்தனர்.

அங்கு தெரிவிக்கப்பட்டதாவது

இலங்கையின் முக்கிய அபிவிருத்திப் பங்காளர் என்ற வகையில் போரின் பின்னரான மறுசீரமைப்புக்கும் தேசிய அபிவிருத்திக்கும் சீனா நிதி உதவி உள்ளிட்ட பெரும் ஒத்துழைப்புக்களை வழங்குகின்றது.

இலங்கையில் சீனா முன்னெடுக்கும் திட்டங்கள் இருதரப்பு ஆலோசனைகள், மற்றும் இருதரப்பு நன்மைகளின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கைக்கு நிதி இன்மை, மற்றும் அனுபவம் உள்ள தொழில்நுட்பவியலாளர்களின் குறைபாடு உள்ளது. இலங்கை பன்னாட்டு ஒத்துழைப்பை கோருகிறது. இரு தரப்பு உறவை மதிக்கும் நாடு என்ற வகையில் சீனா அரசானது நிதி உதவியை வழங்குகிறது. அதே போன்று சீன நிறுவனங்கள் தமது திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.


இது இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துகிறது. இலங்கையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கு சீனா உதவி வழங்கும்.

இலங்கைக்கான கடன் உதவி மூலம் சீனா மறைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து நன்மை அடைகின்றது என்று கூறப்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. கடன் பொறி என்ற விவகாரமானது மேலைத்தேய ஊடகங்களில் உருவாக்கப்பட்ட கதையாகும். இதன்மூலம் சீனா இலங்கை உள்ளிட்ட நாடுகளுடன் முன்னெடுக்கும் இணைந்த வேலைத்திட்டங்களை குழப்ப முயற்சிக்கின்றனர். மேலைத்தேய நாடுகளை உலகில் உயர்ந்த நிலையில் வைத்துக்கொள்ளும் பாரம்பரியத்தை முன்னெடுக்கும் நோக்கத்திலேயே இவ்வாறு செய்யப்படுகின்றது.

இலங்கைக்கு தேவையான உதவிகளை அபிவிருத்திக்கான நிதியை சீனா அரசியல் சுயலாபமற்ற முறையில் தொடர்ந்து வழங்கும். இலங்கை அரசுடனும் வர்த்தக சமூகத்துடனும் ஊடகங்களுடனும் பொதுமக்களுடனும் இணைந்து செயற்பட சீனா விரும்புகிறது. என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5.61)

---

# அவமானமே காரணம் மகிந்த கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 6

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியமையால் மேற்குலக நாடுகளுக்கு ஏற்பட்ட அவமானம் காரணமாகவே இவ்வாறான போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் ஊடகப் பிரிவு நேற்று வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

2015ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசதலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு சீனத்துறைமுக நிறுவனம் பெருந்தொகையான நிதி வழங்கியதாகவும் அந்த நிதியில் டீ சேர்ட் மற்றும் வாக்காளர்களுக்கு வழங்குவதற்காக பல்வேறு பரிசு பொருள்களையும் கொள்வனவு செய்ததாக நியூயோர்க் ரைம் குற்றம் சுமத்தியுள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டு 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் வெளிவந்தது.

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் குற்றச்சாட்டு தொடர்பில் உண்மைத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் குறித்து ஊடக சந்திப்பில் கருத்துக்கள் தெரிவித்தமை அச்சுறுத்தல் அல்ல.

மாறாக நாட்டு மக்களுக்கு உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். குற்றச்சாட்டுத் தொடர்பில் கடந்த சனிக்கிழமை நாடாளுமன்ற உறப்பினர் நாமல் ராஜபக்சவின் பதிலளிப்பினை நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை பிரசுரிக்கவில்லை. ராஜபக்சவின் பதிலளிப்பு உரிய வகையில் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அமெரிக்காவின் முன்னாள் அரச தலைவர் பராக் ஒபாமா மற்றும் கிளிண்டன் போன்ற லிபரல் முகாமுக்குள் வாழும் பத்திரிகை தற்போதைய அரசதலைவர் டொனால்ட் ட்ரம்புக்கு கூட நியாயத்தைக் கூற வாய்ப்பளிப்பதில்லை. இவ்வாறானதொரு சூழ்நிலையில் நாம் எவ்வாறு நீதியை எதிர்பார்க்க முடியும்.

இணையத்தளங்களில் வெளிவரும் தகவல்களை மையப்படுத்தி யார் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கமுடியாது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியமையால் ஏற்பட்ட அவமானம் காரணமாகவே இவ்வாறான போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என்றுள்ளது. (ற-5.31)

---

# மகிந்தவின் அரசு தவறு இழைத்தது

## நாமல் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 6

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அரசு சில விடயங்களில் தவறிழைத்தது. அந்த அரசை மக்கள் தோற்கடித்தனர். அந்தப் பிழைகள் தொடர்பில் தற்போது நாம் விழிப்படைந்துள்ளோம். எதிர்வரும் ஆட்சியில் அவற்றைத் திருத்திக்கொண்டு பயணத்தை முன்னெடுப்போம்.

இவ்வாறு தெரித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச.



மகிந்த அணியின் செய்தியாளர் சந்திப்பு பொரளை என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கும் நல்லிணக்க வேலைத்திட்டங்களுக்குமென இலங்கை, மியன்மார், நைஜீரியா ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா 595 மில்லியன் டொலர் நிதி வழங்கியுள்ளது என்று 2016 ஆண்டு வெளியிடப்பட்ட நிதியறிக்கை யொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆட்சி மாற்றத்துக்கே நிதி வழங்கப்பட்டுள்ளது.

மகிந்தவின் அரசைக் கவிழ்ப்பதற்கு பன்னாடுகளிடமிருந்து நிதிபெறப்பட்டுள்ளது. அந்த நிதி யாருக்குக் கிடைத்துள்ளது?, அது எதற்காகச் செலவிடப்பட்டுள்ளது? என்பது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்.

'நியோர்க் ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தியைப் போன்ற செய்தி 2015ஆம் ஆண்டு அரச ஊடகத்தில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அதை அடிப்படையாக் கொண்டே இந்தச் செய்தியை 'நியோர்க் ரைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு பன்னாடுகளுடன் தொடர்புகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தார். சீனா தவிர வேறு நாடுகள் அதற்கு முன்வரவில்லை. சீனா அதற்கு முன்வந்தது. அதனால் சீனாவுக்கு எதிராக இவ்வாறு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. இது மேற்கத்தேய மற்றும் கிழக்கத்தேய நாடுகளுக்கிடையிலான அதிகாரப் போராட்டமாக மாறியுள்ளது. துரதிஷ்டவசமாக இலங்கை சிக்கிக்கொண்டுள்ளது என்றார். (ற5,61)

# இணைய மோசடிகள் இலங்கையில் அதிகம்

*பொலிஸ்மா அதிபர் தெரிவிக்கிறார்*

கொழும்பு, ஜூலை 6
இலங்கையில் தற்போது இணையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற மோசடிகள் அதிகரித்துள்ளன என்று பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர கூறியுள்ளார். கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அலைபேசி மற்றும் கணினிகளைப் பயன்படுத்தி இவ்வாறு மோசடிகள் இடம்பெறுகின்றன. இவை தொடர்பில் பொலிஸ் திணைக்களம் மிகுந்த அவதானம் செலுத்தியுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (4)

# அரசதலைவர் விசாரணை ஆணைக்குழு அவசியம்

*அமைச்சர் கபீர் ஹாஷீம் சபையில் கோரிக்கை*



கொழும்பு, ஜூலை 6
முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் தேர்தல் பரப்புரைக்குச் சீனா நிதி வழங்கியதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டுத் தொடர்பில் அரசதலைவர் விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். அதுமாத்திரமின்றி இது தொடர்பாக நாடாளுமன்றில் விவாதமொன்றை நடத்த வேண்டும் என்று நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாஷிம் நேற்றுமுன்தினம் சபையில் வலியுறுத்தினார்.
நாடாளுமன்றில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சால் முன்வைக்கப்பட்டகட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அரசதலைவர் தேர்தல் நடைபெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச அரசு, சைனா ஹாபர் நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. அதனடிப்படையில் 7.6 மில்லியன் அமெரிக்க டொலர் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.
சீன நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய அம்பாந்தோட்டையில் 50 ஏக்கர்நிலப்பரப்பை வழங்குவதற்கு முன்னையஆட்சியின் போது இணங்கியிருந்தனர். அம்பாந்தோட்டைத் துறைமுகப் பகுதியில் கடற்படையினருக்கோ அல்லது இராணுவத்தினருக்கோ எந்தவிதச் செயற்பாட்டையும் முன்னெடுக்க மாட்டோம் என்பதற்கும் இணங்கியிருந்தனர். இந்த விடயங்கள் தொடர்பில்அரசதலைவர் விசாரணை ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும்.
அது மாத்திரமன்றி கடந்த காலத்தில் இடம்பெற்ற இந்த மோசடிச் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றில் முழுநாள் விவாதம் நடத்தப்பட வேண்டும். விவாதம் நடத்துவது மாத்திரமன்றி அரசதலைவர் விசாரணை ஆணைக்குழுவின் ஊடாக விசாரணையும் முன்னெடுக்கப்பட வேண்டும்.
கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தின் கீழ் 50 ஹெக்டெயர் நிலப்பரப்பைச் சீனாவுக்கு வழங்குவதற்கு முன்வந்தனர். நாம் அதனைத் தடுத்துநிறுத்தினோம். மஹிந்த ராஜபக்ச ஆட்சியின்போது துறைமுக நகரின் முழு உரித்தையும் சீனாவுக்கு வழங்கியது. ஆனால் அதனை தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவே மாற்றி அமைத்தார். அத்துடன் காலி முகத்திடலில் உள்ள இராணுவ தலையகத்தை மகிந்த ராஜபக்ச முழுமையாக சீனாவுக்கு விற்றார் - என்றார். (4.31)

# தாய்லாந்து நாட்டு தலைமை அமைச்சர் இலங்கைக்குப் பயணம்

கொழும்பு, ஜூலை 6
தாய்லாந்து தலைமை அமைச்சர் ஜெனரல் பிரயட் சான்ஓசா இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளார்.
எதிர்வரும் 12 ஆம் திகதி இலங்கைவரும் அவர், நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில், அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரையும் சந்தித்துப் பேசுவார். படைத்தரப்பின் முக்கியஸ்தர்களுடனும் அவர், சந்தித்துப் பேச்சுநடத்துவார் என்று மேலும்தெரிவிக்கப்பட்டது. (4)

# அடுத்த ஆட்சியில் வளங்களைப் பேண புத்திஜீவிகளுடன் நாடு முழுவதும் பேச்சு

*கோத்தபாய ராஜபக்ச தெரிவிப்பு*
*விஜயகலாவையும் கண்டிக்கிறார்*



**கொழும்பு, ஜூலை 6**
**எதிர்காலத்தில் அமையவுள்ள எமது அரசில் தேசிய வளங்களைப்பாதுகாப்பது குறித்தும் நாடு முழுவதும் புத்திஜீவிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தி வருகிறோம். நாட்டை உரிய வகையில் வழி நடத்துவதற்கும் எதிர்பார்த்துள்ளோம் என்று கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.**

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் மாகாண சபை உறுப்பினர்கள் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமை பெறும் நிகழ்வு பத்தரமுல்லையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
அங்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
2005, 2010, 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களிலும் எனது பங்களிப்பை வழங்கியுள்ளேன். எதிர்காலத்திலும் எனது பங்களிப்பை வழங்குவேன். ராஜபக்ச குடும்பத்தினர் ஒன்றாக இணைந்து செயற்படும்குழுவினர். எனவேஎமக்குள் பேதம் இல்லை.
2020ஆம் ஆண்டுநடைபெறவுள்ள அரசதலைவர்தேர்தலில்போட்டியிடவுள்ள வேட்பாளர் தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. முன்னாள் அரசதலைவர் மகிந்தவேஅதனைத்தீர்மானிப்பார். மகிந்த ராஜபக்ச தரப்பில் போட்டியிடுவதற்குப்பொருத்தமானஉறுப்பினர்கள் பலர் உள்ளனர். அதில் மிகப் பொருத்தமானவரையே அவர் களமிறக்குவார்.
பன்னாட்டு ரீதியில் பயங்கரவாத அமைப்பாக அடையாளப்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்திருக்கும் கருத்து அரசியலமைப்பை மீறும் செயல்.
அதையிட்டுக் கவலையடைய வேண்டியுள்ளது. அவருக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (4)

# சி.ஐ.டி. விசாரணையின்பின் உரிய நடவடிக்கை கட்டாயம்

*சபையில் அரசு அறிவிப்பு*

கொழும்பு, ஜூலை 6
'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள தகவல் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணை முடிவடைந்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தலைமை அமைச்சரிடமிருந்து நேரடிப் பதிலைப் பெற்றுக்கொள்வதற்கான கேள்விநேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஆணைக்குழு நியமிக்கப்பட்டது போல் இது தொடர்பிலும் விசாரணை நடத்த ஆணைக்குழு அமைக்கப்படுமா என்று கேள்வியெழுப்பினார்.
அதற்குப் பதிலளித்த ரணில் தெரிவித்ததாவது:
இந்த விவகாரம் குறித்து ரஞ்சன் ராமநாயக்கவால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.
இதையடுத்து விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பை சி.ஐ.டியினருக்குப் பொலிஸார் வழங்கினர். விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவை முடிவடைந்த பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் தெரிவித்துள்ளார். ஆளுங்கட்சியில் இருக்கும்போது லசந்த, பிரகீத் எக்னெலிகொட ஆகியோரைக் கொன்றவர்கள், தற்போது எதிர்க்கட்சியில் இருக்கும்போது அதைவிடப் பெரிய செயல்களில் ஈடுபடுகின்றனர். 'நியூயோர்க் ரைம்ஸ்'ஐத் தாக்குவோம் என்று அச்சுறுத்தல் விடுக்கின்றனர்.
ஜனநாயகத்தை மதிப்பவர்களாயின், மேற்படி அறிவிப்பை இவர்கள் (பொது எதிரணியினர்) மீளப்பெறவேண்டும். உள்நாட்டு ஊடகங்களும் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (4.31)

# சு.க.வின் இரண்டு தொகுதிகளுக்கான அமைப்பாளர்கள் நியமனம்


கொழும்பு, ஜூலை 6
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஹொரவபொத்தான தொகுதிக்கான புதிய அமைப்பாளராக இராஜாங்க அமைச்சர் வீரகுமார திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.
அம்பாறை தொகுதியின் புதிய பெண் அமைப்பாளராக இராஜாங்க அமைச்சர் சிறியானி விஜேவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளார்.
அரசதலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து நேற்றுமுன்தினம் அவர்கள் நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர். (4)

# மேலதிகமாக 3 லட்சம் ஹெக்ரேயரில் இந்தமுறை பெரும்போகச் செய்கை

*அதிகரித்த மழைவீழ்ச்சியால் பயன்*

கொழும்பு, ஜூலை 6
அண்மையில் பெய்த மழை காரணமாக இந்தமுறை பெரும்போகச் செய்கை வழமையைவிட 3 லட்சத்துக்கும் மேற்பட்ட அளவில் அதிகரித்துள்ளது. அதற்கேற்ப தேவையான அளவுஉரங்களைவிநியோகிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவிக்கிறது.
வேளாண்மைச்செய்கையின் அளவு இந்தவருடம் சுமார் 2 லட்சம் என்று முடிவெடுக்கப்பட்டிருந்தது. கிடைக்கும் தண்ணீரின் அளவுக்கு ஏற்ப பயிர்ச்செய்கையின் அளவு மாறுபடும். சில நாள்களாகப் பெய்திருக்கும் அதிக மழை பெரும்போக செய்கையின் நிலப்பரப்பை அதிகரிக்க வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன்படி இந்தமுறை 5 லட்சத்து 38 ஆயிரத்து 399 ஹெக்ரேயர் வரையில் அதிகரிக்க முடியும் என்று விவசாய அமைச்சு தெரிவிக்கின்றது.
இதன் காரணமாக இந்தமுறை பெரும்போக நெல் அறுவடை அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதாக விவசாய அமைச்சின் மூத்த அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.
சில வாரங்களாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக சகல நீர் நிலைகளிலும் நூற்றுக்கு 75, 90 விகிதமான அளவு நீர் நிரம்பியுள்ளன. திட்டமிட்ட அளவைவிட அதிக ஹெக்ரேயரில் வேளாண்மை செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உரம் வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர தேசிய உர பிரிவின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று மூத்த அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.
பெரும்போக நெல் செய்கைக்காக ஒரு மூடை பசளை 500 ரூபாவுக்கு விவசாய மைய நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும். ஏனைய செய்கைகளுக்காக யூரியாப் பசளை ஒரு மூடை குறித்த நிறுவனங்களில் ரூபா ஆயிரத்து 500 க்குப் பெற்றுக் கொள்ளலாம் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)

கேலிச்சித்திரம்




225 மில்லியன் டொலருக்கு

# மத்தல விமான நிலையத்தை கையகப்படுத்துகிறது இந்தியா

**கொழும்பு, ஜூலை 6**
**மத்தல விமான நிலையத்தைக் கூட்டு முயற்சியாக இயக்குவது தொடர்பாக முதற்கட்டப் பேச்சு இடம்பெறவுள்ளது. அதற்காக இந்திய அதிகாரிகள் குழுவொன்று கொழும்புவந்துள்ளதுஎன்றுஇலங்கையின்சிவில்விமானப்போக்குவரத்துப் பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.**

"இதில்70வீதபங்குகள்இந்தியாவுக்கு வழங்கப்படும். 30 வீதத்தை இல்ங்கை வைத்துக் கொள்ளும். இதுதொடர்பில் தற்போது கொழும்பில் தங்கியுள்ளஇந்தியஅரசபிரதிநிதிகளுடன் ஆரம்பக்கட்டப் பேச்சு நடத்தப்பட்டது. இதையடுத்து, விமான நிலை யத்தின் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறுகின்றன. அதன் ஆரம்பமதிப்பீடுகள்முடிந்துள்ளன. இதன்படி, 70வீதபங்குகளை எடுத்துக் கொண்டு இந்தியஅரசு225மில்லியன் டொலரைக் கொழும்புக்கு வழங்கும். இந்தக் கூட்டு முயற்சிக்கான காலம் குறித்துத்தற்போதுவிவாதிக்கப்படுகிறது. இரண்டுதரப்புகளும் இணக்கம் கண்ட பின்னர், இந்த உடன்பாடு அமைச்சரவையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படும்.
கூட்டு முயற்சி இடம்பெற்றாலும், மத்தல விமான நிலையத்தை இந்தியாவுக்கு விற்கும் எண்ணம் அரசுக்குக் கிடையாது"என்றுஅமைச்சர் மேலும்தெரிவித்தார். (4)

## 11 அகதிகளை விடுவிக்குமாறு போராட்டம்

கொழும்பு, ஜூலை 6
மலேசியா, ஜோகூரில் நாடுகடத்தப்படவுள்ள இலங்கை அகதிகள் 11 பேரையும் விடுவிக்குமாறுகோரி ஆர்ப்பாட்டம்நடத்தவுள்ளதாக 'மலேசியன் நண்பன்' செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.
கடந்த 24 ஆம் திகதி கோட்டா டிங்கியிலுள்ள கடற்கரையிலிருந்து சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட 131 பேர் அந்தநாட்டுக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.
அவர்கள் கோட்டா டிங்கி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
120 அகதிகளை நீதிமன்றம் விடுதலை செய்தது. மிகுதி 11 பேரையும்பேகான் நானாஸ் தடுப்பு முகாமுக்கு அனுப்புமாறும் அவர்களை நாடு கடத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. (4)

## கடவுளின் உத்தரவுப்படி வங்கியில் திருடினேன்

நீதிமன்றில் சந்தேகநபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6
"கடவுளின் உத்தரவுக்கு அமைய வங்கியில் திருடினேன்" என்று சந்தேக நபர் ஒருவர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார். இது அங்கு நின்றிருந்தவர்களை ஆச்சரியப்படுத்தியது என்று தெரிவிக்கப்பட்டது.
இரத்தினபுரி நீதிவான் மன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.
அதன்போது,
"கடவுள்கனவில்தோன்றிநீதிமன்றைஉடைக்குமாறுபணித்தார், நான்உடைத்தேன். அதன் பின்னர் வங்கியில் திருடுமாறு பணித்தார். அதன்படி வங்கியில் திருடினேன். இன்று நீதிமன்றிலிருந்து தப்பிச் செல்லுமாறு கடவுளே பணித்தார்." என்று சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.
சந்தேகநபரின் இந்தக்கூற்றின் ஊடாகக்கடந்த ஜூன் மாதம்17ஆம்திகதிநீதிமன்றின்வழக்குப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ள அறை உடைத்தது யார் என்பது அம்பலமாகியுள்ளது. நீதிமன்றின் வழக்குப் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும் அறையை உடைத்து அதில்வைக்கப்பட்டிருந்த கஞ்சா போதைப் பொருள் களவாடப்பட்டிருந்தது.
கிரியல்ல பிரதேசத்தில் அரச வங்கியொன்றில் கொள்ளையிட முயற்சித்தபோது சந்தேக நபரைப்பிரதேசமக்கள்மடக்கிப்பிடித்துபொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.
நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்காகக் கடந்த 3ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்ட போது சந்தேக நபர் தப்பிச் செல்ல முயற்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவது ஆச்சரியமாகவுள்ளது

அமைச்சர் மங்கள கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 6
'நியூயோர்க் ரைம்ஸ்' க்குச் செய்திகளை அறிக்கையிட்ட இரண்டுஇலங்கை ஊடகவியலாளர்களுக்கும்எதிராகவிடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கிறேன் என்று நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இந்த ஊடகவியலாளர்கள் மீது விடுக்கப்பட்டுள்ள அனைத்து அச்சுறுத்தல்களையும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டிய அதேநேரம் மீண்டும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இவ்வாறான தொரு செயன்முறை கட்டவிழ்க்கப்பட மாட்டாதென அவர் உறுதிவழங்கவேண்டுமென்றும் அமைச்சர் மங்களசமரவீர கேட்டுக்கொண்டார்.
குற்றச்சாட்டுக்கள் உடனடியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தவறிழைத்தவர்களுக்கு எதிராக பயமோ பாரபட்சமோ இன்றிஉடனடிநடவடிக்கைகளைச்சம்பந்தப்பட்டஅதிகாரிகள் எடுக்க வேண்டும்.
தமது தொழிலைச் சரிவரச் செய்த ஊடகவியலாளர்கள் மீது ஒன்றிணைந்த எதிரணி மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவைச்சேர்ந்த சில தனிப்பட்ட நபர்கள் திட்டமிட்டுத்தனிப்பட்டமுறையில்விடுத்துள்ளஅச்சுறுத்தல்கள்தன்னைமேலும் குழப்பத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது - என்றுள்ளது. (4)

## குறுஞ்செய்தியால் மாணவர்கள் கைகலப்பு

கொழும்பு, ஜூலை 6
பொல்கொல்ல திறந்த பல்கலைக்கழகத்தில் குறுஞ்செய்தியால் (எஸ்.எம்.எஸ்) மாணவ குழுக்களுக்குஇடையில்நேற்று மோதல்ஏற்பட்டதாகக்கட்டுகஸ்தோட்டப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
குறித்த பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவின் இரண்டாம்வருடமாணவர்கள்இரண்டாகப் பிரிந்துநின்று மோதலில் ஈடுபட்டுள்ளனர்.
சக மாணவ, மாணவியருக்கு இரண்டாம் ஆண்டு மாணவர் அனுப்பிய குறுஞ்செய்தியில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
மாணவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.
பொலிஸ் பதிவுப் புத்தகத்தில் கையொப்பமிட்ட பின்னர் இரு குழுக்களும்பொலிஸ்நிலையத்தைவிட்டு வெளியேறியுள்ளனர்-என்றுபொலிஸார்மேலும் தெரிவித்தனர். (4)

## சரத்தையும் கருணாவையும் ஒப்பிட்டுப் பேசவேகூடாது

சேமசிங்க எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 6
சரத்பொன்சேகாவையும் கருணா அம்மானையும் ஒப்பிட முடியாது. போராட்டத்தின் போதுகருணாஇலங்கை இராணுவத்தினரிடம்சரணடைந்த நிலையில் மறுவாழ்வு அளிக்கப்பட்டதன் பின்னரே அவருக்குக் கடந்த அரசில் கட்சியின், உப தலைவர் பதவி வழங்கப்பட்டது.
இவ்வாறுநாடாளுமன்றஉறுப்பினர் சேஹான் சேமசிங்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
விஜயகலா மகேஸ்வரனது கருத்துத் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தலைமை அமைச்சர் ரணில், 600 பேரைக் கொன்ற ஒருவரைக் கடந்த ஆட்சியில் கட்சியின் உபதலைவராகவும், பிரபாகரனைக் கொன்றவரைச் சிறையில்அடைத்ததுதொடர்பிலும்மறந்துவிடக்கூடாதுஎன்று குறிப்பிட்டுள்ளார்.
அது தற்போதைய அரசியல் நிலைப்பாட்டைத் திசை திருப்புவதாகவே அமைந்துள்ளது.
இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனைப் பதவி நீக்க வேண்டும் என்பது கூட்டு எதிரணியினரது நோக்கமல்ல, அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தற்போது நாட்டில் சட்டம்ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.
வடக்கில் பொதுச்சட்டம் வேறுபட்டநிலைமையில்செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அரசியல் தீர்வுவிடயத்தைமையப்படுத்தி வடக்குகிழக்கு தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் இனவாதக் கருத்துக்களையே வெளிப்படுத்தி அப்பாவி மக்கள் மீது தாக்கம்செலுத்திவருகின்றனர்.
இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க கடந்தகால அரசில் இடம்பெற்ற சம்பவங்களைக் குறிப்பிட்டுத் தற்போதைய நிலைமையைத் திசை திருப்பாது, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்த விஜயகலா மகேஸ்வரனது கருத்துக்குஎதிராகச்சட்டநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே கூட்டு எதிரணியின் நோக்கம் - என்றார். (4)

## கறுப்புப் பட்டியுடன் சபையின் அமர்வு

கொழும்பு, ஜூலை 6
இராஜாங்கஅமைச்சர்விஜயகலாமகேஸ்வரன் தெரிவித்த கருத்தைக் கண்டித்து தலவாக்கலை லிந்துலைநகரசபையின் நேற்றைய மாதாந்தப்பொதுக்கூட்டத்தில் சபைத் தலைவர் கறுப்புப்பட்டி அணிந்து பொதுக் கூட்டத்தை நடத்தினார். இராஜாங்க அமைச்சர் விஜயகால மகேஸ்வரன்யாழ்ப்பாணத்தில்இடம்பெற்றநிகழ்வு ஒன்றில் தெரிவித்த கருத்துத் தொடர்பில் குறித்தநகரசபையின்தவிசாளர்அசோக்கசேபால கறுப்புப் பட்டி அணிந்து மாதாந்தக் கூட்டத்தை நடத்தினார். தவிசாளரின் வேண்டுகோளுக்கிணங்கநகரசபையின் 2 உறுப்பினர்கள்கறுப்புப்பட்டிஅணிந்து சபைக்கு வந்திருந்தனர். (4)

## அழிவுக்குஅழைப்பதாகவே கலாவின் கருத்து உள்ளது

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 6

விடுதலைப்புலிகள்மீண்டும்உருவாக வேண்டும் என்ற, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்து தமிழினத்தை மீண்டும் ஓர் அழிவுக்கு அழைப்பதாகவே அமையும் என்றுநாடாளுமன்றஉறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்விடுத்தசெய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் விஜயகலா கூறியிருக்கும் கருத்துதெற்கிலேகருத்துமோதல்களையும், அதிர்வலைகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. விடுதலைப் புலிகளை மீண்டும் உருவாக்க வேண்டும்என்றவிஜயகலாவின் பேச்சுதெற்கில்உள்ள இனவாதிகளுக்கும், இனவாதத் தீயில் குளிர் காய்வதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும்தரப்பினருக்கும் தேனாக இனிக்கும் செய்தியாக மாறியிருக்கிறது. தெற்கில்இனவாதத்தையேதனதுஊன்றுகோலாக வைத்து எழுச்சிபெற முயற்சி செய்து கொண்டிருக்கும் எதிர்த் தரப்பினருக்கு விஜயகலாவின் பேச்சு ஒரு வரப்பிரசாதமாக மாறியிருக்கிறது.

புலிகள்மீண்டும்உருவாகவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உண்மையாகவே அமைச்சர் விஜயகலா இருப்பதாக இருந்தால், புலிகள் இயக்கத்தின் மூலமாக தமிழ் மக்கள் கடந்த மூன்று தசாப்தங்களில் அடைந்த சுபீட்சம் தான் என்ன? என்பதை அவர் வெளியிடவேண்டும். புலிகளின் போராட்டத்தின் மூலமாகத் தமது உரிமைகளைப் பெறுவதைவிடத் தமிழ் மக்கள் அடைந்த இழப்புக்களே அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும்.

விடுதலைப்புலிகளின்போராட்டத்தால் தமிழ் மக்கள் தமது வாழ்க்கையில்அனைத்தையும்இழந்து நிர்க்கதி நிலைக்கே தள்ளப்பட்டனர். தமிழ் மக்களின் கல்வி, கலாசாரம், பொருளாதாரம் அனைத்தும் அழிந்து சீரழிந்து சின்னாபின்னமானது. புலிகளின் விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களுக்குஎந்தவிமோசனத்தையோ, சுதந்திரத்தையோ வழங்கவில்லை. புலிகளின் போராட்டத்தால் தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினைகளும் தீர்க்கப்படவுமில்லை.

மாறாக, அழிவுகளையும், பின்னடைவுகளையுமே தமிழ் மக்கள் சந்திக்கநேர்ந்தது. எனவேவிஜயகலா மீண்டும் ஒருமுறை புலிகளின் வரவை எதிர்பார்ப்பதும், புலிகளைஆசிர்வதிப்பதும்தமிழினத்திற்குச் செய்யும் மாபெரும் துரோகம். துரதிர்ஷ்ட வசமாக இன்றும் கூட தெற்கிலும், வடக்கிலும் இனவாத அரசியல் கருத்தியலே ஆதிக்கம் பெற்று வரும் நிலை உருவாகியிருக்கிறது.

வடக்கு மாகாண முதலமைச்சர் உட்படசிலதமிழ்அரசியல்வாதிகளின் இனவாதக் கருத்துக்கள் தெற்கிலேசிங்களஇனவாதிகளுக்குப்பிராணவாயுஏற்றிக்கொண்டிருக்கிறது. தென்பகுதி இனவாதிகளின் ஆவேசப் பேச்சுக்கள் நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு அச்சத்தையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தி வருகின்றன. - என்றுள்ளது. (4)

## விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை அவசியம்

### கோருகிறது தேசிய சுதந்திர முன்னணி

கொழும்பு, ஜூலை 6

விடுதலைப் புலிகளின் இயக்கம் மீண்டும்தழைத்தோங்கவேண்டும் என்று குறிப்பிட்ட விஜயகலா மகேஸ்வரனை உடனடியாகப் பதவி விலக்கி, அவருக்கு எதிராக அரசு ஒழுக்காற்று சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம்இடம்பெற்றஊடகவியலாளர் சந்திப்பின்போதே அதன் பரப்புரைச் செயலர் மொஹமட் முஸம்மில் இதனைத் தெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது,

விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்தார்கள். தற்போது அந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது. ஆகவே விடுதலைப்புலிகளின்இயக்கம்மீண்டும் எழுச்சிப் பெற வேண்டும். என்றுபொதுநிகழ்வில்இராஜாங்க அமைச்சர் விஜயகலா குறிப்பிட்டுள்ளமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

தற்போது நாட்டில் காணப்படும் இனநல்லிணக்கத்துக்குஅச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் விதமாகவே அவரது கருத்துக்கள் உள்ளன. வடக்கு, கிழக்கில் தற்போதைய காலக்கட்டத்தில் பல பிரச்சினைகள்தோற்றம்பெற்றுள்ளன. இதற்கு அரசு இதுவரை காலமும் எவ்விதத் தீர்வுகளும் வழங்கவில்லை என்ற விடயத்தைக் கருத்தில்கொண்டுஅவர் இப்பரப்புரைகளை மேற்கொண்டிருந்தாலும் இது தேசியப் பாதுகாப்புக்கு முரணானதாகவே காணப்படுகின்றது.

பொறுப்புள்ளபதவியைவகிக்கும் ஒருஅமைச்சர்இவ்வாறுசெயல்படுவது விடுதலைப் புலிகளின் அமைப்பில்இருந்துபுனர்வாழ்வு பெற்றுவருபவர்களுக்குப்போராட்டத்துக்கான உத்வேகத்தைத் தோற்றுவிக்கும்.

இவருக்கு வழங்கப்படும் தண்டனை பிறிதொருவருக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். இவர் தற்போது வகித்து வரும் பதவி நீக்கப்பட்டு, ஒழுக்காற்று சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டும். அரசு இவ்விடயத்தில் ஒரு போதும் ஒரு தலைப் பட்சமாகச் செயற்படக் கூடாது. ஏனைய விடயங்களில் அதாவது கடந்த அரசுக்கு எதிராகச் செயற்படுவதைப் போன்று துரிதமாகச் செயற்படவேண்டும். (ரி2,61)

# விஜயகலாவை விட்டுவிட்டு ரைம்ஸ் விடயத்தைப் பேசுக



கொழும்பு, ஜூலை 6

**அமைச்சர்விஜயகலாவின்விவகாரத்தை அரசுவிட்டுவிட்டு நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்திக்கு அதிக முக்கியத்துவம் செலுத்த வேண்டும். இவ்வாறு அமைச்சர் தயாகமகே தெரிவித்தார்.**

சமூகநலன்புரிமற்றும்கைத்தொழில் அமைச்சில் நேற்று முன்தினம்இடம்பெற்றநிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக்கருத்துதெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாதபட்சத்திலேயே, விஜயகலா உணர்ச்சிவசப்பட்டு பேசினார். இவ்விடயம்வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அவர் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்.

இராஜாங்கஅமைச்சர்விஜயகலா தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாகக் குறிப்பிட்ட விடயம் அறிந்துகுறிப்பிட்டதல்ல. அவரின் தவறைஅவரேஒப்புக்கொண்டுள்ளார். ஆதங்கத்தைவெளிப்படுத்துவதற்கான வழிதெரியாமலேயே அவ்வாறானதொருவிடயத்தைக் கூறியிருந்தார்.

வடக்கில் காணப்படும் வேலைவாய்ப்புப் பிரச்சினை, மக்களின் தேவைகளை நிறை வேற்றிக் கொடுப்பதற்கான செயல்திட்டங்களை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் பேன்றன அவரின் மனதை பெரிதும் பாதித்துள்ளன.

அந்த ஆதங்கத்தை வெளிக்காட்டும் விதத்திலேயே அவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட செய்தி தொடர்பில் நாடாளுமன்றில் விவா தத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள வேளையில், தற்போது விஜயகலா மகேஸ்வரன் மீது எழுந்துள்ள குற்றச்சாட்டைப் பகடைக் காயாகக்கொண்டுமகிந்த அணிநாடாளுமன்றை அவமதிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

ஆனாலும், மீண்டும் புலிகள் தோற்றம் பெற வேண்டும் எனக் குறிப்பிட்டது, நாட்டின்பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான கருத்தாகும். நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை முன்னாள் அரச தலைவர் மகிந்த தொடர்பாகக் குறிப்பிட்டுள்ள விடயங்கள் நாட்டில்சர்ச்சையைஏற்படுத்தியுள்ளன.

அதேபோன்றுவிஜயகலாமகேஸ்வரன் மீது தற்போது எழுந்துள்ள குற்றசாட்டுக்கள் போன்றவற்றைப்பிரதானமாகவைத்துமகிந்த அணியினர் நாடாளுமன்றத்தை அவமதிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றமை நாடாளுமன்ற சம்பிரதாய கோட்பாட்டுக்கு முரணானதாகவே காணப்படுகின்றது - என்றார். (ரி2,61)

**விஜயகலா விவகாரம்**

## சட்டத்துக்கு முரணானது நடவடிக்கை அவசியம்

### கூறுகிறார் திஸ்ஸ விதாரண

கொழும்பு, ஜூலை 6

விடுதலைப் புலிகள் மீண்டும் வர வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ள கருத்து சட்டத்துக்குமுரணானதாகும். அவர்மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவ்வாறு பேராசிரியர்திஸ்ஸவிதாரணதெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது,

வடக்கில் தற்போது போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதால், சிறுவர் துர்நடத்தைகள் உள்ளிட்ட குற்றச்சம்பவங்களும்அதிகரித்துள்ளது என்று விஜயகலா குறிப்பிட்டுள்ளார்.

போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்க வேண்டுமானால் அதற்கான பிரிவினரே அதனைச் செய்ய வேண்டும். அதற்காக விடுதலைப் புலிகள் மீண்டும் வர வேண்டிய அவசியமில்லை. இதனை அவர் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறானகருத்துக்கள் அரசமைப்புக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் எதிரானவை. சட்டத்துக்கு முரணான கருத்துக்களை முன்வைப்பதனூடாக மக்களைப் பயங்கரவாதத்தை நோக்கி அழைத்துச்செல்லும்செயல்பாடுகள் தலை தூக்க இடமளிக்கக் கூடாது. அரசில்அங்கம்வகிக்கும்மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய மக்கள்பிரதிநிதிகளிடமிருந்து, இவ்வாறான கருத்துக்கள் வெளிப்படுகின்றதென்றால் அதற்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும்.

தற்போது வடக்கில் மட்டுமல்ல அனைத்துப் பிரதேசங்களிலும் போதைப் பொருள் பாவனை, துர்நடத்தைகள் அதிகரித்தேகாணப்படுகின்றன. இவற்றை முற்றாக அழிப்பதற்கான நடவடிக்கையை அரசேமுன்னெடுத்திருக்கவேண்டும்.

ஆனால் தற்போதைய கூட்டரசு மக்களின்எந்தப்பிரச்சினைக்குமே தீர்வுவழங்குவதாக இல்லை.

இவ்வாறான பிரச்சினைகள் எதிர் காலத்தில்ஏற்படாமல்தடுக்கவிரைவில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்என்றார். (ரி2,61)

## மகிந்த நிதி பெற்றதை மறைப்பதாகவே விஜயகலாவின் கூற்று

கொழும்பு, ஜூலை 6

முன்னாள் அரசதலைவர் மகிந்த தொடர்பில் வெளிவந்த செய்தியை மூடி மறைப்பதற்கான முயற்சியே இராஜாங்க அமைச்சர் விஜயகலாவின் விடுதலைப் புலிகள் தொடர்பான கருத்து என்று நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தனதெரிவித்துள்ளார். கம்பஹாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்தெரிவித்ததாவது:

விஜயகலா மகேஸ்வரன் விடுதலைப் புலிகள் தொடர்பில் கூறிய கருத்து அவரின் அரசியல் தேவைக்காக இருக்கலாம். அல்லதுமுன்னாள்அரச தலைவர் மகிந்தவுக்கு எதிராகத் தற்போது எழுந்துள்ள 7.6 மில்லியன் டொலர் தொடர்பான செய்தியைமூடிமறைப்பதற்கான முயற்சியாகக் கூட இருக்கமுடியும்.

விஜயகலா மகேஸ்வரனின் கருத்தைவன்மையாகக்கண்டிக்கின்றேன்- என்றார். (4)

## ரணவீர, மற்றும் விமலுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை

### அவசியம் என்கிறார் அஜித் பி. பெரேரா

நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் குழப்பி, சபாநாயகருக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்ட, பிரசன்ன ரணவீர மற்றும் விமல் வீரவன்சவுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு இராஜாங்க அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில்நேற்றுமுன்தினம் சிறப்புரி மைப் பிரச்சினையொன்றை எழுப்பி உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது,

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் உரையை மையமாக வைத்து நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் குழப்பி, சபாநாயகரைத் தகாத வார்த்தைகளால் திட்டினார். இந்தச் செயற்பாடு மிகவும் கவலை அளிக்கிறது. இதன் காரணமாக நாடாளுமன்றஉறுப்பினர்களினதும், சபாநாயகரினதும்சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் குழப்பி சபாநாயகருக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்ட இருவருக்கும் எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும்-. என்றார். (ரி2,61)

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி யோகராஜா
(வேலணை கிழக்கு)



வேலணையைப் பிறப்பிடமாகவும், நாரந்தனையை புகுந்த இடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி யோகராசா 04.07.2018 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை யோகராசாவின் (நாரந்தனை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், தேனழகன் (பிரான்ஸ்), வேலழகன் (பிரான்ஸ்), புஸ்பலதா (வவுனியா), காலஞ்சென்ற கவிதா ஆகியோரின் அன்புத் தாயும், மேனகா (பிரான்ஸ்), ஜெயமோகன் (அதிபர் - மு/வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுயோ, சுவேதா, சுருதி, திவ்ஜன், திலக்சிகா, திலக்சன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் சிற்றம்பலம் (இந்தியா), சரஸ்வதி (மல்லாவி), பொன்னம்பலம் (நோர்வே), புனிதவதி, கணேசலிங்கம் (கனடா), நடராசா (லண்டன்), யோகேஸ்வரி, மாணிக்கவாசகர் (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, அரசரெத்தினம், றஞ்சி தம்மா, கோபாலபிள்ளை மற்றும் பூமணி, கனகராசா (கனடா), நாகராஜா (கனடா), பரமேஸ்வரன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.07.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் இல.186/39, பாலவிநாயகர் வீதி, 6ஆம் ஒழுங்கை, தவசிக்குளம், வவுனியாவில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 069 1934**
(CS/718011)(11,17)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**சரவணமுத்து விநாயகரட்ணம்**
(ஓய்வுபெற்ற சைவசமய ஆசிரிய ஆலோசகர்)

தோற்றம்
01.08.1937

மறைவு
17.06.2017

பெற்றீர்கள் வளர்த்தீர்கள் பெருமையுடன் பார்த்தீர்கள்
சுற்றம் எல்லாம் போற்றிடவே எம்மை சொகுசாக வாழ வைத்தீர்களே
அப்பா! ஆண்டு ஒன்று கடந்தாலும் உங்கள் நினைவுகள் ஆறவில்லையே
அப்பா! மனைவிக்கு ஏற்ற மனையாளனாய் பிள்ளைகளுக்கு
அன்பான அப்பாவாய் பேரப்பிள்ளைகளுக்கு பாசமான தாத்தாவாக
மாணவர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக சமுதாயத்துக்கு
ஒரு முன்மாதிரியாக நீங்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கைப் பாதைகள்
இன்னும் அழியவில்லை அப்பா! உங்கள் ஆத்மா நித்திய பேரின்ப
பெருவாழ்வு அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.
077 580 7741
(AJA1 13738-13.17)

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குளி குருசோ வீதியில், மகளிர் கல்லூரிக்கு மிக அருகில் வீடு வாடகைக்கு உண்டு.

**076 558 8893**

## வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியில் உள்ள மாடி வீடு விற்பனைக்குண்டு. (07 அறைகளுடன் பெரிய வீடு) நியாயமான விலை கேட்பவர்களுக்கு விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 187 7754**

## பெயர் மாற்றம்

அரசடி வீதி, வடலியடைப்பு பண்டத்தரிப்பில் வசிக்கும் **கு.தங்கலிங்கம்** ஆகிய நான் எனது பெயரை **கு.கனகலிங்கம்** என மாற்றம் செய்கிறேன் எனவும் எனது சகல ஆவணங்களிலும் **கு. கனகலிங்கம்** என ஒப்பமிடுவேண் எனவும் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(es. 14684)(13,17) **கு.கனகலிங்கம்**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை பண்டத்தரிப்பு வீதியில்
**யூனியன் கல்லூரிக்கு மிக அருகில் காணி உடனடி விற்பனைக்கு** உண்டு. நீங்கள் விரும்பிய பரப்பளவின் படி பிரித்துக்கொடுக்கப்படும்.
(தரகர் வேண்டாம்)

**077 690 3287**

## பூசகர் தேவை

**மகா கணபதி ஆலயம், எட்மண்டன், கனடா**

மேற்கண்ட ஆலய குருக்களுடன் சேர்ந்து பூசை செய்ய, ஸ்மார்த்த சம்பிரதாயத்தில் தகுதி பெற்றவரும், இலங்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைமுறையில் உள்ள காமிகம் மற்றும் காரண ஆகம முறையில் தேர்ச்சி பெற்ற ஒரு பூசகரின் சேவை தேவைப்படுகின்றது.

தகுதியுள்ளவர்கள் தங்களைப் பற்றிய விவரங்களுடன், அனுபவங்களையும் கொண்ட விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலம் albertamgsa@gmail.com இற்கு அல்லது தபால் மூலம் **MGSA, P.O.Box 62035, Yellowbird PO,Edmonton AB T6J 4VO. Canada** என்ற விலாசத்துக்கு **ஜுலை 31, 2018** இற்கு முன் கிடைக்கும்படி அனுப்புமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம். மேலதிக விவரங்களுக்கு மேற்குறிப்பிட்ட மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**Board of Trustees,**
Maha Ganapathy Society of Alberta,
Edmonton, Canada,
www.mahaganapathytemple.com

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB **Regional Development Bank**

# பதவி வெற்றிடங்கள்

## களஞ்சிய பற்றுச்சீட்டு (Warehouse Receipt) நிதியிடல் செயற்திட்டம்

## அரச தானிய களஞ்சிய செயற்திட்டம்

நிதி அமைச்சின் களஞ்சிய பற்றுச்சீட்டு (Warehouse Receipt) நிதிக்கருவி செயற்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கபடவுள்ள கிளிநொச்சி மற்றும் பொலன்னறுவை அரச தானிய களஞ்சியங்களிலும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள எம்பிலிபிட்டிய களஞ்சியசாலையிலும் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் தகுதிவாய்ந்த இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

| பதவி | தகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | கிளிநொச்சி | பொலன்னறுவை | எம்பிலிபிட்டிய |
| களஞ்சியசாலை பொறுப்பாளர் | க.பொ.த உ/ த பரீட்சையில் சித்தி<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்ற டிப்ளோமா மேலதிக தகுதியாக கருதப்படும்.<br>களஞ்சியபடுத்தல் சம்பந்தமாக மூன்று (03) வருட அனுபவம்.<br>அறுவடைக்குப் பிந்திய களஞ்சியப்படுத்தல் பற்றிய அனுபவம் விசேட தகுதியாக கருதப்படும்.<br>வயதெல்லை – 35 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும். | 01 | 01 | |
| கணக்கு இலிகிதர் | க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தி<br>கணக்கியல் தொடர்பான அங்கீரிக்கப்பட்ட சான்றிதழ்.<br>உரியதுறையில் 03 வருட அனுபவம்.<br>வயதெல்லை – 28 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும் | 01 | 01 | |
| பட்டியல் இலிகிதர் | க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தி,<br>உரியதுறையில் 02 வருட அனுபவம்.<br>வயதெல்லை – 28 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும். | 01 | 01 | |
| ஆய்வுகூட உதவியாளர் | க.பொ.த.(உ/த) பரீட்சையில் விஞ்ஞான துறையில் சித்தி,<br>உரியதுறையில் 02 வருட அனுபவம்.<br>வயதெல்லை – 28 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும். | 01 | 01 | 01 |
| பாரந்தூக்கி இயக்குனர் (Forklift operator) | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்ற தொழில்சார் நிபுணத்துவ சான்றிதழ்.<br>உரியதுறையில் 02 வருட அனுபவம்.<br>வயதெல்லை – 35 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும். | 01 | 01 | 01 |
| தொழிலாளர் | உரிய துறையில் அனுபவம்.<br>வயதெல்லை – 40 வருடங்களுக்கு் குறைவாக இருக்க வேண்டும். | 02 | 02 | |

**நிபந்தனைகள் :-** விண்ணப்பப் பத்திரங்கள் 2018.07.16 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க வேண்டும்.
அரச தானிய களஞ்சயசாலை அமைந்துள்ள மாவட்டத்தில் நிரந்தர வதிவிடம் உள்ளவாறாக இருக்க வேண்டும்.
வருடாந்த புதுப்பித்தலின் அடிப்படையில் 05 வருட ஒப்பந்த காலத்துக்கு மேற்படி பதவிகளுக்கு இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.
சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பற்றி பேசித்தீர்மானிக்கப்படும்.
விண்ணப்பப் பத்திரம் சமர்ப்பிக்கும் போது விண்ணப்பிக்கும் பதவி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.

**விண்ணப்பப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி,**
**பிரிவுத் தலைவர்,**
**மனிதவள அபிவிருத்தி மற்றும் நிர்வாகம்,**
**பிரதேச அபிவிருத்தி வங்கி,**
**இல.933, கண்டிவீதி, வெதமுல்ல, களனி.**

(IN/9642)(11)



# கரந்தாய்க் காணிகளுக்கு உரித்துடையோர் பதியவும்

## வடக்கு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஜூலை 6**

**தென்னைப் பயிர்ச் செய்கை சபையால் அபகரிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி, கரந்தாய்க் காணிகளுக்குஉரித்துடையமக்கள்அவற்றுக்கானஆவணங்களுடன்வந்துபதிவுகளைமேற்கொள்ளுமாறுவடக்குமாகாணகாணிச்சீர்திருத்தஆணைக்குழுவின்உதவிப்பணிப்பாளர்தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உள்ள வடக்கு மாகாண காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிமனையில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.


1976ஆம் ஆண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் கரந்தாய் மக்களுக்குக் காணிகள் வழங்கப்பட்டன. போரால்அவர்கள்அங்கிருந்துவெளியேறினர். மீண்டும் 2014ஆம் ஆண்டு குடியமர்ந்தனர். அதன் பின்னரும் இங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் 2015ஆம் ஆண்டு அங்கு வந்து தமது காணிகளில் கொட்டில்களை அமைத்துக் குடியிருந்தனர். அந்தக் காணிகள் தெங்கு உற்பத்தி சபையினரால் உரிமைகோரப்பட்டன. அவர்கள் தமக்குச் சொந்தமான காணிகள் எனத் தெரிவித்து அங்கு மீளக்குடியமர்ந்த மக்களை பளைப் பொலிஸாரின் உதவியுடன் விரட்டியடித்தனர்.

இதன்போது பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். தங்களுடையகாணிகளிலேயேஅந்தமக்கள் அத்துமீறிக்குடியமர்ந்தனர்எனதெங்குப் பயிர்ச்செய்கை சபையினரால் கிளிநொச்சிநீதிவான்மன்றில்வழக்குத்தாக்கல்செய்யப்பட்டது. வழக்குவிசாரணைகளில், மக்கள்- தங்களுடையது தான் அந்தக் காணி எனக் கோரும் ஆவணத்தைச் சமப்பிக்குமாறு தெரிவித்து கைது செய்யப்பட்ட அனைவரையும் மன்று விடுவித்தது. விடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவுக்குக்கொண்டுவரப்பட்டது. காணிகள் தொடர்பில் ஆராயப்பட்டன. காணிச் சீர்திருத்த ஆணையாளர் அதுமக்களுடையகாணிதான்என்பதை ஆணித்தரமாகக் கூறினார். தெங்குப் பயிர்ச்செய்கை சபையினருக்கு அந்தக் காணிகளில்இருந்துவெளியேறமாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கால அவகாசம் வழங்கியது. 5க்கும் மேற்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இடம்பெற்றன.

அத்தனை கூட்டங்களிலும் இது தொடர்பில் கதைக்கப்பட்டன. இருந்தும் எந்தத் தீர்வுகளும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. தெங்குப்பயிர்ச்செய்கைசபையினர்மக்களுடையஅந்தக்காணிகளில் தங்களுடைய ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் செலுத்தினர். காணிகளின் தென்னைப்பயிர்களைநட்டனர்.

மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், தெங்கு உற்பத்தி சபை அதிகாரிகள், காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரிகள் உள்ளிட்டோர் ஆணைக்குழுவால்விசாரணைகளுக்குஅழைக்கப்பட்டனர்.

விசாரணைகள் இடம்பெற்றன. விசாரணைகளை அடுத்து தென்னைப் பயிர்ச் செய்கைசபையின்அபகரித்துள்ளகரந்தாய்க்காணிகள்மக்களுடையனஎன்று முடிவு செய்யப்பட்டது. காணிகளை வழங்குவதாகக் காணிச் சீர்த்திருந்த ஆணைக்குழு உறுதியளித்தது. இதன் தொடர்ச்சியாக காணிச் சீர்த்திருந்த ஆணைக்குழுவால்கரந்தாய்க் காணிகளின் அளவீடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தநிலையிலேகாணிகளுக்கு உரித்துடைய மக்களை பதிவு செய்யுமாறுகோரப்பட்டுள்ளது. (எ-21,6)



# கடலட்டை பிடித்த 6 மீனவர்கள் கைது

வடமராட்சி, ஜூலை 6

நாகர்கோவில் கடற்பகுதியில் சட்டவிரோதமாகக் கடலட்டை பிடித்த இரண்டு படகுகளில் வந்த 6 மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் யாழ்ப்பாணம்வடமராட்சிநாகர்கோவில்கடற்பகுதியில்ரோந்துநடவடிக்கையில்ஈடுபட்டிருந்த பருத்தித்துறைக்கடற்படையினரால்இவர்கள்கைதுசெய்யப்பட்டதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 5 மீனவர்கள் மன்னாரையும் ஒரு மீனவர் செம்பியன்பற்று மாமுனையையும் சேர்ந்தவர்என்று கடற்படையினர்மேலும் தெரிவித்தனர்.

இவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்என்றுதெரிவிக்கப்படுகிறது. (எ-173)

# பொருள்கள் களவாடி விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 6


மோட்டார் சைக்கிள் திருத்தும் கடையிலிருந்து களவாடியபொருள்களைவிற்றகுற்றச்சாட்டில்ஒருவரை நெல்லியடி பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணம், நெல்லியடி, கொடிகாமம் வீதியில் அரசடியில் அமைந்துள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் கடையில் கடந்த 6 மாதங்களாகப் பெற்றோல், டீசல் மற்றும் மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் களவாடப்பட்டுள்ளன.

இதுதொடர்பாகஉரிமையாளரால்நெல்லியடிபொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாகப்பல்வேறு கோணங்களிலும்தமது விசாரணைகளை முடுக்கி விட்ட நெல்லியடி பொலிஸார் நேற்றுமுன்தினம்பளைபகுதியில்வைத்துமோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் விற்ற ஒருவரைக் கைது செய்தனர்.

அவரிடம்மேற்கொள்ளப்பட்டமுதற்கட்டவிசாரணையில், குறித்தநபர்குறித்தமோட்டார்சைக்கிள்திருத்தும் கடையில்சில மாதங்களாகப் பணிபுரிந்து கடந்த ஒரு வருட காலமாக கடைக்குச் செல்லாது இடைவிலகி உள்ளமையும் அதன் பின்னர் இரவு 10 மணிக்கு பின்னர் கடையின் சீற்றை நகர்த்தி உட்புகுந்து பொருள்களைக்களவாடிகிளிநொச்சி மற்றும்பளை பகுதியில் விற்பனை செய்தமையும் தெரிய வந்துள்ளது. (எ-422)





# பிரதேச செயலகத்தில் புத்தாக்க முறையில் பயிர் வளர்ப்பு

சாவகச்சேரி, ஜூலை 6

தென்மராட்சிப்பிரதேசசெயலகவளாகத்தில் புத்தாக்க முறையில் வளாகத்தில் இருந்த பயன்படுத்தப்படாத பொருள்களைப் பாவித்து அவற்றில் பயிர்ச்செடிகளைஉருவாக்கியுள்ளார் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உதவிப் பிரதேசசெயலர். தென்மராட்சிபிரதேச செயலகம் யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் அமைந்துள்ளது. சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு உதவிப் பிரதேசசெயலராகவினோஜிதாகணேசநாதன் கடந்த மாதம் 7ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

மூலிகைச்செடிகள், பயிர்ச்செடிகளை வளர்ப்பதில் ஈடுபாடு கொண்ட இவர் புத்தாக்கசிந்தனையாக இவ்வாறான முறையில் பயிர்களை நட்டுப் பராமரிக்கின்றார். பிரதேச செயலகத்தில் பயன்படாமல் உள்ள மிகச் சிறிய இடங்களைப்பயன்படுத்திபயிர்களை நட்டுவருகின்றார். அங்குகாணப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம் வைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் மேற்பகுதியில் மணல் போட்டு சுற்றி வர தண்ணீர்ப் போத்தல்களில் ஈரமணல் போட்டு அடைத்து பாதுகாப்பை ஏற்படுத்தி கீரை விதைகளை விதைத்துள்ளார். அவை வளர்ந்து காணப்படுகின்றன. அத்துடன் அங்கு பழுதடைந்த நிலையில்காணப்பட்ட முகம்கழுவும்தொட்டிகளில் வெங்காயம் நட்டுள்ளார். அவையும் வளர்ந்துள்ளன. (எ-9)

# வவு. வளாக மாணவர்கள் எவரும் மொட்டையடிப்புத் தொடர்பில் முறைப்பாடு செய்யவில்லை

## வளாக முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

பல்கலைக்கழகத்தில் மொட்டையடிப்பு விடயம்தொடர்பாகஇதுவரையில்மாணவர்கள் எவரும் எமக்கு முறைப்பாடு வழங்கவில்லை. அதனால் நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுப்பதில் பெரும் சிக்கலாக உள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் ரி. மங்கலேஸ்வரன் தெரிவித்தார். இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகசந்திப்பொன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 28ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்கள் மொட்டையடிக்கப்பட்ட விடயம் தொடர்பாக ஊடகங்கள் வாயிலாக நாம் அறிந்தோம். ஆனால் மாணவர்கள் எமக்கு எந்தவித முறைப்பாடும் அளிக்கவில்லை. ஊடகங்களில்வந்தசெய்தியின்மூலமாகவே மனித உரிமைகள் ஆணைக்குழு எம்மை விசாரணை செய்யுமாறு பணித்தது.

அதன்பிரகாரம் எமக்கு முறைப்பாடு வராததன் காரணமாக 2ஆம் வருட பிரயோக விஞ்ஞான பீட மாணவர்கள் அனைவருக்கும் வகுப்புத் தடை விதித்தோம். அத்துடன் மனித உரிமை ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறோம்.

இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் எமக்கு முறைப்பாடுகளை வழங்காது ஊடகங்களுக்கு உடனடியாக தெரியப்படுத்தி விடுகிறார்கள். ஊடகங்கள் எமது தரப்பை கேட்காமல்செய்திகளைபிரசுரிப்பதால்பல்கலைக்கழகத்துக்கு அபகீர்த்தியான ஒரு நிலமை உருவாகின்றது.

சில விசாரணைகளை மேற்கொள்ள முயற்சிக் கும்போது முறைப்பாடு செய்தவர்கள் சமூகம்அளிக்காமையால்விசாரணையை தொடரமுடியாத சூழ்நிலையும் இருக்கிறது.

இந்தவிடயம்தொடர்பாகவகுப்புதடைவிதிக்கப்பட்டமாணவர்களுக்கானகல்விநடவடிக்கைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. மாணவ பிரதிநிதிகள் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு எம்மிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எனவே அது தொடர்பாக பிரயோக விஞ்ஞான பீடத்துடன் கலந்துரையாடி கல்வி நடவடிக்கைள்ஆரம்பிப்பதுதொடர்பாகஅறிவிக்கவுள்ளோம்.

மேலும் புத்தர் சிலை விவகாரம் தொடர்பாகவும் எமது கல்விசார் ஊழியர்கள் மற்றும் வேறு பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களையும்இணைத்துவிசாரணைநடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாதத்துடன் குறித்தவிசாரணை முழுமைபெறவுள்ளது- என்றார். (எ-110)

# ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வடக்கு ஆசிரியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 6

**வடக்கு மாகாணத்தின் ஆசிரியர்கள் நியமனம் தொடக்கம் இடம் மாற்றம், பாடசாலைநிர்வாகத்துக்குள்இடம்பெறும்பிரச்சினைகள், மனஅழுத்தங்கள்எனப் பலவற்றால்பெரும்பிரச்சினைகளைஎதிர்கொள்கின்றனர். எனவேகல்விஅமைச்சு இது தொடர்பில் தலையிட்டு ஆசிரியர்களின் சுதந்திரமான கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு வழியேற்படுத்த வேண்டுமென ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.**

இதுதொடர்பில்பாதிக்கப்பட்டஆசிரியர்கள் உதயனுக்குத்தெரிவித்ததாவது:

ஆசிரியர்கள் கல்வி அமைச்சால் நியமிக்கப்படுகின்றனர். நியம னத்தின் போது குறித்த ஒரு துறையை கற்பிப்பதற்கு என்று நியமனங்கள் வழங்கப்பட்டாலும் பாடசாலைகளில் அந்த சூழ்நிலைகாணப்படாமையால்வேறுஒரு துறைசார்ந்தபாடத்தைகற்பிக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதைத் தவிரவும் சில பாடசாலைகளில்ஒருஅபிவிருத்திநடவடிக்கையை முன்னெடுப்பதற்குஆசிரியர் ஒருவர் முன்வருவாரேயானால் பாடசாலைச்சமூகத்தால்எதிர்ப்புகள்உண்டாகி இதனாலும் ஆசிரியர்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர்.

பாடசாலையின் வளப் பற்றாக் குறை காரணமாக சில துறைகளில் செயன்முறைப் பாடங்களை முழுமையாக மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

அதி கஸ்டப் பிரதேசங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படும்போது அவர்களின் நிலைகளை யாரும் கண்டு கொள்வதில்லை.

ஒருபாடத்துக்குஆசிரியர்கள்இல்லாத காரணத்தால்வேறுதுறைசார்ந்தஆசிரியர்கள் அதை கற்பித்துத் தான் ஆக வேண்டும் என்றநிலைக்குதள்ளப்படுகின்றனர். ஆகவே கல்வி அமைச்சு எடுத்துள்ள ஆசியர்களின் பிரச்சினைகள் தீர்க்கும் செயற்றிட்டத்தில் இந்தப் பிரச்சினைகளும் கருத்தில் கொள்ளப்படவேண்டும் - என்றனர்.

இது தொடர்பில் மாகாணக் கல்வி அமைச்சு, "வடக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இடம் மாற்றம், சம்பளம், பாடசாலையின் நிலை போன்ற காரணிகளால் கற்பித்தல் நடவடிக்கைகளை சீராகமேற்கொள்ளமுடியாமல்உள்ளனர்.

அவர்களின்பிரச்சினைகள்தொடர்பில் ஆராயப்படவுள்ளது. ஜி.சி.ஈசாதாரண தர மாணவர்களின் பரீட்சைப் புள்ளிகள் வலய மட்டத்தில் ஆராயப்படவுள்ளன. இதற்காக சிறப்புக்குழு வலயக் கல்விப் பணிமனைக்கு வருகை ஒன்றைமேற்கொள்ளவுள்ளது. மாணவர்களின்பிரச்சினைகள்தீர்க்கப்படும் போது ஆசிரியர்களின் பிரச்சினைகளும் கேட்டறியப்படவுள்ளன.

ஆசிரியர்கள் தமது பிரச்சனை தொடர்பில் வலயக் கல்விப் பணிமனைக்குத் தெரிவிக்க முடியும்.

பொதுவான பிரிச்சினைகள் மற்றும் நடைமுறையில்உள்ளபிரச்சினைகள் உரியவகையில்தீர்த்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளது. (எ-7)

# புலிகள்போன்று எம்மால் நீதி வழங்கவே முடியாது

## யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ,ஜீலை 6

வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்கிய தண்டனைபோன்று துப்பாக்கிச்சூடு நடத்தி தண்டனை வழங்கமுடியாது எமக்கென நீதி முறை ஒன்று உள்ளது. அதனடிப்படையில்தான் நாம் எமதுபணிகளைமுன்னெடுக்க முடியும்.

ஆனாலும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் வன்முறைகளுக்கு மிக விரைவில் முற்றுப்புள்ளி வைப்போம் என யாழ்ப்பாணப்பிரதிப்பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோதெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் அதிகரித்துள்ளன. குறித்த வன்முறைச் சம்பவங்களில்ஈடுபடுபவர்களைக் கைதுசெய்வதற்கும், வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும்நிலையிலேயே மேலதிகமாக 100 பொலிஸாரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்துள்ளோம்.

வன்முறைகளில் ஈடுபடுபவர்களைக் கைது செய்து சட்டநடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும். அதன் மூலமே அவர்களுக்குத் தண்டனைவழங்கவேண்டும். வடக்கில் ஆவா குழு என்று ஒரு குழு இல்லை. அவ்வாறான குழுக்கள் இயங்குவதற்கும் நாம் அனுமதிக்க மாட்டோம். இருப்பினும்அரசியல்வாதிகளும் ஊடகங்களும் ஆவாக் குழு இயங்குவதாகக்கூறிவருகின்றனர்.

பாடசாலைகளில் கல்வி கற்றுவிட்டு வேலையற்று இருக்கும் குறிப்பாக வெளிநாடுகளில் உறவினர்கள் வதியும் இளைஞர்களே தமக்கிடையே வாள்வெட்டுக்களில்ஈடுபட்டுவருகின்றனர். குறித்த இளைஞர்களை நாம் இனங்கண்டுள்ளோம். இந்த விடயத்துக்கு நாம் விரைவாக முற்றுப்புள்ளிவைப்போம். யாழ்ப்பாணத்தில் நிலவும் வன்முறைக்கலாசாரத்தை இரண்டு வாரத்துக்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம். எனவே பொது மக்கள் பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார். (எ-106)

# கொக்குகளை பிடித்துக்கொன்ற நபருக்குப் பிணை

வடமராட்சி, ஜீலை 6

நாகர்கோவில் களப்பில் அழிந்து வருகின்ற அரியவகைக் கொக்குகளைப் பிடித்து அவற்றைக் கொன்ற நபரை பிணையில் விடுவித்தது பருத்தித்துறை நீதிமன்று.

யாழ்ப்பாணம் வடமராட்சி நாகர்கோவில் பகுதி களப்பில் வந்த தங்கிநின்ற குறித்த கொக்குகளை வலைபோட்டு பிடித்த 32 வயதுடைய நபரையும் 27 கொக்குகளையும் நேற்றுமுன்தினம் பொலிஸார் கைதுசெய்தனர். அவை அரியவகைக்கொக்குகள்எனப்பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 5ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் ஒரு லட்சம் ஆள்பிணையிலும் விடுவிக்கப்பட்டார். வழக்கு வனஜீவராசி கள்திணைக்களத்தின்அறிக்கைக்காக எதிர்வரும் 12ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-26)






# வவுனியா இளைஞர் கின்னஸ் சாதனை

யாழ்ப்பாணம்.,ஜீலை 6

வவுனியாவைச் சேர்ந்த கனகேஸ்வரன் கணேஸ்வரன் என்ற தமிழ் இளைஞர் கின்னஸ் சாதனை படைத்துள்ளார். அதிக நீளமான மின் இணைப்புப் பொருத்தியைப் படைத்தே உலக மட்டத்தில் சாதனைப் படைத்ததோடு வவுனியா மாவட்டத்தின் முதலாவது சாதனையாளன் என்றபெருமையையும் பெற்றுள்ளார். இவர் வவுனியாத் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவனும் இயந்திரவியல் பொறியியலாளருமாவார்.

மேற்படிசாதனை முயற்சிவவுனியாத் தமிழ் மத்தியகல்லூரிமண்டபத்தில் கல்லூரியின் அதிபர் எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்றது. அதன்போது, 2.914 மீற்றர் நீளமும், 0.074 மீற்றர் அகலமும், 0.050 மீற்றர் உயரமும் கொண்ட நீள் மின் இணைப்புப்பொருத்தியைத்தயாரித்துஇன்றுசாதனைபடைத்துள்ளார். சாதனையாளரை அவரதுவீட்டுக்குச்சென்றுநேரில்சந்தித்துவாழ்த்துத் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம். இந்தச் சந்திப்புநேற்று இடம்பெற்றது. (எ)

# முன்னாள் போராளி தொடர்பான திரைப்படத்துக்குப்பன்னாட்டுவிருது




கிளிநொச்சி ,ஜீலை 6

'சினம் கொள்' என்ற ஈழம் தொடர்பான திரைப்படத்துக்குச் சிறந்த அறிமுகத்திரைப்படத்துக்கான கல்கத்தா பன்னாட்டு திரைப்பட விருது கிடைத்துள்ளது.

பூதிரைப்படத்தில்இயக்குநர்சசியுடன்உதவிஇயக்குநராகப் பணி புரிந்த கனடாவாழ் இலங்கைத் தமிழரான ரஞ்சித் ஜோசேப் இந்தத்திரைப்படத்தை இயக்கியுள்ளார்.

படத்துக்கானவசனங்களையும்பாடல்களையும்ஈழத்தைச் சேர்ந்தகவிஞர்தீபச்செல்வன்எழுதியுள்ளார். 'தென்மேற்குப் பருவக்காற்று' திரைப்படம்புகழ்என்.ஆர். ரகுநந்தன் இசை அமைத்துள்ளார். 'ஆண்டவன் கட்டளை' படத்தில் விஜய் சேதுபதியுடன்இலங்கைக்கதாபாத்திரத்தில்நடித்தஅரவிந்த் நாயகனாகவும் அவருக்கு ஜோடியாக புதுமுகநாயகி நர்வினிடெரிநடித்துள்ளார். விடுதலைப்புலிகளின்முன்னாள் போராளி ஒருவரின் வாழ்க்கை மற்றும் நிகழ்கால ஈழம் குறித்ததாகஇந்தப்படம்அமைந்துள்ளது. விருதுவழங்கும் நிகழ்வுஅண்மையில்இந்தியாவில்நடைபெற்றது. (எ-35)

# பனை அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜீலை 6

பனை அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் ஆரம்ப நிகழ்வும்முதலாவது குழுக்கூட்டமும் இணைத்தலைவர்களான பனை அபிவிருத்திச்சபை தலைவர் ஆர். சிவசங்கர், வடமாகாணக்கூட்டுறவுஆணையாளர்பொ. வாகீசன் ஆகியோரின்,தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையின்தலைமைஅலுவலகத்தின் மேல் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணியளவில் நடைபெறவுள்ளது என்று ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளர் எஸ். ஸ்ரீவிஜீந்திரன் தெரிவித்துள்ளார். (எ)

# புதிய தேர்தல் முறைமையால் சிறுபான்மையினருக்கு ஆபத்து

## உதுமாலெப்பை தெரிவிப்பு



**கொழும்பு,ஜூலை 6**

**சிறுபான்மையினரின் இருப்புக்குக் கெடுதல் விளைவிக்கும் மாகாணசபையின்புதியதேர்தல்முறைமைக்கு,சிறுபான்மையினக்கட்சிகளின்தலைவர்களும்ஆதரவுவழங்குவதானதுவேதனையாகவுள்ளது.இவ்வாறுகிழக்குமாகாணசபையின்முன்னாள் அமைச்சரும், தேசிய காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.**

மாகாண சபைகளுக்கான புதிய தேர்தல் முறைபற்றி 'ப்வ்ரல்' அமைப்பின் ஏற்பாட்டில், திருகோணமலையில், இடம்பெற்றவடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடலில்கருத்துதெருவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

மாகாண சபைகளுக்கான புதிய தேர்தல் முறையினால் சிறு பான்மையினருக்கு அதிகளவில் பாதிப்பும், ஆபத்தும் ஏற்படுவதற்கான நிலைகாணப்படுகின்றது. வடக்கு கிழக்கு மாகாண மக்களின் இனப் பிரச்சினைக்குத் தற்காலிகத் தீர்வாக இலங்கை, இந்தியஒப்பந்தத்தினால்உருவாக்கப்பட்டமாகாண சபைத்தேர்தல்முறைமை, வடக்கு கிழக்கில் நடைபெற்ற போரினால் துரதிஸ்ட வசமாக செயற்படுத்த முடியாதநிலைமைஏற்பட்டது.

நமது நாட்டிலுள்ள 9 மாகாண சபைகளில்7மாகாணசபைகளை ஒரு விதமாகவும், வடக்கு கிழக்கு மாகாண சபைகளை வேறுவிதமாகவும் கொழும்பு அரசு செயற்படுத்தும் நிலைமை மாற வேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டிய அதிகாரங்களைக்கொழும்பு அரசிடமிருந்து பெறுவதற்கு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டுமூன்றுவருடங்களாகியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

சிறுபான்மை மக்களின் கவனங்களை வேறு திசைக்குத் திருப்பும் நோக்குடன் புதிய உள்ளூராட்சித் திருத்தச் சட்டத்தையும், மாகாண சபைகளுக்கான புதிய திருத்தச் சட்டத்தையும் அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்கான ஆதரவைத் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளின் ஆதரவுடன் நிறைவேற்றியுள்ளனர்.

புதிய வட்டார முறையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் முறைமையினால்வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் வாழும்தமிழ், முஸ்லிம்மக்களின் பிரதிநிதித்துவங்களில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

புதிய முறையிலான உள்ளூராட்சித் தேர்தல் முறைமையைக் கொண்டு வந்தவர்களே உள்ளூராட்சித்தேர்தல்முடிந்தகையோடு புதிய தேர்தல் முறையை இரத்துச் செய்து பழைய முறையிலையே உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவது என தெரிவித்துள்ளனர்.

புதிய முறையிலான மாகாண சபைத் தேர்தல் நமது நாட்டில் நறைபெறுமானால் வடக்கு, கிழக்குமாகாணங்களுக்குவெளியில் வாழும் முஸ்லிம், தமிழ், மலையகசமூகங்களின்மாகாண சபைப் பிரதிநிதித்துவங்களில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. குறிப்பாக 18 மாவட்டங்களில்வாழும்முஸ்லிம் சமூகத்தின் மாகாண சபை பிரதிநிதித்து வங்களை இல்லாமல் செய்யும்நிலைமை உருவாகும்.

இதற்கான முழுப் பொறுப்பையும் முஸ்லிம்சமூகத்தின்மக்கள்பிரதிநிதிகள் பொறுப்பேற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. என்றார். (ரி2)

# அரசியல் அநாதைகளாகும் ஆபத்தில் முஸ்லிம் மக்கள்

கொழும்பு, ஜூலை 6

மாகாண சபைத் தேர்தல் புதிய முறையின்கீழ் நடத்தப்படுமானால்முஸ்லிம்கள்அரசியல்அநாதைகளாகி நடுத் தெருவுக்குச் செல்லும் அவல நிலை ஏற்படும். அத் தேர்தலை தற்போதுள்ள முறைமையின்கீழ்நடத்தவேண்டும் என்று நாம் அரசை வலியுறுத்தி வருகிறோம்.

இவ்வாறு சுகாதார, போசனை மற்றும் சுதேச மருத்துவப் பிரதி அமைச்சர் பைஸல் காஸிம் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத்தேர்தல்உடனடியாகநடத்தப்படவேண்டும்என்று கூறப்பட்டு வருவது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

மாகாண சபைத் தேர்தல் தற்போதையமுறைமையின்கீழ்நடத்தப்பட வேண்டும் என்று ஒரு சாராரும், புதிய முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்று இன்னொரு சாராரும் கூறி வருகின்றனர்.

புதிய முறைமை முஸ்லிம்களுக்குப் பேராபத்தைத் தரும். முஸ்லிம்களை அரசியல் அநாதைகளாக மாற்றி நடுத் தெருவுக்குத் தள்ளிவிடும். இந்த ஆபத்தான புதிய முறைமையை எம்மால் ஒருபோதும் ஆதரிக்க முடியாது.

ஜேவிபியினர் தமது அரசியல் நலன்களை அடிப்படையாகக் கொண்டு புதிய தேர்தல் முறைமைக்கு ஆதரவு வழங்குகின்றனர். தோல்வியடையும்கட்சிக்குப் புதிய முறைமை அதிக நன்மைகளை வழங்கும். இது ஜேவிபிக்கேபொருத்தமானமுறைமையாக அமையும்.

புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைமை எப்படி வென்ற கட்சியைத் தோல்வியடைந்த கட்சியாக மாற்றி, தோல்வியடைந்த கட்சியைவெற்றிபெறச்செய்ததோ அதேபோன்றதொரு ஆபத்தான நிலைமையையேபுதியமாகாண சபை முறைமையும் செய்யும். இது உண்மையில் பெரும் அநீதியாகும்.

உள்ளூராட்சித்தேர்தல்முடிவுகள் இந்த அநீதியையே இழைத்தன. நிலைமை இப்படி இருந்தால் மக்கள் நம்பி வாக்களிக்கமாட்டார்கள். நாம்எந்தத்தீர்ப்பைவழங்கினாலும் அது மாற்றப்படும் என்று அஞ்சுகின்றனர். இதனால் உள்ளூராட்சி சபை முறைமையை ஒத்த புதிய மாகாண சபை முறைமையை மக்கள் எதிர்க்கின்றார்கள். நாம் அளிக்கும் வாக்குகள் எம்மைஅரசியல்அநாதைகளாக மாற்றி நடுத் தெருவுக்குக் கொண்டுவந்துவிடும்.

இந்த ஆபத்தில் இருந்துநாம்தப்ப வேண்டுமானால் தற்போதைய முறைமையின்கீழ்தேர்தல்நடத்தப்படவேண்டும். எமதுஅரசியல் பிரதிநிதித்துவத்தைத் தக்க வைப்பதன் ஊடாக எமது அரசியல் உரிமையைப்பாதுகாக்கவேண்டும். என்றார். (ரி2)

# கட்சிகளின் இணக்கமின்மையே தேர்தல் தாமதத்துக்குக் காரணம்

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

மாகாணசபைத் தேர்தலைப் பிற்போட வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை. எந்தத் தேர்தல் முறைமைக்குஅமையமாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்பதில், கட்சிகள் மத்தியில் ஒருமித்த நிலைப்பாடு காணப்படாதமை சிக்கலாக உள்ளது. ஒருமித்த நிலைப்பாடு எட்டப்பட்டால் தேர்தலைநடத்தத் தயார்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் மாகாணசபைத் தேர்தலை, ஏன் அரசு இழுத்தடிக்க முயற்சித்து வருகின்றது? என்று மகிந்தஅணிகேள்விஎழுப்பியது. அதற்குப்பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் புதிய தேர்தல் முறைமையை கையாண்டதன் மூலமாக சில நிலையற்றதன்மைகளுக்குநாம் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இதுமாகாணசபைத்தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடாது. எனினும்தேர்தல்நடத்தப்பட வேண்டும் என்ற முயற்சிகளைத் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார். எந்த முறையில் தேர்தல் நடத்துவது என்பது குறித்து சகல கட்சிகள் மத்தியிலும் ஒருமித்த நிலைப்பாடு இல்லை.

சில கட்சிகள் பழைய முறைமையில்தேர்தலைநடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளன. சிலர்எந்தமுறையில் தேர்தலை நடத்துவது என்ற தீர்மானத்தை இன்னும் எட்டவில்லை.

நாடாளுமன்றத்தேர்தலைப்புதிய முறையில்நடத்துவதில்சிக்கல்கள் உள்ளன.

காலத்தைக் கடத்த வேண்டும் என்ற நோக்கம் எமக்கு இல்லை, உரியநேரத்தில்தேர்தலைநடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் நாமும் உள்ளோம். அடுத்த வாரம் கட்சித் தலைவர் கூட்டம் கூடி அதில் இணக்கம் கண்டால் தேர்தலைநடத்தமுடியும். முரண்பட்டால்என்னால்ஒன்றும்செய்ய முடியாது.

தேர்தலைநடத்த வேண்டும் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய தேசிய முன்னணியும் தீர்மானம் எடுத்துள்ளன. ஏனைய கட்சிகள்தீர்மானம்எடுக்கவேண்டும். நாடாளுமன்றத்தேர்தலிலும் கட்சிகளுக்கிடையில், இணக்கப்பாடு இல்லை நாடாளுமன்றத் தேர்தலைப் பழைய முறைமையில் நடத்தும் போது மாகாணசபைத்தேர்தலைஏன்புதியமுறையில் நடத்த வேண்டும்? பழைய முறையில் நடத்தலாமே என்ற கேள்வியைப் பலர் கேட்கின்றனர்.

மாகாணசபைத் தேர்தல் குறித்து இன்றுவிவாதம்நடத்தப்படவுள்ள நிலையில்ஏனையபிரச்சினைகள் குறித்தும் முழுமையாக ஆராய வேண்டிய தேவை உள்ளது.

கட்சித்தலைவர்கள்அனைவரும் ஒரே நிலைபாட்டைத் தெரிவித்தால்தேர்தலைநடத்தநாம்தயார். இல்லையேல்எம்மீதுபழிசுமத்த வேண்டாம். என்றார். (ரி2,61)

# மகிந்த அணிக்கு எதிர்க்கட்சி அந்தஸ்தைவழங்கமுடியாது

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிகள் போட்டியிட்டுதெரிவுசெய்யப்படும் அடிப்படையிலேயே எதிர்க்கட்சி அந்தஸ்துவழங்கப்படும். திடீரென இடைநடுவில் ஒரு கட்சியிலிருந்து விலகி செயற்படுகின்றனர். என்பதற்காக எதிர்க்கட்சி அந்தஸ்தை வழங்க முடியாது. இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ராஜிதசேனாரத்னதெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்தஅமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்சந்திப்பில்ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மகிந்த அணி நாடாளுமன்றத்தில்எதிர்க்கட்சித்தலைவர்பதவியைக் கோருகின்றதே என கேள்விஎழுப்பப்பட்டது. அதற்கு அமைச்சர்தொடர்ந்துபதிலளிக்கையில்,நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிகள் எவ்வாறு போட்டியிட்டுநாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனவோ, அந்த அடிப்படையிலேயே எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்கப்படும். மாறாகஇடைநடுவில்ஒருசிலர்கட்சியிலிருந்து விலகி தனிக் குழுவாக இயங்குகின்றனர் என்பதற்காக எதிர்க்கட்சி அந்தஸ்தை வழங்க முடியாது. அப்படியாயின் அவர்கள் அடுத்த தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு வந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோரட்டும் என்றார். (ரி2,31)

# அகில இலங்கைத் தமிழ்மொழித்தின இறுதிப் போட்டித் திகதிகள் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

2018ஆம்ஆண்டுக்கானஅகிலஇலங்கைத்தமிழ்மொழித்தினஇறுதிப்போட்டிகளுக்கானதிகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, யூலை மாதம் 14,15 ஆம் திகதிகளில் கல்வியமைச்சிலும் 21,22ஆம்திகதிகளில்கொழும்புபம்பலபிட்டிஇந்துக்கல்லூரியிலும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

போட்டிகள் தொடர்பான மேலதிக அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ள, காலை 08.30 தொடக்கம் மாலை 04.30 வரையான அலுவலகநேரத்தில்0112784176என்றதொலைபேசிஇலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கல்வி அமைச்சின் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

# பல இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த இருவர் கைது

கொழும்பு,ஜூலை 6

வேலை வாங்கித் தருவதாகக் கூறிப் பண மோசடியில் ஈடுபட்ட இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

சுமார்40இலட்சம்ரூபாபணத்தைப் பெற்று மோசடி செய்த சந்தேக நபர்கள் இருவரும் கொழும்பு, கடவத்தைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

கடவத்தைப் பகுதியில் நிறுவனம் ஒன்றைநடத்திவந்த இருவரேகைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம்தெரிவிக்கின்றது.

கிரிபத்கொடைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கப்பலில்வேலைவாய்ப்புவாங்கித்தருவதாகத் தெரிவித்து, நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 19 பேரிடம் இருந்து 39 இலட்சத்து 97 ஆயிரத்துக்கும் அதிகமான பணத்தை சந்தேக நபர்கள் பெற்றுக்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள், ரம்புக்கன மற்றும் மாவனெல்ல பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர்கள் மஹர நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதோடு, மேலதிகவிசாரணைகளைத் தாம் முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார்தெரிவித்தனர். (ரி2)



## செல்லப்பிராணியாக முதலை!

பாங்கொக், ஜூலை 6
தாய்லாந்தைச் சேர்ந்த முகமது இவான், வீட்டிலேயே ஒரு முதலையை வளர்த்து வருகிறார். 200 கிலோ எடை கொண்ட 21 வயதான இந்த முதலையுடன் விளையாடுகிறார். பல் துலக்கி விடுகிறார். குளிக்க வைக்கிறார்.

"1997ஆம் ஆண்டு ஒரு மீனவரின் வலையில் சின்னஞ் சிறு குட்டியாக மாட்டிக்கொண்டது. அந்தப் பார்த்தவுடன் எனக்குப் பிடித்துவிட்டது. பணம் கொடுத்து வாங்கி வந்துவிட்டேன். ஆனால் என் வீட்டில் ஒருவரும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்காக நான் முதலையைக் கைவிடவில்லை. கோஜெக் என்று பெயரிட்டு அன்பாக வளர்த்து' வந்தேன். வராண்டாவில் ஒரு பெரிய தண்ணீர்த் தொட்டியை முதலைக்காகக் கட்டினேன். எனக்கு முதலைகளைப் பற்றி பெரிதாக விஷயம் ஒன்றும் தெரியாது. நாளடைவில் நேரிடையாகவே முதலையின் இயல்பை அறிந்துகொண்டேன். வீட்டிலுள்ளவர்களும் படிப்படியாக முதலையை விரும்ப ஆரம்பித்து விட்டார்கள். இப்போது 8 அடி நீள மிகப்பெரிய முதலையாக மாறிவிட்டது. என் குழந்தைகள் முதலையின் அருகிலேயே விளையாடுகின்றனர். இதுவரை யாருக்கும் எந்தத் தீங்கும் செய்ததில்லை. தினமும் 1.5 கிலோ முதல் 5 கிலோ மீன் வரை சாப்பிடுகிறது. இதைத் தவிர பெரிய செலவு ஒன்றும் இல்லை. வாரம் ஒரு முறை முதலையின் தோலைத் தேய்த்து, நன்றாகக் குளிக்க வைப்பேன். பல் துலக்கிவிடுவேன். உள்ளூர் மற்றும் வெளிநாட்டினர் கூட முதலையைப் பார்க்க வருகிறார்கள்.

வெளிநாட்டுக்காரர் ஒருவர் 47 லட்சம் ரூபாய்க்கு முதலையை வாங்கிக் கொள்வதாகச் சொன்னார். இது என் குழந்தை என்று மறுத்துவிட்டேன்" என்கிறார் முகமது. (ம)

### ஹோம்ஸ் நகரில் நடைபெற்ற போரில்

# ஐ.எஸ். தலைவர் மகன் ரஷ்யாவால் படுகொலை

டமஸ்கஸ், ஜூலை 6
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதியின் மகன் அல் பத்ரி ரஷ்யாவின் வான் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக விடு பட்டுள்ளது.



சிரியாவில் தற்போது தாக்குதல்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக சிரியாவின் ஹோம்ஸ் நகரில் தாக்குதல்கள் உச்சக்கட்டமாக இடம்பெற்று வுருகின்றன.

இந்த நிலையில் ஹோம்ஸ் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக நடைபெற்ற போரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதியின் மகன் அல் பத்ரி கொல்லப்பட்டார் என்று ஐ.எஸ்.எஸ். அமைப்பு அறிவித்துள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பெரியளவில் நிலைபெற்றுள்ள நாடாக தற்போது சிரியாவே உள்ளது. டமஸ்கஸ், தைகிரீஸ், பல்மைரா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். விரட்டப்பட்ட போதிலும் ஹோம்ஸில் வலுவாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ட்ரம்பின் கொள்கைக்கு எதிராக சுதந்திரதேவி சிலையில் ஏறிப் போராட்டம்



வொஷிங்டன், ஜூலை 6
அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் குடியேற்றக் கொள்கையை எதிர்த்து பெண் ஒருவர் சுதந்திர தேவி சிலையின் மீது ஏறிப் போராட்டம் நடத்தியமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.


ட்ரம்ப்பின் குடியேற்றக் கொள்கையால் மெக்சிக்கோவிலிருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைபவர்கள் கைது செய்யப்பட்டனர். இதனால் 2 ஆயிரம் குழந்தைகள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டனர். இந்த விவகாரம் பன்னாட்டு அளவில் விமர்சிக்கப்படவே சட்டவிரோதமாக நுழையும் அகதிகளிடம் இருந்து அவர்களின் குழந்தைகளைப் பிரித்துக் காப்பகத்தில் தங்கவைக்கும் திட்டத்தை ட்ரம்ப் கைவிட்டார். இந்தப் பின்னணியிலேயே ட்ரம்ப்பின் குடியேற்றக் கொள்கை மற்றும் சுங்க அமலாக்கத்துறைக்கு எதிராகப் பெண் ஒருவர் அமெரிக்காவின் நியூயோர்க் துறைமுகத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற சுதந்திர தேவி சிலையின் மீது ஏறி தனது எதிர்ப்பைப் பதிவு செய்தார்..3 மணி நேரத்துக்கு மேலாக அந்தப் பெண் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் நியூயோர்க் துறைமுகத்தில் பரப்பரப்பு நிலவியது. (ம)

# கிரிமியாவை ஒப்படைக்கும் வரையில் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகள்

## அமெரிக்கா திட்டவட்ட அறிவிப்பு

வொஷிங்டன், ஜூலை 6
"கிரிமியாவை உக்ரைனிடம் ஒப்படைக்கும் வரை ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் தொடரும்" என அமெரிக்க அதிபரின் இல்லமான வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

உக்ரைன், ரஷ்யா எல்லையில் அமைந்துள்ளது கிரீமியா. இந்தப் பகுதியை உக்ரைனிடம் இருந்து ரஷ்யா ஆக்கிரமித்து வைத்துள்ளது என்று அமெரிக்கா குற்றம் சுமத்துகிறது. அத்துடன் சிரியா விவகாரம், மத்திய கிழக்கு விவகாரம் உள்ளிட்ட ஏகப்பட்ட விடயங்களில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் கருத்து மோதல் நிலவுகிறது. இந்தப் பின்னணியில் அமெரிக்க அதிபர் ட்ரம்பும், ரஷ்ய அதிபர் புடினும் இன்னும் சில நாள்களில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். இந்தச் சந்திப்புக்காக இரு நாடுகளின் அயலுறவுத் துறைகளும் துரித கதியில் தயாராகி வரும் நிலையில் வெள்ளை மாளிகையால் விடுக்கப்பட்ட இந்த அறிவிப்பானது அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.



இதுதொடர்பாக நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்த வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ், "கிரிமியாவை தங்கள் நாட்டுடன் ரஷ்யா இணைத்து கொண்டதை நாங்கள் அங்கீகரிக்கவில்லை. ஏற்றுக்கொள்ளவுமில்லை. எனவே, கிரிமியாவை உக்ரைனிடம் ஒப்படைக்கும்வரை ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளை விலக்கிகொள்ளும் பேச்சுக்கே இடமில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.


1991ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் என்ற அமைப்பு உடைந்து பல சிறிய நாடுகளாக பிளவுபட்ட பின்னர் கடந்த 2014ஆம் ஆண்டு உக்ரைன் நாட்டின் கிரிமியா பகுதியை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது. உக்ரைன் விவகாரத்தில் கிரிமியா பகுதி மக்கள் அவர்களின் விருப்பத்தின்பேரிலேயே தங்கள் நாட்டுடன் இணைந்ததாக ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும், இந்த விவகாரத்தில் பன்னாட்டுச் சமூகத்தின் எதிர்ப்பு அதிகமாகவே இருந்தது. கிரிமியாவுக்காக நடைபெற்ற போரில் சுமார் 10 ஆயிரம் பேர் உயிரிழந்த நிலையில், ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே பூசல்கள் அதிகரித்து வருகின்றன.

இந்த விவகாரத்தில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா ஆரம்பத்தில் இருந்தே குரல் எழுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



## இளைஞர் ... மக்கள் ...

பாரிஸ், ஜூலை 6
பிரான்சில் இளைஞர் ஒருவ...
சுட்டுக்கொன்றதையடுத்து மக்க...
டைந்து போராட்டத்தில் ஈடுபட்டு...
பிரான்சின் மேற்கு பகுதியில் ...
டெஸ் நகரில் கடந்த செவ்வா...
இரவு 22 வயது மதிக்கத்தக்க ...
வாலிபர் காரில் வந்துள்ளார்.
காரை நிறுத்தி அவரைச் சோத...



அமெரிக்கா தனது 242ஆவது சுதந்திர தினத்தை நேற்றுமுன்தினம் கோலாகலமாகக் கொண்டாடியது. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

## புடின் – நெத்தன்யாகு மொஸ்கோவில் சந்திப்பு



மொஸ்கோ, ஜூலை 6

ரஷ்ய அதிபர் புடின் - இஸ்ரேல் அதிபர் நெத்தன்யாகு இருவரும் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் விரைவில் சந்தித்துப்பேச்சு நடத்தவுள்ளனர்.

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் ரஷ்யாவில் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. இறுதியாட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தைக் காண்பதற்காக உலகத் தலைவர்கள் பலரும் ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளனர். அவர்களில் நெத்தன்யாகுவும் ஒருவர். அவருக்கும் புடினுக்கும் இடையில் எதிர்வரும் 11ஆம் திகதி சந்திப்பு நடைபெறவுள்ளது.

கட்டார் மன்னர்- புடின் இடையிலான சந்திப்பும் விரைவில் இடம்பெறும் என்று சொல்லப்படுகின்ற போதிலும் இந்தச் சந்திப்பு எப்போது இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படவில்லை. (ம)

## அட, என்ன ஓர் அதிசயம்!

யகார்தா, ஜூலை 5

இந்தோனேஷியாவில் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு காணாமல்போன பெண், தொலைந்துபோன இடத்திலேயே மீண்டும் கிடைத்திருக்கிறார். காணாமல் போனபோது அணிந்த உடைகளையே அணிந்திருந்தார். 52 வயது நைனிங் சுனார்ஷி, சுற்றிப் பார்ப்பதற்காக மேற்கு ஜாவாவில் உள்ள சைட்பஸ் கடற்கரைக்குச் சென்றிருந்தார். அலைகளில் கால்களை வைத்துக்கொண்டு நின்றிருந்தபோது எதிர்பாராமல் ராட்சத அலை அவரை இழுத்துச் சென்றது. பெரிய அலைக்கு நடுவே ஒரு பெண்ணின் கைகள் உதவி கேட்டு கத்தியதைக் கடற்கரையில் இருந்தவர்கள் பார்த்திருக்கிறார்கள்.

பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. மீட்புப் படையினர் வந்து நாள் கணக்கில் தேடிய போதும் நைனிங் எங்கே போனார் என்றே தெரியவில்லை. ஒரு வாரத்துக்குப் பிறகு ஓர் உடலைக் கண்டுபிடித்தார்கள். நைனிங் குடும்பத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடல் மிக மோசமாக சேதமடைந்திருந்தபோதும் இவர் இல்லை என்பதை உறுதியாகச் சொல்லிவிட்டனர்.

ஆனால், அவராகத்தான் இருக்கும் என்று மீட்புப் படையினர் கூறினர். பிறகு டிஎன்ஏ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் நைனிங் இல்லை என்பது உறுதியானது. இனியும் அவர் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என்று கூறி, மீட்புப் படையினர் தேடுதலைக் கைவிட்டனர். எங்கோ உயிருடன் இருக்கிறார், என்றாவது திரும்பி வருவார் என்றநம்பிக்கையில் குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர்.

சில நாள்களுக்கு முன்பு நைனிங்கின் மாமா, பாலபுஹன்ராட்டு கடற்கரையில் ஒரு பெண் திரும்பி வருவதாகக் கனவு கண்டார். முதலில் அதைப் பெரிதாக அவர் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அடுத்தடுத்த நாள்களில் அதே கனவு வந்ததால் குடும்பத்தினரிடம் தெரிவித்தார். உடனே எல்லோரும் அந்தக் கடற்கரைக்குச் சென்றனர். நைனிங் தொலைந்துபோன கடற்கரையில் இருந்து வெகு அருகில் இருந்தது இந்தக் கடற்கரை. நீண்ட நேரம் காத்திருந்தும் அங்கே யாரும் வரவில்லை. ஏமாற்றமாக இருந்தது. மறுநாள் வீடுதிரும்பலாம் என்று முடிவெடுத்தனர். ஞாயிற்றுக் கிழமை, காணாமல் போய் மிகச்சரியாக ஒன்றரை வருடம் கழித்து கடற்கரையில் மணலால் மூடப்பட்டு ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டார். உடனே குடும்பத்தினர் ஓடிவந்தனர்.

தொலைந்து போனபோது என்ன உடைகளை அணிந்திருந்தாரோ, அதே உடைகளுடன் நைனிங் சுயநினைவின்றி கிடந்தார். எல்லோருக்கும் ஆனந்த அதிர்ச்சியாக இருந்தது. அவரை வீட்டுக்கு அழைத்து வந்து, சுத்தம் செய்து படுக்க வைத்தனர். சுயநினைவு இல்லாததாலும் உடல் மிகவும் பலவீனமாக இருந்ததாலும் மருத்துவமனையில் சேர்த்தனர். இப்போதைக்கு இவரது உடல் பலவீனமாக இருந்தாலும் பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இல்லை. விரைவில் குணமாகிவிடுவார் என்று மருத்துவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நைனிங் நினைவு திரும்பிய பிறகுதான் அவர் காணாமல் போய், திரும்பி வந்தது எப்படி என்ற விஷயம் தெரியும். ஆனால் அதைப் பற்றி எங்களுக்கு கவலை இல்லை, எங்கள் அம்மாவுக்கு தெய்வீக சக்தி இருப்பதால்தான் மீண்டும் திரும்பி வந்திருக்கிறார் என்கிறார்கள் இவரது குழந்தைகள்.






## ...ர் சுட்டுக் கொலை

# ... போராட்டம் பிரான்ஸில் தீவிரம்

...றபோது. அந்த வாலிபர் காரை பின்னோக்கிச் செலுத்தித் தப்பிக்க முயன்றார் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறாக காரைச் செலுத்தியபோது அது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் காலில் மோதியது.

இதையடுத்து மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அபுபக்கர் இறந்தார்.

இதுபற்றித் தகவல் அறிந்த அந்தப் பகுதிப் பொதுமக்கள் நேற்றுக் காலையில் தெருக்களில் திரண்டு ஆவேசமாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முகத்தை மூடிக்கொண்டு தெருக்களில் அங்குமிங்கும் ஓடிய சில இளைஞர்கள் கடும் வன்முறையில் ஈடுபட்டனர். பொலிஸாரின் அத்துமீறலைக் கண்டித்து பிரான்ஸின் தலைநகர் பரிஸிலும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# போர்க்குற்றவாளிகளை தப்பவிடுவது சரிதானா?

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டெரன்ஸ் டி ஜோன்ஸ் ஆடி 3ஆம் நாள் (கடந்த செவ்வாய்க்கிழமை) எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேசினார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை யொட்டி இந்தச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புவிடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தச் செய்திக் குறிப்பில் ஓர் இடத்தில் "பொறுப்புக்கூறல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்த, நாங்கள் முழு இராணுவத்தினையும் குற்றவாளிகள் என்று கூறவில்லை. ஆனால் நிச்சயமாகப் பெரும் குற்றங்களை இழைத்த இராணுவத்தினர் தண்டிக்கப்பட வேண்டும்" என்று தெரிவித்தார் என்று கூறப்பட்டிருந்தது.

போர்க்குற்ற விசாரணைகள் அல்லது பொறுப்புக்கூறல் விடயத்தில் தமிழ்மக்களின் உண்மையான நிலைப்பாடு இதுதானா? ஏனெனில் சம்பந்தர் இந்தக் கருத்தைத் தெரிவிக்கும்போது அது தமிழர்களின் நிலைப்பாடு என்றே பொருள்படப்போகின்றது.

அதாவது, பெரும் மனித உரிமை மீறல்களும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களும் கொழும்பு அரசு ஏற்றுக் கையெழுத்திட்ட நிகழ்த்தப்பட்டதாகவும் பன்னாட்டு மனிதாபிமானச் சட்டங்கள், சாசனங்கள் மீறல்களும் (இவற்றைத்தான் போர்க் குற்றங்கள் என்று பொதுப்படையாக விளிக்கப்படுகின்றது) இடம்பெற்ற வன்னியின் இறுதிப் போர் கொழும்பு அரசின் திட்டமிட்ட கொள்கையின் கீழ் இடம்பெற்றதில்லையா? அந்தப் போரில் நடந்த குற்றங்கள் அனைத்தும் யாரோ சில படையினரின் அல்லது அதிகாரிகளின் தனிப்பட்ட விதி மீறல்கள் மட்டும்தானா? சூனியப் பகுதிகள் அல்லது தாக்குதல் விலக்களிக்கப்பட்ட பகுதிகளைக் கொழும்பு அரசு அறிவித்துவிட்டு அவற்றின் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி மக்களின் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்தது சில, பல படையினர் மற்றும் அதிகாரிகளின் செயல் மட்டும்தானா?

வன்னியின் போர்க் குற்றங்கள் தொடர்பாகத் தமிழர்களின் நிலைப்பாடு இதுதானா? இந்த விவகாரத்தில் தமிழர்களும் கொழும்பு அரசும் ஒரே நேர்கோட்டில்தான் பயணிக்கிறார்களா? ஏனெனில் இறுதிப் போரில் படையினர் எந்தக் குற்றமும் செய்யவில்லை. அப்படி ஏதாவது குற்றங்கள் நிகழ்ந்திருக்குமானால் அது பற்றி உள்நாட்டுச் சட்டதிட்டங்களுக்கு அமைவாக விசாரணைகள் நடத்தப்படும் (அத்தகைய விசாரணை ஏதும் இதுவரையில் நடக்கவேயில்லை என்பது வேறு விடயம்) என்றுதான் கொழும்பு ஆட்சியின் தலைவர்கள் தொடர்ந்து கூறிவருகின்றார்கள்.

ஆனால், களத்தில் இருந்த தமிழர்கள் அனைவருக்கும் மொத்த உலகத்திற்கும் தெரியும் இந்தப் போர் திட்டமிட்ட அழிப்புக்கொள்கையின் கீழ்தான் நிகழ்த்தப்பட்டது என்பது. ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த வல்லுநர்கள் குழு தனது அறிக்கையில், இறுதிப் போரில் மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், பன்னாட்டுச்சட்ட மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் என்பன நிகழ்ந்திருக்கின்றன என்று நம்புவதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன என்று தெளிவாகத் தெரிவித்திருந்தது. உள்நாட்டில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் முன்பாகச் சாட்சியமளித்த மக்கள் பலர் அதற்கான சாட்சியங்களை வழங்கியுள்ளார்கள். அப்படியிருக்கும்போது நிகழ்ந்த குற்றங்கள் சில தனி மனிதத் தவறுகள் என்ற நிலைப்பாட்டைத் தமிழர்கள் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்படி எடுக்கமுடியும்? இது தவறு இல்லையா!

இது போர்க்குற்றவிசாரணைக்கான தமிழர்களின் கோரிக்கையை வலியுறுத்தலை பலவீனப்படுத்தும் நிலைப்பாடாகவல்லவா அமைந்துவிடப்போகின்றது. போரை நிகழ்த்திய கொழும்பு அரசின் உயர் மட்டத் தலைவர்களின் சம்மதம் மற்றும் அறிவுறுத்தல் இன்றி இத்தகைய குருதிக் களரியான போரைப் படையினர் நிகழ்த்துவது கனவிலும் நடக்காதது. அரசியல் தலைவர்களினதும் அவர்களின் சிவில் அதிகாரிகளினதும் ஆணையின்றி இந்தப் போரை இத்தனை கொடூரமாகப் படையினர் நிகழ்த்தவில்லை. எனவே பொறுப்புக் கூறலின் உச்சப் பொறுப்பு இந்தப் போரை வழிநடத்தியவர்களையே சென்று சேரும். உண்மையான குற்றவாளிகள் அவர்கள்தான். படையினர் வெறும் கருவிகள் மட்டும்தான்.

அப்படியிருக்கும்போது போர்க்குற்றவாளிகளைத் தப்பவிட்டு [illegible]

# ஊழலும் மோசடியும் ஒழிக்கப்படாதவரை நாட்டின் தலைவிதி மாறாது

சேரலாதன்



ஊழல் மற்றும் மோசடிகள் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களாகவே மாறிவிட்டன. ஏனென்றால் ஊழல் மோசடிகள் சிறியவையோ அல்லது பெரியவையோ அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்சவின் தேர்தல் செலவுகளுக்கு சீன நிறுவனம் ஒன்று பெருந்தொகையான பணத்தை வழங்கியதாக அமெரிக்காவிலிருந்து வெளியாகும் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதில் உண்மை இருப்பதற்கான சாத்தியக் கூறு அதிகமாகவே உள்ளது.

மகிந்த சீனாவுடன் நெருங்கிய தொடர்பு பேணிச் செயற்பட்ட ஒருவர். மகிந்த சீனாவுக்கு மிகவும் நெருங்கிய ஒருவராகவே எப்போதும் இருந்துள்ளார். சீனாவின் தலையீடு இலங்கையில் அதிகரித்துச் செல்வதற்கும் அவரே காரணமாக இருந்துள்ளார். இவரது காலத்திலேயே சீனா மிக அதிக அளவிலான கடன்களை இலங்கைக்கு வழங்கியது. அந்தக் கடன்கள் வட்டியும், முதலுமாகச் சேர்ந்து இலங்கையின் குடி மக்கள் ஒவ்வொருவரினதும் தலைகளில் சுமையாக நெரித்துவருகின்றன.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியான துன்பங்களை எதிர்கொள்வதற்கு இந்தக் கடன்களே மூலகாரணமாகவும் உள்ளன. இதைவிட, அம்பாந்தோட்டை துறைமுக நிர்வாகம் சீனாவின் வசம் சென்றதற்கும், கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திப் பணிகளில் சீனா ஈடுபட்டு வருவதற்கும் மகிந்தவே வழிவகுத்தார்.

அதைவிட நாட்டின் கட்டுமானப் பணிகளில் 70வீதமானவை சீன நாட்டின் பொறுப்பில் உள்ளதாகவும் கூறப்படுகின்றது. தற்போது 40ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணியிலும் சீனாவே ஈடுபடவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதனால் மகிந்த பதவியில் தொடருவதை சீனா விரும்பியதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

### மகிந்தவின் தேர்தல் பரப்புக்காக சீனா பெருந்தொகை நிதியை வழங்கியதாகக் குற்றச்சாட்டு

இந்த நிலையில் 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலின்போது சீன நிறுவனம் ஒன்று தேர்தல் பரப்புரைச் செலவுகளுக்களாக 7.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை மகிந்தவுக்கு வழங்கியதாக வெளியான செய்தியில் உண்மைத் தன்மை உள்ளதை நம்பக்கூடியதாகவுள்ளது.

இது உணமையாக இருக்குமானால், இதைவிட மிகப்பெரிய மோசடி எதுவும் இந்த நாட்டில் இதற்கு முன்னர் இடம்பெற்றிருக்க முடியாது.

இது தொடர்பாக உடனடியாகவே விசாரணைகளை ஆரம்பித்து அதன் உண்மைத் தன்மையைக் கண்டறிவதும், குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும் அரசின் தலையாய கடமையாகும். ஆனால் ஏற்கனவே நடந்த ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் பின் நிற்கும் இலங்கை அரசு இந்த விடயத்தில் பொறுப்புடன் செயற்படுமா என்பது சந்தேகத்துக்கிடமானது.

இலங்கை மின்சாரசபை கடந்த ஆண்டு நான்காயிரத்துக்கும் அதிகமான கோடி ரூபாய்களை நட்டமாகப் பதிவுசெய்துள்ளது. கடந்த ஆண்டுக்கு முந்திய ஆண்டு [illegible] மார் மூவாயிரம் கோடியினால் இந்தத் [illegible] குறிப்பிடத்தக்கது.

மின்சார சபையைப்போன்றுதான் ஏனைய அரச நிறுவனங்களும் பெருமளவு நட்டத்தைப் பதிவு செய்துள்ளன. இந்த நிலையில் நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுமென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? நாட்டு மக்களின் வறுமை நிலை தொடர்கதையாவது நாட்டுமக்களுக்கு கவலையும் சிரமமும் தருவதாக அமையும்

### மக்களால் தெரிவுசெய்யப்படும் அரசு மக்களுக்கான தனது கடமையை நிறைவேற்ற வேண்டியது அவசியம்

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசு ஒன்றுக்கு முக்கியமான பொறுப்புக்கள் சில உள்ளன. அதில் ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும், மக்களின்பொருளாதார நலன்களைப் பேணுவதும் பிரதானமானவை. ஆனால் இந்த நாட்டில் இவை நிறைவேற்றப்படுவதாகவே தெரியவில்லை. ஊழல் வாதிகளும் மோசடியாளர்களும், வேறுகுற்றவாளிகளும் சுதந்திரமாக உலவுகின்ற நிலையில், நாட்டின் பாமர மக்கள் வறுமையில் வாடுவதையே இங்கு காண முடிகின்றது. அரசியல்வாதிகள் எதைச் செய்தாலும் அதை மறுப்பின்றி ஏற்கவேண்டிய பரிதாபநிலையில் நாட்டு மக்கள் உள்ளதைக் காண முடிகின்றது. தேர்தல் வேளைகளில் மட்டுமே மக்கள் முன்பாக வந்து வாக்குப் பிச்சை கேட்பவர்கள், அதன்பின்னர் அவர்களை மறந்து விடுகிறார்கள்.

### நேர்மையும் துணிவும்கொண்ட அரசியல் தலைவரொருவர் இந்த நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்க வேண்டும்

நேர்மையும் துணிவும்கொண்ட ஒருவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போதுதான், இந்த நாட்டைப் பீடித்துள்ள சிரமங்கள் அற்றுப் போவதற்கு வழிபிறக்கும். ஆனால் அத்தகைய ஒருவரை இதுவரை இந்த நாட்டு மக்கள் இனம்கண்டுகொள்ள இயலாதுள்ளனர்.

பொருளாதாரப்பிரச்சினையும் இனப்பிரச்சினையும் தீராத தலைவலியாக உருவெடுத்துக் காணப்படுகின்றன. இனப்பிரச்சினைகாரணமாக நாடு பெரும் அழிவுகளைச் சந்தித்து விட்டது. ஆனாலும் அதற்குத் தீர்வைக் காண்பதற்கான எந்தவொரு ஏற்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. இனவாதிகளும் சுயநலவாதிகளும் அரசியலில் ஆதிக்கம் செலுத்துவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

என்னதான் இருந்தபோதிலும், ஊழலுக்கும் மோசடிக்கும் எதிராக நடவடிக்கை எடுத்து அவற்றுடன்தொடர்புடை யவர்களுக்குத் தண்டனை வழங்காத வரையில் இந்த நாட்டின் தலைவிதி மாறவே மாட்டாது.

இந்துமதி



# பன்னாட்டுச் சமூகத்தின் பாராமுகம் இனியும் தொடர வேண்டுமா?

பன்னாட்டு அழுத்தத்தின் ஊடாகவே இலங்கையை ஒரு வழிக்குக் கொண்டுவர முடியுமென வடக்கு முதலமைச்சர் கூறியுள்ளமை கவனத்தில் கொள்ளத் தக்கது. இரணைதீவில் தங்கியிருந்து தமது நில மீட்சிக்காகப் போராடி வரும் மக்களைச் சந்தித்து உரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இரணைதீவு மக்கள் தமது சொந்த நிலங்களில் தம்மைக் குடியமர்த்துமாறு பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்துள்ளபோதிலும் அதை நிறைவேற்றி வைப்பதற்கு அரசு முன்வராததால் போராட்டத்தில் ஈடுபட்டதைக் காண முடிந்தது. ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் எதைப் பெறுவதற்கும் போராடித்தான் தீர வேண்டும் என்ற அவல நிலையில் காணப்படுகின்றனர். ஆனால் தமக்குச் சொந்தமான நிலத்தைப் பெறுவதற்காகக் கூட அவர்கள் போராடுவதுதான் பரிதாபமாக உள்ளது.

**தெற்கின் மிதவாதத் தலைவர்களால் தமிழர்களுக்கு உதவ இயலாத நிலை**

தெற்கில் உள்ள மிதவாத அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் அவற்றின் தீர்வுக்காக அந்த மக்கள் நடத்துகின்ற போராட்டங்களில் உள்ள நியாயத்தையும் நன்கு புரிந்து வைத்திருக்கின்றனர்.

ஆனால் பெரும்பான்மையாகவுள்ள இனவாதிகளின் விருப்பத்து க்கு மாறாக இவர்களால் எதையுமே செய்து கொள்ள முடியவில்லை. இனவாதம் நான்கு வேரூன்றியுள்ள இந்த நாட்டில் மிதவாதம் அடங்கி நடக்க வேண்டிய நிலைதான் எழுதாத விதியாகப் போய் விட்டது.

பன்னாட்டுச் சமூகம் எனும் போது சக்தி படைத்த நாடுகளைத்தான் அது குறிப்பிடுகின்றது. சக்தி படைத்த நாடுகள் தமது வசதிக்கு ஏற்பக் கொள்கைகளை வகுத்து அதைப் பலவீனமான நாடுகள் மீது திணிப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

இஸ்ரேல் பலஸ்தீனத்தில் புரிகின்ற அட்டூழியங்களையெல்லாம் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன. இஸ்ரேல் அரசுக்குப் பொருளாதார மற்றும் ஆயுத உதவிகளை வழங்கி அந்த நாட்டின் சட்டவிரோதமான செயற்பாடுகளுக்கு உதவி வருகின்றன.

> தெற்கில் உள்ள மிதவாத அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் அவற்றின் தீர்வுக்காக அந்த மக்கள் நடத்துகின்ற போராட்டங்களில் உள்ள நியாயத்தையும் நன்கு புரிந்து வைத்திருக்கின்றனர்.
> ஆனால் பெரும்பான்மையாகவுள்ள இனவாதிகளின் விருப்பத்துக்கு மாறாக இவர்களால் எதையுமே செய்து கொள்ள முடிய வில்லை.

**இலங்கை அரசுக்களது புறக்கணிப்பாலேயே தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட நேர்ந்தது**

பலஸ்தீன மக்கள் தமது சொந்த நிலத்தில் நிம்மதியாக வாழமுடியாத நிலையில் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஈழத் தமிழர்களுக்கும் இதுதான் நடந்துள்ளது. இனியும் பொறுக்க முடியாது என்ற நிலையில்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்கிப் போராடினார்கள். பெரும் அழிவுகளையும் சந்தித்தார்கள். இறுதியில் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு பல நாடுகள் இணைந்து அந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தன.

ஆனால் அந்தப் போராட்டத்துக்கான மூலகாரணம் குறித்து அறிந்து கொள்வதற்கு அந்த நாடுகள்அக்கறை காட்டியதாகத் தோன்றவில்லை. இலங்கை அரசின் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதிலேயே அவை கண்ணும் கருத்துமாகக் காணப்பட்டன. இறுதிப் போரின் போது தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்கள் மிகக் கொடுமையானவை. பன்னாட்டு விதிகளை யெல்லாம் உதாசீனம் செய்த இலங்கையரசு தமிழர்களை முற்றாக அழித்து விடுவதையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது. படையினர் தமது எண்ணம் போன்று போர்க்குற்றங்களிலும் ஈடுபட்டனர். இதற்கான அனுமதியை அப்போதைய அரசு படையினருக்கு வழங்கியிருந்ததால், அவர்கள் எதற்கும் அஞ்சாது தமது கொடுஞ்செயல்களை அரங்கேற்றினர். இது தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் சபையில் விவாதிக்கப்பட்டு இலங்கைக்கு எதிரான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பன்னாட்டு நீதிபதிகளின் மேற்பார்வையின் கீழ் விசாரணை இடம் பெற வேண்டுமென்ற கோரிக்கை இலங்கை அரசினால் முற்றாகவே நிராகரிக்கப்பட்டுள்ளது. இதைத் தட்டிக்கேட்க வேண்டிய பன்னாட்டுச் சமூகம் ஆழ்ந்த உறக்கத்தில் ஆழந்திருப்பதையே காண முடிகின்றது.

**போருக்குப் பின்னரான தமிழ்மக்களது நிலை பரிதாபகரமானது**

போருக்குப் பிந்திய தமிழரின் வாழ்க்கையும் அவலங்கள் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. தமது சொந்த நிலங்களில் குடியேற முடியாத நிலையில் இன்றும் பலர் அகதி வாழ்க்கை வாழுகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது உறவுகளைத் தேடிக் களைத்துப்போன நிலையில் உள்ளனர். தமக்கு நீதி கிடைக்குமென்ற நம்பிக்கையை இவர்கள் அறவே இழந்து விட்டனர். போரில் கணவன்மார்களை இழந்த பெண்களின் நிலை பரிதாபகரமான கட்டத்தை எட்டி நிற்கின்றது. புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலையான முன்னாள் போராளிகள் சகல வகையிலும் புறக்கணிக்கப்பட்டு விரக்தியுடன் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ் இளைஞர்கள் வேலைவாய்ப்பில்லாததால் தவறான செயல்களில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற வடக்கு கிழக்கின் அபிவிருத்தியில் அரசு போதிய அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்கள் படையினரால் அடாத்தாகக் கையகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. தமது சொந்த நிலங்களை மீட்டெடுப்பதற்கு மக்கள் நீண்டகாலமாகப் போராட வேண்டியுள்ளது. இதற்குத் தீர்வு கிடைப்பதற்கான அறிகுறிகள் எதனையும் காணமுடியவில்லை. இந்த விடயத்தில் அரசின் விருப்பத்தை மதிப்பதற்குப் படையினர் தயாராகவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இவற்றின் ஒரு பகுதியாகத்தான் இரணை தீவு மக்களின் மண் மீட்புப் பேராட்டம் இடம்பெற்று வந்தது. இதில் உள்ள நியாயத்தை பன்னாட்டுச் சமூகம் உணர்ந்து கொள்ளுமா? என்பதில் சந்தேகம் தான் எழுகின்றது. பத்தோடு பதினொன்றாக இதுவும் நாளடைவில் மறக்கப்பட்டு விடலாம்.

## ஆசிரியருக்கான கடிதம்

# இதுவும் எமது தலைவிதிதானா?

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிர்வாகப் பரப்புக்குள் காணப்படும் கழிவு நீர் வழிந்தோடும் வடிகால்களைச் சுத்தப்படுத்தி உரியமுறையில் பேணும் நடவடிக்கைகள் முன்னைய மாநகரசபை நிர்வாகத் தரப்பின் காலத்தில் ஏனோ தானோ என்ற விதத்திலேயே முன்னெடுக்கப்பட்டு வந்தமை கண்கூடு. காலத்துக்குக் காலம் வடிகால்களால் ஏற்படும் பின்னடைவுகள், சிரமங்கள் குறித்து நகரின் வரியிறுப்பாளர்கள் தொடர்ச்சியாகமேற்கொண்ட முறைப்பாடுகள் காலம் தாழ்த்தியே கவனித்து நேர்சீர் செய்யப்பட்டன.

யாழ்ப்பாண மாநகரசபையின் தற்போதைய புதிய நிர்வாகத்தில் நகரத்தின் வரியிறுப்பாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்படுமென எம் மத்தியில் நிலவிய எதிர்பார்ப்பு மீண்டும் "பழைய குருடி கதவைத் திறவடி" என்றநிலையிலேயே தொடர்வது வருத்தத்துக்கு உரியது.


யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் பழைய வின்சர் தியேட்டருக்கு எதிர்ப்புற வரிசையில் அமைந்துள்ள கழிவு நீர் வழிந்தோடும் வடிகால் அருகிலுள்ள பிரதான நாற்சந்தியை ஊடறுக்கும் இடத்தில் அடிக்கடி கழிவுகள் அடைப்பதால் தடைப்படுவதன் காரணமாக அடிக்கடி கழிவு நீர் ஓட இயலாது தடைப்படுகிறது. அதன் பயன், குறித்த வடிகாலின் கழிவு நீர் வடிகாலை மேவிப் பாய்ந்து முன்னால் உள்ள போக்குவரத்து முக்கியத்துவம் மிக்க கஸ்தூரியார் வீதியில் தேங்கி நிற்கிறது. வீதியின் அருகில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோர், வர்த்தக நிலையங்களுக்கு வந்துபோகும் வாடிக்கையாளர்கள் மற்றும் பாதசாரிகள் என்போர் இந்தக் கழிவு நீரினால் ஏற்படும் துர்நாற்றத்தைத் தாங்கிக்கொள்ள இயலாது மூக்கைப் பொத்திக் கொண்டு செயற்பட நேர்கிறது.

அடிக்கடி இடம்பெறும் இத்தகைய சீர்கேடு குறித்து பல தடவைகள் யாழ்ப்பாணம் மாநகரசபை நிர்வாகத்தின் பொறுப்புள்ள தரப்பினர்களது கவனத்துக்கு நாம் தெரியப்படுத்திய போதிலும், வடிகாலில் பாயும் கழிவு நீர் தடைப்படுமிடத்தை நேர்சீர் செய்ய, குறித்த வீதிக்குப் பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் அனுமதி வழங்க மறுப்பதாக மாநகரசபை நிர்வாகத் தரப்பின் பொறுப்பான அதிகாரி சாக்குப் போக்குக் கூறுகின்றார்.

கடந்த இரண்டு நாள்களாக குறித்த பகுதியில் தேங்கி நிற்கும் கழிவுநீரை அகற்றுவது தொடர்பாக வர்த்தகத் தரப்பினர்களாகிய நாம் யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் எதுவித நடவடிக்கையையும் இது தொடர்பாக இடம்பெறவில்லை.

பயங்கர தொற்று நோய்களை ஏற்படுத்தவல்ல இந்த நிலை குறித்து சுற்றுச் சூழல் பேணுவதற்குப் பொறுப்பான தரப்பினராவது உடனடிக் கவனமெடுத்து இந்தப் பின்னடைவை நேர்சீர் செய்வார்களா? வரியிறுப்பாளர்களது சிரமத்தைப் போக்கி உதவ வேண்டிய யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகம் இது விடயத்தில் கவனம் செலுத்துமா?

*எஸ்.உதயகுமார்.*
*யாழ்ப்பாணம்.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**இடபம்:** மனச்சாட்சிப்படி நடந்து குடும்ப பெருமையை நிலைநாட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நேரும் குளறுபடியை உடனடியாக சரிய செய்வது நல்லது. இலாபம் சுமார்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர்.

**கடகம்:** உங்களின் இரக்க குணம் அறிந்து சிலர் உதவி பெறுவர். இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் சீராக இருக்கும். உடல்நலனில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** மனதில் நேர்மை எண்ணம் மேலோங்கும். பிறருக்கு உதவி செய்ய முன்வருவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**துலாம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்து பேசுவர். எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபார நடைமுறை சீராக இருக்கும். இலாபம் சராசரி அளவில் இருக்கும்.

**விருச்சிகம்:** நல்ல மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும். தாமதமான பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உருவாகும். இலாபம் உயரும்.

**தனுசு:** மதி நுட்பத்துடன் செயல்படுவீர்கள். கடந்த கால முயற்சிக்கான நற்பலன் கிடைக்கும். தொழில்வியாபாரத்தில் இலாபம் உயரும். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** பேச்சு, செயலில் தயக்கம் ஏற்படலாம். பணியில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பிராணிகளிடம் விலகியிருப்பது நல்லது.

**கும்பம்:** குடும்ப பிரச்னை குறித்து பிறரிடம் பேச வேண்டாம். எதிர்பார்ப்பு ஓரளவே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** மனதில் தைரியம் குடியிருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தினர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.






# அஜித்துக்கு ஜோடியாகும் ஈஸ்வரிராவ்!

'காலா' படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்தவர் ஈஸ்வரிராவ். இந்த படத்தின் மூலம் அவருக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது.

இந்த நிலையில் சிவா இயக்கத்தில் அஜித் நடித்து வரும் 'விஸ்வாசம்' படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நடிக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.




## பொன் வரிகள்

- கடந்த காலம் மற்றும் எதிர்காலம் ஆகியன உண்மையான மாயைகளாக இருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.
- உங்களை வரையறுக்க முயற்சிப்பது என்பது உங்களது பற்களை கடிக்க முயற்சிப்பதைப் போன்றது.
- எம்மிடம் கற்பனைத்திறன் இல்லாததே, எம்மிடம் வறுமை இருப்பதற்கான காரணம்.
- உங்களுக்கானது ஒரு நிலையில் எது வேற்றுமையாக உள்ளதோ, அது மற்றொரு நிலையில் ஒற்றுமையானதாக இருக்கும்.
- கடவுள் எதை வேடிக்கைக்காகப் படைத்தாரோ, அதைத் தீவிரமானதாக கையாளுவதால் மட்டுமே மனிதன் துன்பப்படுகிறான்.

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | 9 | 5 | | | 7 | |
| | | | 8 | | | | | |
| | 3 | | 6 | | | 8 | 4 | 5 |
| | | 5 | | | | 2 | 6 | 8 |
| | | | | | | | | |
| 8 | 2 | 1 | | | | 4 | | |
| 4 | 9 | 7 | | | 6 | | 5 | |
| | | | | | 7 | | | |
| | 5 | | | 1 | 9 | | | 6 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 5 | 2 | 9 | 7 | 6 | 3 | 1 |
| 2 | 9 | 6 | 3 | 4 | 1 | 5 | 7 | 8 |
| 3 | 1 | 7 | 8 | 5 | 6 | 2 | 4 | 9 |
| 5 | 6 | 2 | 1 | 3 | 8 | 7 | 9 | 4 |
| 1 | 4 | 3 | 7 | 6 | 9 | 8 | 5 | 2 |
| 8 | 7 | 9 | 5 | 2 | 4 | 3 | 1 | 6 |
| 6 | 3 | 1 | 9 | 8 | 5 | 4 | 2 | 7 |
| 9 | 2 | 4 | 6 | 7 | 3 | 1 | 8 | 5 |
| 7 | 5 | 8 | 4 | 1 | 2 | 9 | 6 | 3 |

நேற்றைய விடை



# twitter

## இன்றைய தத்துவம்

எல்லா பிகர்களும் நல்ல பிகர்கள்தான் மண்ணில் பிறக்கயிலே. அது அழகான பிகராவதும் 'மொக்கை' பிகராவதும் அது போடும் மேக்கப்பினிலே...





Madurai Jinna@madurai_jinna

காட்சிகளைக் கொடுத்து கண்களைக் கெடுத்து விட்டது கணினி.



சித்ரா தவேி@chithradevi_91

பல அலுவலகங்களில் குட்மார்னிங் என்பது "நான் வந்துட்டேன் பார்த்துக்கோ" என்பதற்காகவே சொல்லப்படுகிறது.



படிக்காத_மேதை @Srilaksman0

கருணைக் கொலை என்பது பெரும்பாலும் கருணையாகவே இருப்பதில்லை.




ES
Printers
குறைந்த விலையில் உங்களுடைய
சகல அச்சக வேலைகளையும்
செய்து பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்...
BATTLE NORTH
AR Rodny
18
மணியம் கபே
Maniyam Cafe
பனர் பிரிண்ட்
(Banner),
35/=
பனர் பிரிண்ட் (Banner),
வியாபார மற்றும்
ஏனைய நிறுவனங்களுக்கான
பெயர் பலகைகள் (Name Board),
மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள்,
கையேடு (Handbills),
நோட்டிஸ் (Notice) மற்றும்
அனைத்து ஓவ்செற்,
டிஜிற்றல் அச்சக வேலைகள்
சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு ( Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில்,
விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில்
குறைந்த விலையில்
தரமாக செய்துதரப்படும்.
GVS
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கரடிப் போக்குச் சந்தி, ஏ-9 வீதி,
கிளிநொச்சி.
நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com
www.esprinters.com

# மரண அறிவித்தல்



தோற்றம் 07 12 1950

மறைவு 05 07 2018

## அமரர் திரு. நாகலிங்கம் தயானந்தன்

பட்டயக் கணக்காளர்,
முன்னாள் மக்கள் வங்கி உதவி பொதுமுகாமையாளர்
(வடமாகாணம்)


யாழ்ப்பாணம் கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தயானந்தன் அவர்கள் 05.07.2018 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலம்சென்ற திரு. திருமதி நாகலிங்கம் பொன்னம்மாள் அவர்களின் தவப்புதல்வனும் திரு. திருமதி கதிரவேலு மகேஸ்வரி அம்மாவின் மருமகனும்

தனபூபதியின் அன்புக் கணவரும், அஞ்சனா, அனோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தயாநிதி வரதராஜா, திருமதி தயாரதி ஆனந்தநாகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கனகராஜா, திருமதி செல்வராணி, திருமதி லக்ஷ்மிதேவி, திரு. கந்தஞானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.07.2018 அன்று மஹிந்த மலர்சாலையில் பி.ப.12.00 மணி - 8.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு அதைத் தொடர்ந்து 06.07.2018 அன்று யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம்வீதி 48/5 அன்னாருடைய இல்லத்தில் வைக்கப்பட்டு 08.07.2018 காலை 8.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கோம்பயன் மயானத்தில் 10.00மணிக்கு தகனம் செய்யப்படும், என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல் மனைவி, பிள்ளைகள்
தொடர்புகளுக்கு : 0771 668 096, 0779 506 639

# மரண அறிவித்தல்



பிறப்பு 18 . 11 . 1944

இறப்பு 05 . 07 . 2018

## நாகலிங்கம் சிவபாதசுந்தரம்

*(ஓய்வுநிலை திட்டமிடல் பணிப்பாளர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.)*

யாழ்ப்பாணம், சப்பல் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் சிவபாதசுந்தரம்நேற்று(05.07.2018)வியாழக்கிழமைகாலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் Dr.சஞ்சீவ் (முறிவுநெறிவு வைத்திய நிபுணர் பொதுவைத்தியசாலை, அம்பாறை) இன் பாசமிகு தந்தையும் பாரதியின் அன்பு மாமனாரும் காருண்யாவின் அன்புப் பேரனும் தர்சாந்தின் பாச மிகு தாத்தாவும் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை, தெய்வநாயகி மற்றும் புவனேஸ்வரி, பத்மகாந் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2018) வெள்ளிக் கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**39, சப்பல் வீதி,**
**யாழ்ப்பாணம். 021 222 2584** (CS 9628/15/18)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


## முன் பள்ளி ஆசிரியர் டிப்ளோமா பயிற்சி நெறி

- UGC (இலங்கை பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழு) ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
- பயிற்சி நிறைவில் வேலைவாய்ப்பு.
- கற்கைநெறி கட்டணம் மிகக் குறைவு.
- பயிற்சிநெறியின் போது கற்பித்தல் பயிற்சி வழங்கப்படும்.
- அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- தகுதி – O/L
- காலப்பகுதி- 01 வருடம்

**விண்ணப்ப முடிவுத் திகதி -15.07.2018**

**JATE PVT LTD.**
மூன்றாம் நிலை கல்விக்கான யாழ் அக்கடமி
JAFFNA ACADEMY FOR TERTIARY EDUCATION
Adiyapatham Road Thirunelvely, Jaffna.
T.P No:- 077 3867458, 021 2216933

குறிப்பு - மேற்படி நிறுவனத்திற்கு கணினி பெண் உதவியாளர் தேவை. தொடர்பு - 077 386 7458



விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111 உதயன்



## அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - இந்தியா

இலங்கைக்கிளை : ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P:- 021-221-6933, 077-3867458

MA, BA பட்டப்படிப்புக்களுக்கான 2019ம் ஆண்டிற்கான கற்கைநெறிகளுக்குரிய விண்ணப்பங்கள் 31.07.2018 வரை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**Post Graduate Programmes**
- M.A. Education
- M.A. Tamil
- M.A. English
- M.A. Economics
- M.A. History
- M.A. Sociology
- M.A. Political Science
- M.A. Public Administration
- M.A. Philosophy, Religion and Culture
- M.A. Applied Psychology
- M.A. Mathematics
- M.Com
- M.Lib. I.Sc

**Professional Programmes**
- M.B.A
- M.B.A International Business
- M.B.A Human Resource Management
- M.B.A Marketing Management
- M.B.A Financial Management
- M.B.A Information Systems
- B.B.A

**Under Graduate Programmes**
- B.A. Tamil
- B.A. English
- B.A. Economics
- B.A. History
- B.A. Sociology
- B.A. Political Science
- B.A. Public Administration
- B.A Psychology
- B.A. Mathematics
- B.Com
- B.Lib. I.Sc
- B.Lit (tamil)



2017/2018 கற்கைநெறிகளுக்கான முதலாம் ஆண்டுக்குரிய பரீட்சைகள் September முதலாம் வாரம் ஆரம்பமாகின்றது.


# மரண அறிவித்தல்

## திருமதி புஸ்பலதா கஜேந்திரன் (புஸ்பா)



உயிராக 17.08.1982

உணர்வாக 05.07.2018

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பலதா கஜேந்திரன் நேற்று (05.07.2018) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வைத்தியலிங்கம் - இராசலெட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஓங்காரநாதன் - தனபாக்கியலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், கஜேந்திரனின் (சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் வேலணை) அன்பு மனைவியும்,தேனுப்பிரியன், காவியா, துளக்சிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், யசோதாரன் (துபாலகம் - புங்குடுதீவு), ஸ்ரீலதா (ஆசிரியை - யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), விஜயலதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயமாலா, ரட்ணேஸ்வரன், சசீந்திரா, சிவகுமார் (லண்டன்), சுரேந்திரன், குலேந்திரன் (தேனு ஸ்ரோர்ஸ், புங்குடுதீவு) சக்தி தாஸ், ஜெயேந்திரன், ஜெகதாஸ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2018) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புங்குடுதீவு மணல்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 300 1456** (cs.18019) (13)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

மதுரகவி அருளானந்தன்

# இறைவன்

## ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருள்






**பரம்பொருள்**
இறைவன் ஒருவன். அவனே பரம்பொருள். அவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். அவன் ஒருவனே மெய்ப்பொருள்.
அவனுக்கு ஈடான பொருள் ஒன்றும் இல்லை. இதனைத் திருக்குறள் குறிப்பிடும் போது "தனக்குவமை இல்லாதான்" என்கிறது. அதேபோன்று "ஒன்று அவன்தானே" என்று குறிப்பிடுகிறது திருமந்திரம். மாணிக்கவாசகப் பெருமான் திரு வெம்பாவையில் இறைவனை பாடிப் பரவுகின்ற போது,
**"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே"**
என்று பாடுகிறார். இவை அனைத்தும் சைவ மரபின் இறைவன் ஒருவனே என்ற கோட்பாட்டை வலியுறுத்துவன.

**பசுபதி**
இறைவன் பசுபதி எனப் போற்றப்படுகின்றான். பசு என்றால் ஆன்மா. பதி என்றால் தலைவன். எனவே ஆன்மாக்கள் அனைத்துக்கும் தலைவன் இறைவன். அவனைச் சிவம் எனப் போற்றுவது சைவ மரபு.
இறைவன் எங்கும் நிறைந்தவன். அவன் உள்பொருளாகவும், அறிவுடையபொருளாகவும், இன்பமயமான பொருளாகவும் விளங்குகின்றான். ஆதலால், இறைவன் சச்சிதானந்தன் எனவும் அழைக்கப்படுகின்றான். இறைவன் அருவம், அருவுருவம், உருவம் என்றும் மூன்று திருமேனிகளை எடுத்து ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றான்.
இறைவன் எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்து இருக்கிறான். அவ்வாறு எங்கும் வியாபகமாய் உள்ள இறைவனை உணர்வதற்கு உருவம் துணை செய்கிறது. அந்தவகையிலே இறைவன் எங்கு இருக்கிறான் என்பதை அறிந்தும் தெரிந்தும் கொள்ள ஓர் கதை படிப்போம்.

**கதையாடல்**
திருமணம் ஆகவேண்டிய பெண் ஒருத்தி இருந்தாள். அவளுடைய பெற்றோர், சொந்தத்திலேயே முறைப் பையனைப் பார்த்து அவனுக்கு அவளைத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர்.

**ராஜாவே பெரியவன்**
ஆனால் அந்தப் பெண் "புருஷர்களில் எல்லாம் உயர்ந்தவன் எவனோ அவனைத்தான் நான் திருமணம் செய்து கொள்வேன்" என்ற மன வைராக்கியத்தை கொண்டிருந்தாள். பிடிவாதம் செய்தாள். பெற்றோரும் அவளுடைய விருப்பத்தை ஏற்றுக்கொண்டனர். புருஷர்களுக்குள்ளேயே உயர்ந்தவர் ராஜாதான். எனவே எனக்குத் திருமணம் நிகழ்ந்தால் அவரோடுதான் நிகழ வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டிருந்தாள். அவ்வூர் ராஜாவைப் பின்தொடர்ந்தாள்.

**துறவியே பெரியவன்**
ஒருநாள் ராஜா பல்லக்கில் பவனிவந்து கொண்டிருந்தபோது எதிரில் காவியுடையுடன் ஒரு துறவி வந்து கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் ராஜா பல்லக்கை நிறுத்தி, அதிலிருந்து இறங்கி வந்து பய பக்தியோடு துறவியை வணங்கி ஆசிபெற்றார். மீண்டும் பல்லக்கிலமர்ந்து பவனி வந்தார்.
இந்தக் காட்சிகளை கண்ணுற்ற அந்தப் பெண், "ராஜாதான் புருஷர்களில் உயர்ந்தவர் என்று எண்ணி இத்தனை நாளும் ஏமாந்து விட்டேனே. ராஜாவே வணங்கக்கூடிய அளவுக்கு பெருமையுடைய இந்தத் துறவிதான் புருஷர்களிலேயே உயர்ந்தவர்" என்ற முடிவுக்கு வந்தாள். ராஜாவைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென தான் கொண்டிருந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். அந்தத் துறவியையே தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற திடமான எண்ணத்தை புதுப்பித்துக்கொண்டாள். துறவியைத் பின் தொடர்ந்தாள்.

**பிள்ளையாரே பெரியவர்**
ஒருநாள் துறவியானவர் ஆலமரத்தடியில் எழுந்தருளி இருந்த பிள்ளையாரை வழிபாடு இயற்றிக் கொண்டிருந்தார். தலையில் குட்டிக் கொண்டு தோப்புக் கரணம் போட்டு பிள்ளையாரை வணங்கினார். இதனை அந்தப் பெண் கண்ணுற்றாள்.
மீண்டும் சிந்தனைவயப்பட்டாள். துறவியைவிடவும் ஆற்றல் வாய்ந்தவர் இந்தப் பிள்ளையாரே தான் என்ற முடிவுக்கு வந்தாள். துறவியையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என தான் கொண்டிருந்த எண்ண விருப்பையும் மீள் புதுப்பித்துக் கொண்டாள். பிள்ளையாரைத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தாள்.

**ஐந்தறிவு ஜீவனே பெரியது**
இந்த சந்தர்ப்பத்திலே தெருவோரமாய் போய்க்கொண்டிருந்த நாய் ஒன்று பிள்ளையார் சிலைக்கு அருகாக வருகை தந்தது. தனது இயல்பாளுமையின் வழி கால்களைத் தூக்கிக் கொண்டு-சிறுநீர் கழித்துவிட்டு சென்றது. அதைப் பார்த்தவுடன் "அடடா..! இந்தப் பிள்ளையாரை விடவும் உயர்ந்தது இந்த ஐந்தறிவு படைத்த நாய்தான்" என எண்ணி அதனைப் பின் தொடர்ந்து போக ஆரம்பித்தாள். பயண வழியில் தெருவில் பாய்ந்து ஓடுகிற நாயை கண்டதும் பையன் ஒருவன் கல்லால் அதனை அடித்து விரட்ட முற்பட்டான். அது வலி தாங்க முடியாது குரைத்துக் கொண்டு ஓடியது.

**ஆறறிவுடைய மனிதனே சிறந்தவன்**
இந்த நிலையிலே சம்பவத்தை அவதானித்த பையன் ஒருவன், "உனக்கு அறிவிருக்கிறதா..? ஏன் அந்த ஐந்தறிவு ஜீவனை கல்லால் அடித்தாய்..?" என்று உரத்த தொனியில் சத்தமிட்டான். அந்தப் பையனை அதட்டினான். இந்தச் சம்பவங்களையும் அவதானித்த அந்தப் பெண் ஐந்தறிவு ஜீவனுக்காய் இரக்கம் காட்டிய அந்தப் பையனே புருஷர்களில் உயர்ந்தவன் என்ற முடிவுக்கு வந்தாள்.

இறுதியாக அவளுடைய முடிவும் பெற்றோரின் முடிவும் ஒருமிதமாகவே இருந்தது. ஆம், மிகத் தொலைவில் தனக்கு பொருத்தமான யாரோ இருப்பதாக எண்ணி அவள் சுற்றிய போதும் அவளுக்குப் பொருத்தமானவன் அருகிலேயே இருந்தவனாகப்போய்விட்டான்.

**உள் பொருளாய் இறைவன்**
அதுபோலவே, "எங்கோ தூரத்தில் இருக்கிறான் கடவுள்" என்று ஊரெல்லாம் நாம் சுற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் இருந்து நாம் விடுபட வேண்டும். உண்மையில் தெரியாதவரை அவன் தூரத்தில் இருப்பவன் தான். ஊரெல்லாம் சுற்றினாலும் அவனைப் பார்க்க முடியாது. அவன் எங்கள் அருகாகவே இருக்கிறான். எம் உள்ளத்திலேயே எழுந்தருளி இருக்கிறான் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.




# வீழ்வது எழுவதற்கே

ஒரு விவசாயியிடம் வயதான கழுதை ஒன்று இருந்தது. அந்தக் கழுதை ஒருமுறை நீர் வற்றிப் பாழடைந்து போயிருந்த அவனது தோட்டக் கிணற்றில் தவறி விழுந்து விட்டது. அதை மீட்டெடுப்பதற்கான செலவு அந்த வயதான கழுதையின் பெறுமதியை விட அதிகமாக இருந்தது. எப்படி இந்தக் கழுதையைக் கொன்றொழிப்பதென்று எண்ணியிருந்த விவசாயிக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது. எனவே அயலவர்களின் உதவியுடன் அருகிலிருந்த மண்மேட்டை வெட்டி கிணற்றுக்குள் போட்டு மூட ஆரம்பித்தான். கழுதை மீது மண் விழுகின்ற போது அது அலறியடித்துக் கதறியது. சிறிது நேரத்தின் பின்பு மண் கிணற்றுள் விழுந்து கொண்டிருந்த போது கழுதை கத்துவதை நிறுத்தி விட்டது. விவசாயிக்கு ஆச்சரியம் இவ்வளவு விரைவாக கழுதை இறந்து விட்டதே என்ற மகிழ்ச்சியோடு கிணற்றுக்குள் எட்டிப்பார்த்தான்.



அவனுக்கு வியப்பாக இருந்தது. கழுதை அவர்கள் போட்டிக்கொண்டிருந்த மண்திட்டின் மேல் எழுந்து நின்றது. எப்படி?கழுதை மீது இவர்கள் ஒவ்வொரு முறையும் மண்ணைப் போட்ட பொழுது முதலில் பயந்து அலறிய கழுதை, பின்னர் மண் தன் மீது விழும் ஒவ்வொரு முறையும் தனது உடலைச் சிலிர்த்து மண்ணைத் தன் காலடியில் உதறிக்கொட்டி விட்டு அதன் மீது ஏறி மேலெழத் தொடங்கியது.

விவசாயியும் அயலவர்களும் தொடர்ந்துவிரைவாக மண்ணை அள்ளிக் கிணற்றுக்குள் போட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அதே வேகத்துடன் அவற்றையெல்லாம் விடா முயற்சியால் உதறிவிட்டபடி கழுதை கிணற்றுக் கட்டின் மட்டம் வரை வந்து மகிழ்வோடு கத்திக்கொண்டு தோட்டத்தினுள் ஓடி மறைந்தது. விவசாயியும் அயலவரும் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஏமாந்து கழுதை சென்ற திசையைப் பார்த்தபடியே நின்றனர்.





## ஜோர்ஜ் ஸ்டிவின்சன்

முதன் முதலில் தண்ட வாளத்தின் மீது செல்லும் புகை வண்டியை உருவாக்கி ஓட்டிக் காட்டியவர் ஜார்ஜ் ஸ்டிவின்சன் ஆவார். இவர் இங்கிலாந்தில் நியூகாசில் நகருக்கு அருகில் 'வைலம்' என்னுமிடத்தில் 1781இல் பிறந்தார். இவரது தந்தையார் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி. சுரங்கத்தில் ஊறும் நீரை எந்திரங்கள் மூலம் வெளியேற்றுவதே இவர் வேலை. ஏழ்மையில் பிறந்த ஸ்டிவின்சன் பள்ளிக்குச் செல்லவில்லை. பண்ணையில் வேலைக்கு அமர்ந்தார். சிலசமயம் தந்தைக்கு உதவியாயிருந்தார். எந்திரத்தில் பழுது ஏற்பட்டால் அதனைப் பாகம் பாகமாகப் பிரித்துத் திருத்துவார். அந்தக்காலத்தில் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரியைத் துறை முகத்திற்கு எடுத்துச் செல்ல குதிரை பூட்டிய ரயில் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. குதிரைகளுக்குப் பதிலாக நீராவி எஞ்சினைப் பயன்படுத்தலாம் என்று இவர் கூறியதோடு நில்லாது 1825ஆம் ஆண்டில் ஸ்டாக்டன் டார்லிங்டன் என்னுமிடங்களில் 'தண்டவாளம் அமைத்து ரயிலை ஓட்டிக்காட்டினார். மணிக்கு 25கிலோமீற்றர் வேகத்தில் அந்த ரயில் சென்றது. மக்கள் ஏறிச்சென்ற முதல் புகைவண்டி இதுவாகும். அதன் பின்னர் மரஸ்செஸ்டர் நகரங்களுக்கிடையே எஞ்சின் கொண்டு ரயிலை ஓட்டினார். அவருக்குப் பல பரிசுகள் வழங்கப்பட்டன. நியூகாசின் நகரில் எஞ்சின்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவினார். புதியவகை எஞ்சின்கள் பலவற்றைச் செய்து பல இடங்களிலும் பாதைகளை அமைத்து ரயில்களை ஓட்டிக்காட்டினார்.

அவரைப் பின்பற்றி மற்றநாடுகளிலும் புகையிரப்பாதைகள் புதிதாக அமைக்கப்பட்டு ரயில்கள் ஓடின. ஸ்டிவின்சனின் புகழ் உலகமெங்கும் பரவியது. ஏழ்மையில் பிறந்த அவர் ஏராளமான செல்வத்தைச் சம்பாதித்தார். இருந்தும் எளிமையாகவே வாழ்ந்தார். தம்மைப் பாராட்டி வழங்கப்பட்ட விருதுகளைக்கூட அவர் ஏற்க மறுத்தார். இவ்வாறு புகழ் உச்சியில் இருந்துஸ்டிவின்சன் 1884ஆம் ஆண்டில் காலமானார்.

## இரு படங்களுக்கும் இடையே 05 வேறுபாடுகள் உள்ளன; கண்டுபிடியுங்கள்





## மின்னல்... மின்னல்

மின்னலால் ஒரு நன்மை உண்டு. அது வளரும் செடிகளுக்குத் தேவையான நைதரசனை அளிக்கிறது. ஆனால் அதுவே காட்டுத் தீக்கும் காரணமாவதால் பெரும் அழிவையும் உண்டு பண்ணுகிறது.

அதிகமான இலத்திரன்களைக் கொண்ட அணுக்கள் தம்மைச் சமன் செய்து கொள்ள குறைவான இலத்திரன்களைக்கொண்ட அணுக்களை நோக்கியும் பாயும் பாய்ச்சலே மின்னல். மின்னல் ஏற்படும்போது வெளிப்படும் சக்தி சுற்றுப்புறத்திலுள்ள காற்றை வெப்பமடையச் செய்கிறது. வெப்பமடைந்த காற்று விரிவடையும்போது எழும் சத்தமே இடியாகும். மின்னலும் இடியும் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் உண்டாகின்றன. ஆனாலும் மின்னலைக் கண்ட சில செக்கன்களுக்குப் பிறகு தான். இடியின் ஒலியைக் கேட்கிறோம். காரணம் ஒலி அலையைவிட ஒளி அலைக்கு வேகம் பலமடங்கு அதிகம்.

# நகைச்சுவை ஞானிகள்

ஒரு நகைச்சுவைப் பேச்சாளர் மேடையில் ஏறினார். கூட்டத்தைப் பார்த்து "இப்போது நான் உங்களுக்கு ஒரு 'ஜோக்' சொல்லப் போகிறேன்" என்றார்.

அவ்வளவுதான் உடனே அங்கிருந்த எல்லோரும் வாய் விட்டுச் சிரித்து விட்டார்கள். மேடையில் இருந்த ஒருவர் அவரிடம் " நீங்கள்" ஜோக் இன்னும் சொல்லலை அதுக்குள்ள எல்லோரும் சிரிச்சுட்டாங்களே எப்படி?என்றார்.

"அது தான் எனக்குப் புரியல்ல. எதுக்கும் அவங்ககிட்டேயே கேட்டிடுங்க..." என்றார் பேச்சாளர். அவர் காரணம் கேட்டதும் கூட்டத்திலிருந்தவர்கள் சொன்னார்கள் "ஐயா... நாங்கள் சிரிக்கவில்லை என்றால் அவர் ஜோக் சொல்ல ஆரம்பிச்சிடுவார்... அதனாலேதான்!"

இப்படி மக்களைப் பயமுறுத்தி சிரிக்க வைக்கிறவர்களும் உண்டு. பக்குவமாகச் சிரிக்க வைக்கிறவர்களும் உண்டு.

ஓர் இடத்தில் இரண்டு நண்பர்கள் சந்தித்துக் கொண்டார்கள். "இப்போது உனக்கு வயது என்ன ஆகிறது?" "நாற்பது...!"

"இன்னமும் உனக்குக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே வரவில்லையா?"என்ன செய்கிறது? எனக்கு பிடித்தமான ஒரு பெண் இன்னமும் கிடைக்கவில்லையே!

" தேடினாத்தானே கிடைக்கும்?"

"தேடாமே இல்லை... எந்த வகையிலும் குறையில்லாத ஒரு பெண்ணைத் தேட ஆரம்பிச்சேன். உலகம் முழுவதும் தேடினேன். முதலில் ஸ்பெயின் நாட்டில் ஒரு பெண்ணைப் பார்த்தேன். அவ அழகாய் இருந்தா. ஆனால் அறிவு போதாது. பின்பு கொரியா நாட்டிலே ஒரு பெண்ணைப் பார்த்தேன். அறிவாளியாக இருந்தா. ஆனா அழகு இல்லை. மறுபடியும் தேட ஆரம்பித்தேன். இந்தியாவிலே ஒரு பெண் கிடைச்சா நான் நினைத்தது மாதிரியே அழகாகவும் அறிவாளியாகவும் இருந்தா...!"அப்படியென்றால் அவளைக் கலயாணம் பண்ண வேண்டியது தானே"

"அதுதான் முடியவில்லை"

"ஏன்?

"அந்தப் பெண்ணும் அழகாகவும் அறிவாளியாகவும் இருக்கிற .ஒரு பையனைத் தேடிக் கொண்டிருக்கிறாளாம்"



இந்த உலகத்தில் மற்றவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோயோ அது மாதிரியே நீ இருக்கிறாயா என்பதை முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும்.

## தாயகத்தின்...

விடுதலைப் புலிகள் அமைப்பின் முதல் கரும் புலி கப்டன் மில்லர் உயிர்நீத்த நெல்லியடியில் மறுவாழ்வு அழிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் கட்சி நினைவேந்தல் நடத்தியது.

முதன்மைச் சுடர் மாவீரர் ஒருவரின் உறவினரால் ஏற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து சுடரேற்றியும், மலர்தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாலை வல்வட்டிதுறை குமரப்பா நினைவு தூபி முன்பாகவும், வல்வெட்டித்துறை சங்கர் நின்னவு தூபியிலும் நினைவேந்தல் நடத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் தினம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலும் நினைவேந்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று இரவு 6.05 மணிக்கு நினைவுச் சுடரேற்றப்பட்டு நினைவேந்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் கிருஸ்ணமேனனைக் கேட்டபோது தாங்கள் அவ்வாறான நிகழ்வை ஏற்பாடு செய்யவில்லை என்று தெரிவித்தார். (ற-7,8,26)

## இந்திய...

பட்டுள்ளது. இந்த வழக்குகள் யாழ்ப்பாணம் நீரியல்வளத் திணைக்களத்தால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. எதிர்வரும் 12ஆம் திகதி குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

நெடுந்தீவுக் கடலில் மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 12 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீதே முதன்முதலாகப் புதிய சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழமையாக இவ்வாறு இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படும்போது மாவட்ட நீரியல்வளத் திணைக்களம் முதல் அறிக்கையைச் சமர்ப்பித்து விளக்கமறியல் அனுமதியைப் பெறும். அதன்பின்னர் சட்டமா திணைக்களமே வழக்கைத் தாக்கல் செய்து நடத்தும். புதிய சட்ட ஏற்பாட்டின்படி நீரியல்வளத் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்து நடத்தும்.

இதன்பிரகாரம் 1979ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க வெளிநாட்டுக் கலங்கள் மீன்பிடிச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை இந்தச் சட்டத்தின் மூலம் சட்டமா அதிபர் திணைக்களம் மேன்முறையீட்டு நீதிமன்றில் மட்டும் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்ற சட்ட ஏற்பாடு காணப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் மூலம் நீரியல்வளத் திணைக்களத்தினர் அந்தந்த மாவட்டத்திலுள்ள நீதி மன்றங்களில் இந்தச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யமுடியும்.

அனுமதி இன்றி நாட்டுக்குள் நுழைந்த குற்றச்சாட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்படும். அதனால் பல லட்சம் ரூபா தண்டம் செலுத்த நேரிடலாம், என்பதுடன் நீண்டகால சிறைத் தண்டனையும் விதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-105)

## அக்கராய...

13ஆம் நூற்றாண்டில் பொலநறுவை ராசதானிக்குப் பின்னர் வன்னிப் பிரதேசம் தமிழ் அரசர்களால் ஆளப்பட்டது. அவர்களில் ஒரு மன்னனே அக்கராயன். அவரது ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் ஒன்றே அக்கராயன் என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

மன்னனின் உருவச் சிலையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா திறந்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராஜா, ப.அரியரத்தினம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம், கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-35)

## சிறுத்தை...

ரம் ரூபா காசுப் பிணையிலும், இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல நீதிமன்று அனுமதியளித்தது.

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்துக்குள் புகுந்த சிறுத்தை ஒன்று 10 பேருக்கு மேற்பட்டவர்களைத் தாக்கியது என்று தெரிவித்து அந்தச் சிறுத்தை அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் அடித்துக் கொல்லப்பட்டது.

அந்தச் சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். சிறுத்தை கொலை செய்யப்பட்டதன் பின்னர் அதனைத் துன்புறுத்தி ஒளிப்படங்கள் எடுத்துக் கொண்டவர்களுக்கு எதிராகவே அந்த வழக்குத் தொடுக்கப்பட்டது. அதற்கான ஆதாரங்களை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் இறுவட்டு மூலம் மன்றில் சமர்ப்பித்தனர்.

அவற்றை அடிப்படையாக வைத்து அந்த ஒளிப்படத்தில் உள்ளவர்கள் அனைவரையும் கைது செய்யுமாறு மன்று பொலிஸாருக்கு அறிவித்தது. நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார் இருவரைக் கைது செய்திருந்தனர். நால்வர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். அவர்கள் ஆறு பேரும் கடந்த 29ஆம் திகதி மன்றில் முற்படுத்தப்பட்டபோது மேலும் நான்கு பேர் பொலிஸாரிடம் சரணடைந்தனர். அவர்கள் 10 பேரும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (ற-35)

## புதிய...

கெசாப் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்கள் நிறைவேற்றப்படுவதில் அரசு மிகத் தாமதமான நகர்வுகளை கையாள்கின்றது. பொறுப்புக்கூறல் விடயத்தில் எந்தவித ஆரோக்கியமான நகர்வுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் தற்போது நிலவும் தாமதங்களுக்கான நியாயபூர்வமான எந்தவொரு காரணத்தையும் எம்மால் இனங்காண முடியாதுள்ளது. பன்னாட்டுச் சமூகத்திற்கு அரசு வழங்கிய வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இலங்கை மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட பன்னாட்டுச் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை இலங்கைஅரசு முழுமையாக நிறைவேற்றாமல் இருக்கின்றது.

ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்ற போது அரசமைப்பின் மூலமாக நாட்டில் உள்ள அனைவரும் நன்மையடைவார்கள். இதனை சரியாக மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய கடமை தலைமைகள் அனைவருக்கும் உள்ளது. அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவது கடினமான விடயமல்ல.

வடக்கு, கிழக்கு உள்ளடங்கலாக நாட்டில் அனைத்து பகுதிகளிலும் வாழும் பெரும்பான்மையான தமிழ் மக்கள் பிரிபடாத, பிரிக்க முடியாத இலங்கைநாட்டுக்குள்ளேயே தீர்வொன்றை எதிர்பார்க்கிறார்கள், எவ்வாறெனினும் எண்ணிக்கையில் பெருமளவில்லாத குரலெழுப்பும் சிலர் ஒரு தீவிரமான போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள். அடிப்படை வாதிகளை அமைதிப்படுத்துவதற்காகவும் அவர்கள் சமூகத்திலே கொண்டு வரக்கூடிய எதிர்மறையான விளைவுகளையும் தடுப்பதற்குமுள்ள ஒரே வழிமுறை அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதேயாகும். எமது கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை.

அரசு இவற்றை நிறைவேற்ற முடியாமல் போகும் பட்சத்தில் தமிழ் மக்கள் ஒருபோதும் இந்த நாட்டில் இரண்டாந்தர குடிமக்களாக வாழ மாட்டார்கள் - என்றார்.

அதுல் கெசாப் சந்திப்பில் குறிப்பிட்டதாவது அமெரிக்காவை பொறுத்தவரையில் ஐ.நா. மனித உரிமை சபையின் தீர்மானமானது நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இரு நாட்டினதும் பல்வேறு உறவுகளுக்கு இது அடிப்படையானதொன்று. நிலையான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு நாட்டின் குறிக்கோள்கள் சாதகமானவையாக காணப்படவேண்டும். பன்னாட்டு அரங்கில் இலங்கை பெற்றுள்ள நன் மதிப்பை அலட்சியமாக எடுத்துவிடக்கூடாது. புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்ற போது இலங்கை அரசு வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வது மாத்திரமல்லாது பொருளாதார ரீதியில் பெரிய நன்மைகளை அடைய முடியும். அமெரிக்கா இலங்கையின் முன்னேற்றம் தொடர்பில் தொடர்ந்தும் ஆக்கபூர்வமான ஈடுபாட்டினை கொண்டிருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன், கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டிருந்தார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரோடு அமெரிக்கத் தூதரகத்தின் பிரதி பிரதானி றொபேர்ட் ஹில்டனும் அரசியல் பிரிவிற்கான உத்தியோகத்தர் ஜோயன்ன பிரிசெட்சனும் கலந்து கொண்டிருந்தனர். (ற-5)

## ஒஸ்டின்...

ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து பதவியை வகித்து வந்த நிலையிலேயே நேற்று அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளார். இலங்கையின் மூத்த நிர்வாக அதிகாரியான அவர் சிறிஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் அரச நிர்வாகம் தொடர்பான பட்டதாரியாவார்.

அவர் பொலன்னறுவை மற்றும் நுவரெலிய மாவட்ட செயலராகக் கடமையாற்றியுள்ளதுடன் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகவும் பதவி வகித்துள்ளார். மறுவாழ்வு, அரசநிர்வாகம், உள்ளக விவகார, மாகாண சபை விவகார அமைச்சுகளின் செயலராகவும் கடந்த காலங்களில் அவர் கடமையாற்றியுள்ளார். (ற-5,31)

## விலகினார்...

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கடந்த திங்கட்கிழமை, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் முன்பாக விடுதலைப் புலிகள் தொடர்பில் தெரிவித்திருந்த கருத்து தென்பகுதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்த விவகாரம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியானது விசாரணை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தனது அமைச்சுப் பதவியைத் துறந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் புதன்கிழமை அலரி மாளிகையில் விஜயகலாவைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

எனது கருத்து தென்பகுதியில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதால் கட்சியின் விசாரணைக்கு ஒத்துழைக்கும் வகையில் தற்காலிகமாக அமைச்சுப் பதவியைத் துறப்பதற்கு நான் தயாராக உள்ளேன். அதற்கான அனுமதியை தர வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் ரணிலிடம் கோரியுள்ளார்.

நேற்றுமாலை இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதற்கான கடிதத்தை விஜயகலா மகேஸ்வரன் மைத்திரிக்கும், ரணிலுக்கும் அனுப்பியுள்ளார். (ற-5,71)

## மாகாண...

வேளைப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது. கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இன்று சமர்பிக்கப்படவுள்ள ஒத்திவைப்புவேளைப் பிரேரணையில் கூறப்பட்டுள்ளதாவது 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துடன் 3 மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது. தேர்தல் முறையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக மாகாண சபைத் தேர்தல் சட்ட விதிகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதால் மேற்கூறிய 3 மாகாண சபைகளினதும் தேர்தல்கள் இன்று வரை நடைபெறாதுள்ளது. அதே வேளை, 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துடன் மேலும் மூன்று மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடையவுள்ளது. தேர்தல் சட்ட சீர்த்திருத் தங்கள் இன்னும் முடிவடையாதுள்ளதனால் எந்தவொரு மாகாண சபைக்கும் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

தேர்தல் சட்ட விதிகளின் திருத்தமானது உடனடியாகச்செய்து முடிக்கப்படவேண்டிய தேவை இதனால் எழுகின்றது. இதன் மூலம் பல்வேறு மாகாணங்களைச் சேர்ந்த மக்களின் உரிமைகள் மேலும் மறுக்கப்படாமல் செய்ய முடியும். மாகாண சபைத் தேர்தல் சட்ட விதிகளில் சீர்திருத்தத்தை உடனடியாக மேலும் தாமதமின்றி செய்து முடிக்குமாறு நாம் அரசை வலியுறுத்துகின்றோம். எதிர்வரும் 2 மாதங்களுக்குள் இந்த சீர்திருத் தங்களை செய்யத் தவறும் பட்சத்தில் 2017 ஆம் ஆண்டு மாகாண சபை (திருத்தம்) சட்டம் இல.17 உடனடியாக நீக்கப்படுவதன் மூலம் தேர்தலை உடனடியாக நடத்தி முடிக்க அரசை நாங்கள் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ற-5,31)

## யாழ்...

யில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் நடேசமூர்த்தி சிவமைந்தன் வெண்கலப் பதக்கம் பெற்றுள்ளார்.

2013 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ்ஸில் நடைபெற்ற போட்டியிலும், 2014ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் இடம்பெற்ற போட்டியிலும், 2015ஆம் ஆண்டு சீனாவில் இடம்பெற்ற போட்டியிலும் கலந்துகொண்டு ஒருதடவை வெள்ளிப்பதக்கமும், இரு தடவைகள் வெண்கலப்பதக்கமும் பெற்ற இவர், இந்த முறை சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்காக பல்கேரியா சென்று வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார். பன்னாட்டு ரீதியில் இந்தப் போட்டிக்காகத் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு தமிழ் மாணவன் இவராவார். (ற-114)

## பொலிஸார்...

டிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலின்படி பிறமாவட்டங்களில் இருந்து நூறு பொலிஸார் யாழ்ப்பாணத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் பல இடங்களில் வீதிச் சோதனையிலும், ரோந்துக்களிலும் ஈடுபட்டுள்ளனர். (ற-8,26)

வேலையாள்கள் தேவை
மேசன் வேலை
தெரிந்தவர்கள் தேவை
076 837 0548/ 077 203 3131

இரசாயனம் CHEMISTRY
இரு மொழிகளிலும்
MCQ MAGIC
(விசாகா, றோயல், தேவிபாளிகா)
50 MCQ விற்குமான ஒரே மாதிரிவினாக்களை ஒன்றாக்கல். Personal / Group Classes
Singam Master - 077 773 0840
2019 / 2020 வகுப்புக்கள்

உ
சிவமயம்
சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.
பொதுக்கூட்டம் - 29.07.2018
சபை உறுப்பினர்கள் கவனத்திற்கு.
பிரேரணைகளை 11.07.2018 க்கு முன்னர் கிடைக்க 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பவும்.
செயலாளர்

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 157
சீட்டிழுப்பு திகதி ▶ 05.07.2018 வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 42 56. 59
விதி.எண்: 05
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 31,017, 472/=
ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| 6877522 | குருனாகல் |
| 5886985 | யாழ்ப்பாணம் |
| 5945136 | காலி |
| 7111065 | கண்டி |
| 9133144 | அனுராதபுரம் |

2018.07.07 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

அதிர்ஷ்ட கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 302
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.07.05
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 80,060,620/-
வெற்றி இலக்கங்கள்
21 34 43 53 K
தொ.பே: 011 4062002 / 0114052062 Web: www.dlb.lk
SMS: DLB LOT A Ken டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தூர் அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச செயலகத்தில் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு கஜேந்திரன் அவர்களின் பாசமிகு மனைவி

தோற்றம் 17.08.1982 மறைவு 05.07.2018



**கஜேந்திரன் புஸ்பலதா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலகம் உத்தியோகஸ்தர்களும் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம் – வேலணை (CS/18061)(11)

# முதலாம் ஆண்டு நினைவு நாள்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

பிறப்பு 07 12 1932 — இறப்பு 17 07 2017



**அமரர் சங்கரப்பிள்ளை பரமேஸ்வரன்**
**(06.07.2018)**

ஏவிளம்பி நல்லாண்டு பரவிட நல் ஆடி திங்கள்
அபரபட்ச அட்டமித் திதியில் பூவுடல்
நீத்த சங்கரப்பிள்ளை பரமேஸ்வரனும்
மாவைக் கந்தன் பாதம் நல்லிய நாள்

கொல்லன்கலட்டி,
தெல்லிப்பழை. **ப. ரமணன் (மகன்)**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## கிருஸ்ணசாமி வெற்றிவேலாயுதம்

(வெற்றி, ராசன் பத்தர்) (லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம், வலம்புரி நாளிதழ் முன்னாள் ஊழியர்)



யாழ்ப்பாணம் தட்டா தெருவைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் சொர்ணவடலியை வசிப்பிடமாகவும், கொண்ட கிருஸ்ணசாமி வெற்றிவேலாயுதம் நேற்று (05.07.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி இந்திராணி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற கந்தசாமி, குணசிங்கம், புஸ்பராணி மற்றும் பவளராணி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ரஞ்சினிதேவியின் அன்புக்கணவரும் டாலினி, சுஜீவன், மதுராந்தகி, அபிநயா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூத்வுடல் யாழ். கோம்பயன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**தகவல் : குடும்பத்தினர்**

## மக்களுக்காகவே...

வடக்கு மக்களுக்காக எனது அமைச்சுப் பதவியைத் துறந்துள்ளேன் என்று சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் வன்முறைகளும் குற்றச் செயல்களும் அதிகரித்துள்ளன. ஆறு வயதுச் சிறுமி படுகொலை செய்யப்பட்டுள்ளார். 59 வயதான வயோதிபப் பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் வீட்டில் கொள்ளையும் இடம்பெற்றுள்ளது. வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் மக்களின் துன்பங்களைத் தாங்கமுடியாது புலிகளின் காலத்தை நினைவூட்ட வேண்டிய நிலமை ஏற்பட்டது.

மக்களின் துன்பங்களை வெளிக்கொணர வேண்டியது அவர்களது பிரதிநிதியான எனது கடமையாகும். இதனால்தான் மக்களின் துன்பங்களை வெளிக்கொண்டு வரும் வகையில் எனது கருத்தைத் தெரிவித்திருந்தேன். இந்தக் கருத்து தென்பகுதியில் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமையால் இந்த விடயம் தொடர்பில் கட்சித்தலைமைக்கு விளக்கம் அளித்துள்ளேன்.

கடந்த செவ்வாய்க்கிழமை தலைமை அமைச்சரும் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது என்னுடன் தொடர்பு கொண்டு எனது கருத்துக் குறித்து கலந்துரையாடினார். இதன்போது எனது நிலைப்பாட்டினை அவருக்கு விளக்கிக் கூறினேன். எனது கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமையால் வேண்டுமானால் அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதற்கு நான் தயாராகவுள்ளதாக நான் எடுத்துக்கூறினேன். ஆனால் அதனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

இதன் பின்னர் கொழும்பு திரும்பிய நான் புதன்கிழமை மாலை தலைமை அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் வடக்கில் குறிப்பாக குடாநாட்டில் இடம்பெற்று வரும் போதைப்பொருள் பாவனை, வன்முறைகள், படுகொலைகள் தொடர்பில் எடுத்துக்கூறியதுடன் மக்களின் துன்பங்களைப் பொறுக்க முடியாமையால் தான் நான் உரையாற்றியதாக விளக்கமளித்தேன். தற்போது எனது உரை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளமையால் கட்சியின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தற்காலிகமாக அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதற்கு நான் தயார் என்று எடுத்துக் கூறினேன். அதற்கிணங்கவே நான் எனது அமைச்சுப் பதவியைத் துறந்துள்ளேன்.

எனது மக்களுக்காக குரல் எழுப்பியமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை தொடர்பிலான எத்தகைய விசாரணைகளையும் எதிர்கொள்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன். வடக்கு மக்கள் எம்மை தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காகவுமே தெரிவு செய்துள்ளனர். அவர்கள் துன்பப்படும்போது நாம் பேசாதிருக்க முடியாது. மக்களுக்காக அமைச்சுப் பதவியை துறந்தமை தொடர்பில் நான் பெருமை கொள்கின்றேன் - என்றுள்ளது. (ந-5,31)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1480
சீட்டிழுப்பு திகதி 05.07.2018
வெற்றி இலக்கங்கள்
18 20 24 65 Z
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
ரூ 10, 000, 000/=
தொ.பே: 011 4062002 / 0114052062 Web: www.dlb.lk
SMS: DLB LOT JY டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தூர் அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# பனை அபிவிருத்திச்சபை
PALMYRAH DEVELOPMENT BOARD

## ஏல விற்பனை

பனை அபிவிருத்திச் சபையின் பாவனையிலிருந்து தற்போது பயன்படுத்தப்படாதிருக்கும் பழைய தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் பின்வரும் இடங்களில் எதிர்வரும் 21.07.2018 அன்று ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

1. **காரைநகர் பல்தொழில் தொகுப்பு நிலையம் காலை 9.00 மணி**
2. **இல. 465, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் மு.ப. 10.45 மணி**
3. **பனை வள ஆராய்ச்சி நிலையம் - கைதடி மு.ப. 11.30 மணி (பழைய வாகன விற்பனை)**
4. **சரசாலை பனந்தும்பு உற்பத்தி நிலையம் பி.ப. 3.00 மணி**

குறிப்பு - ஏலவிற்பனை தினத்தன்று பொருள்களை ஏலத்தில் பெற்றுக்கொண்டு உடனடியாகத் பணத்தைச் செலுத்தி குறித்த பொருள்களை எடுத்துச்செல்ல வேண்டும்.

**தலைவர், பனை அபிவிருத்திச்சபை,**
**தேசிய வீடமைப்புச் செயலகம்**
**கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு - 021 222 2034**

# மரண அறிவித்தல்

தோற்றம் 17 07 1951 — மறைவு 05 07 2018



## திருமதி யோகராணி மங்களேஸ்வரன்

சுன்னாகம், சூராவத்தையைப்பிறப்பிடமாகவும் அரசடிவீதி, இருபாலைதெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி மங்களேஸ்வரன் நேற்று (05.07.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை ராசாத்தி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மங்களேஸ்வரனின் (சாவித்திரியார்) பாசமிகு மனைவியும் செல்வமலர், மகேந்திரன் காலஞ்சென்றவர்களான கருணாகரன், பாலேந்திரன் ஆகியோரின் சகோதரியும் சாந்தி, மங்களராணி, கிருஸ்ணகுமாரன், சிவகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமானந்தம், சிவகுமார், ரஜிதேவி, கௌசிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் தேனுகா, வைஸ்ணவி, விதுஜன், சுலக்சன், பிரியங்கா, கிரிஸ்சாந், கோபிஷாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (06.07.2018) பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகஇருபாலை கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், ...ர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
...ருபாலை தெற்கு, கோப்பாய். 077 694 9790, 077 905 0309

## பதவி...

ராகவே விலகினாலோ கூட அவருக்கு எதிரான பொலிஸ் விசாரணைகள் நிறுத்தப்படாது. இவ்வாறு சட்டம் ஒழுங்கு மற்றும் அரச நிர்வாக, முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் உருவாக்கவேண்டும் என்பதே தமது முக்கிய நோக்கம் என்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தை முற்றாக எதிர்க்கின்றேன். வடக்கிலோ தெற்கிலோ எந்தப் பயங்கரவாதத்துக்கும் இடமளிக்க போவதில்லை.

அவரின் சர்ச்சைக்குரிய கூற்றுத் தொடர்பில் ரணில் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளார். அதன்படி அவர் நடவடிக்கைகளை எடுப்பார். பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றுள்ள முறைபாடுகள் தொடர்பில் தனியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விஜயகலா பதவி விலகினாலும் விலகாவிட்டாலும் அவ் விசாரணைகள் தொடரும். விரைவில் அவரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்படும் என்றார். (ந-5,71)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 140 | 80 | 80 | 140 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 220 | 120 | 140 | 200 |
| பாகல் | 280 | 260 | 280 | 240 |
| க.கிழங்கு | 100 | 120 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 120 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 140 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 |
| தக்காளி | 280 | 260 | 260 | 260 |
| வாழைக்காய் | 40 | 80 | 80 | 50 |
| கீரை | 40 | 15 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| ப.மிளகாய் | 200 | 300 | 450 | 300 |
| புடோல் | 120 | 80 | 120 | 120 |
| கோவா | 120 | 200 | 180 | 160 |
| வெண்டி | 100 | 90 | 120 | 100 |
| போஞ்சி | 320 | 250 | 280 | 260 |
| லீக்ஸ் | 240 | 260 | 280 | 360 |
| தேங்காய் | 70 | 70 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 120 | 130 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 150 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| கறிமிளகாய் | 280 | 320 | 280 | 240 |
| கரட் | 280 | 300 | 280 | 360 |
| முருங்கைக்காய் | 300 | 700 | 500 | 300 |


## இது புதுசு

ஆண்களுக்கான சப்பாத்து வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



## தினமும் முட்டை சாப்பிடலாமா?

பல்வேறு விவாதங்களின் மையப்பொருளாக முட்டை இருந்துள்ளது. சிலர் மஞ்சள் கருவை தவிர்த்துச் சாப்பிட்டால் ஆரோக்கியம் என்றும், சிலர் மஞ்சள் கருவுடன் சேர்த்துச் சாப்பிட்டால் ஆரோக்கியம் என்று கூறுகின்றனர். பல்வேறு விவாதங்களின் முடிவுக்குப் பின்னர், நாம் அறிந்து கொள்வது மஞ்சள் கரு தொடர்ந்து உட்கொள்ளக் கூடாது. இதனால் கொழுப்பின் அளவு அதிகரித்து, இதய நோய் பாதிப்பை அதிகரிக்கச் செய்கிறது.



முட்டையில் அதிகப்படியான கொழுப்பு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஒரு முட்டையில் 185 மி.கி அளவுக்குக் கொழுப்பு இருக்கிறது. ஆனால் உண்மையில் கொழுப்பின் அளவின் அதிகரிப்பது, உணவில் இருக்கும் நிறைவுற்ற கொழுப்பே(saturated fat) ஆகும். உணவில் இருக்கும் சாதாரண கொழுப்பால் எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

கொழுப்பு நிறைந்த உணவுப் பொருள்களை உட்கொண்டால், அதிலிருக்கும் கொழுப்பு பிரிந்து முழு மூலக்கூறாக உட்கிரகிக்கப்படாது. அதேசமயம் நிறைவுற்ற கொழுப்பு(saturated fat) சிறிய, சிறிய கொழுப்பு அமிலங்களாக பிரிந்து, உடல் கொழுப்பின் அளவை அதிகரிக்கிறது.

டயட்டரி கொழுப்பு அதிகமுள்ள உணவுப் பொருள்களை உண்ணும் போது, உடல் கொழுப்பை சிறிதளவே அதிகரிக்கச் செய்கிறது. நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு முக்கிய விடயம், LDL (கெட்ட கொழுப்பு) மற்றும் HDL(நல்ல கொழுப்பு) ஆகியவற்றுக்கு இடையேயான விகிதாசாரம் ஆகும். முட்டையானது LDLஐ விட, HDLஐ அதிகரிக்கச் செய்கிறது. இதன்மூலம் இதய பிரச்சினைகள் அதிகரிக்கிறது.

தினசரி ஒரு முட்டை சாப்பிட்டு வந்தால், இதய பிரச்சினைகள் ஏற்பட 11% குறைந்த வாய்ப்பே உருவாகிறது. உயிரிழப்புகளில் இருந்து 18% குறைந்த வாய்ப்பை உருவாகிறது. இதய அடைப்பு ஏற்படுவதில் இருந்து 26% குறைந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது.

முட்டை கட்டாயம் சாப்பிட வேண்டும் என்பதற்கான காரணங்கள் நீண்ட பட்டியலாக இருக்கின்றன. முட்டையில் விற்றமின் இ, போலேட், செலினியம், லுடெய்ன், புரோட்டீன், மினரல்கள் இருக்கின்றன. இந்த ஊட் டச்சத்துகள் அனைத்தும் மூளை ஆரோக்கியம், பார்வை, நோய் எதிர்ப்பு ஆகியவற்றிற்கு பெரிதும் உதவுகின்றன.

உடல் எடையை குறைக் கத் திட்டமிட்டுள்ள வர்களுக்கு, முட்டை மிகச்சிறந்த காலை உணவாகும். முட்டையில் நிறைந்துள்ள புரோட்டீன், நீண்ட நேரத்திற்கு வயிறு நிரம்பிய உணர்வை அளிக்கிறது. கார்போஹைட்ரேட் நிறைந்த காலை உணவை உட்கொண்டால், விரைவில் பசியெடுக்கும் சூழல் உண்டாகும். அதிக நார்ச்சத்து, அதிக கார்போஹைட்ரேட் கொண்ட ஓட் மீல் உடன் முட்டை சேர்த்துக் கொள்ளலாம். இதுவே ஆரோக்கிய மற்றும் அதிகப்படியான காலை உணவாக அமைகிறது.

வேக வைத்த முட்டைகள் மிக ஆரோக்கிய உணவாகும். இதனுடன் வேறு எதையும் சேர்த்து உண்ண வேண்டிய அவசியமில்லை.

## புனையப்பட்ட...

கொழும்பு, ஜூலை 6

வடக்கு மாகாணத்தில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி நடக்கின்றது என்று கூறப்படுவது முற்றிலும் பொய். இவ்வாறு தெரிவித்தார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன.

கொழும்பில் உள்ள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

தேசிய பாதுகாப்பு தொடர்பாக மக்கள் கவலையடைந்துள்ளனர் என்று நான் நினைக்கவில்லை. தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும், விடுதலைப் புலிகள் மீள் எழுச்சி பெறுகின்றனர் என்றும் கூறுவதன் மூலம் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலரே மக்களை அச்சப்படுத்த முயல்கின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொருத்தவரையில் சட்டம், ஒழுங்கு தொடர்பாகச் சில பிரச்சினைகள் உள்ளன. அவற்றைக் கொண்டு புலிகள் மீள் எழுச்சி பெறுகின்றனர் என்று கூறுவது பொய்யான தகவல்.

போர் முடிந்த பின்னர் பலர் ஆயுதங்களுடனும், வெடிபொருள்களுடனும் கைது செய்யப்படுகின்றனர். இப்படியான சம்பவங்கள் தொடர்ச்சியாக நடக்கின்றன. ஒட்டுசுட்டானில் கைது செய்யப்பட்டவர்களின் நோக்கம் என்ன என்பதை அறியும் விசாரணைகள் நடைபெறுகின்றன.

வடக்கில் அதிகரித்துள்ள பாதாள உலகக் குழுச் செயற்பாடுகள் தொடர்பாக முப்படையினரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். வடக்கில் பிரச்சினைகளை உருவாக்க விரும்பும் சிலர் இருக்கின்றனர். ஆனால் தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்பதை நிச்சயமாகக் கூற முடியும். விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்ததை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். வடக்கு மக்களுக்கு என்ன நடந்தது என்பதை அவர் நினைத்துப் பார்க்க வேண்டும். அவரது கணவரும் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார். அவரது கருத்து ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்தோ, அரசின் கருத்தோ அல்ல.

சீனா, இந்தியா உட்பட எந்த நாட்டு நீர்மூழ்கிக் கப்பல்களும் இங்கு வரலாம். ஆனால் அவர்கள் அதற்கான அனுமதியைப் பெற வேண்டும். ஆனால் எமது கடற்பகுதிக்குள் தற்போது நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளனவா என்பது கேள்விக்குறியே என்றார். (ஶ)

## திணைக்கள...

மாகாணசபை உறுப்பினர் பா.டெனீஸ்வரன் கடிதம் அனுப்பியுள்ளார்.

வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் வர்த்தகவாணிப அமைச்சின் கடிதத் தலைப்பில், அமைச்சர் எனக் குறிப்பிட்டு அவரால் திணைக்களத் தலைவர்களுக்கு நேற்றுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23ஆம் திகதி ஒரு சிலரது தவறான முடிவினாலும், நடவடிக்கைகளாலும் எனது அமைச்சுச் சார்ந்த பணிகளை முன்னெடுக்க முடியாமல் முட்டுக்கட்டை போடப்பட்டமையும், அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் தாங்கள் நன்கு அறிவீர்கள். தற்பொழுது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் பிழையென்றும், வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்துமற்றும் வர்த்தகவாணிப அமைச்சராக தொடர முடியுமென்றும், அதற்கு எவரும் இடயூறாக இருக்கக் கூடாது என்றும் மேன் முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு அண்மையில் பிறப்பித்துள்ளது. அந்த வகையில் எனது அமைச்சு சார்ந்த திணைக்கள அதிகாரிகள் என்ற வகையில் பின்வரும் பணிப்புரைகள் தங்களுக்கு இத்தால் வழங்கப்படுகின்றது.

கடந்த 29ஆம் திகதிக்குப் பின்னர் எனது அமைச்சு சார்ந்த விடயதானங்களில் அமைச்சர் என்ற போர்வையில் யாரேனும் உத்தரவு பிறப்பித்தால் அதனை முன்னெடுக்க வேண்டாம் என்றும், திணைக்களம் சார் நாளாந்த நடவடிக்கைகளுக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படாதவண்ணம் பணிகளை முன்னெடுக்குமாறும்,

2018ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மிகவிரைவாக நிறைவேற்றுமாறும், எவரேனும் அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்களுக்கும் திணைக்களத்தின் நாளாந்த செயற்பாட்டுக்கும் இடையூறாகவோ அல்லது முட்டுக்கட்டையாகவோ இருப்பின் அதனை உடன் எனக்குஅறியத்தருமாறும்,

மேற்படி பணிப்புரைகளை மீறும் சந்தர்ப்பத்தில் அதனால் ஏற்படும் சட்டவிளைவுகளுக்குத் தாங்களே பொறுப்பேற்க வேண்டுமென்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.

2018ஆம் ஆண்டுக்கான எமது அமைச்சு சார்ந்த மாகாண குறித்துரைக்கப்பட்ட நிதியின் கீழ் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் மாவட்டரீதியாக மாவட்டஉத்தியோகத்தரை உள்ளடக்கியதான மீளாய்வு கூட்டமொன்று விரைவாக நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதால் அது தொடர்பில் சிறப்புக் கலந்துரையாடலுக்கு திணைக்களத் தலைவர்களாகிய தாங்கள் இன்று பிற்பகல் 2 மணிக்கு மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சமூகமளிக்குமாறு இத்தால் வேண்டப்படுகின்றீர்கள் என்றுள்ளது. (ஶ-5,105)

## பெற்றோல்...

றோல் லீற்றர் ஒன்றின் விலை 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது 137 ரூபாவாக விற்கப்படும் பெற்றோல் லீற்றரின் புதிய விலை 145 ரூபாவாகக் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஒக்ரேன் 95 ரகப் பெற்றோலின் விலையும் 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை155 ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

சுப்பர் டீசலின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதின் புதிய விலை 129 ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. (ஶ)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 6

**வசந்தசிறி வி.க. தாச்சித் தொடர்**

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவலர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுவ சக்தி விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கூடைப்பந்தாட்டம்**

யாழ்ப்பாணக் கூடைப்ப ந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை இடம்பெறும் ஆட்டத்தில் யமகா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பமிலியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# சரஸ்வதி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 6

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 99ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட உள்ளூர் அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தொடரில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணி வெற்றிபெற்றது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை சனசமூக நிலைய அணி மோதியது. 22:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணி வெற்றி பெற்றது. (ம-23)

# தென்றல் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் தென்றல் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

வசந்த சிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தென்றல் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து யுவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதிய ஆட்டத்தில் 10:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தென்றல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)



வடக்கு - கிழக்கு மாகாணங்களின் வைத்தியசாலைகளுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சம்பியனானது. (ம)

# தேசிய கால்பந்து அணியில் 3 தமிழ் வீரர்களுக்கு இடம்







யாழ்ப்பாணம், ஜூலை 6

இலங்கைத் தேசிய கால்பந்தாட்ட அணிக்குள் மூன்று தமிழ் வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

24 வீரர்கள் அடங்கிய இறுதிக் குழாமை இலங்கை கால்பந்து சம்மேளம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது. அதில் வட மாகாணத்தைச் சேர்ந்த 3 தமிழ் வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மரியதாஸ் நிதர்சன், இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த யூட்சுமன் மற்றும் மன்னார் பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த் டக்சன் பியூஸ்லஸ் ஆகியோரே அவ்வாறு தேசிய அணியில் இணைக்கப்பட்டுள்ளனர். (ம-23)




# ஓவர் கேம் கரப்பந்தாட்டம் கிண்ணம் வென்றது 'யூகே'

யாழ்ப்பாணம், ஜூலை 6

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 99 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட வடமாகாண அணிகளுக்கு இடையிலான அணிக்கு 5 வீரர்கள் பங்குபற்றும் கரப்பந்தாட்டத் தொடரில் யூகே அணி கிண்ணம் வென்றது.

அரியாலை சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கோண்டாவில் கிங்ஸ்ரார் அணியை எதிர்த்து பருத்தித்துறை யூகே அணி மோதியது. 26:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யூகே அணி வெற்றிபெற்றது. (ம-23)





# சென். ஜேம்ஸின் மாணவர்களுக்கு கல்லூரிச் சமூகத்தால் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் சாதித்த குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய மாணவர்களுக்கு கல்லூரிச் சமூகத்தால் நேற்று மதிப்பளிப்பு இடம்பெற்றது.

தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் பங்குபற்றி வெண்கலப்பதக்கம் வென்ற குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய மாணவன் த.அபிசேக் மற்றும் வடக்கு மகாண பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் பங்குகொண்டு தங்கப்பதக்கம் பெற்ற கிறிஸ்ரி ஜான்சன், வெண்கலப் பதக்கம் பெற்ற கனிசியஸ் ஆகியோர் பாடசாலை சமூகத்தால் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர். (ம-23)

# உதயசூரியன் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

வசந்தசிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8.15 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்தை விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. 5:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் உதய சூரியன் விளையாட்டுக் கழக 'ஏ' அணி வெற்றிபெற்றது. (ம-23)

## மப்பேயை சமாளிக்க திட்டங்கள் உள்ளன

### பதறுகிறார் சுவாரஸ்

பிரான்ஸின் இளம் வீரர் மப்பேயைச் சமாளிக்க எங்களிடத்தில் திட்டங்கள் உள்ளன என்று குறிப்பிட்டார் உருகுவே அணியின் தலைவர் சுவாரஸ்.
கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின் காலிறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் - உருகுவே அணிகள்இன்றுபலப்பரீட்சைநடத்துகின்றன. இந்தத் தொடர் முழுவதும் பிரான்ஸ் அணியின் இளம் வீரர் மப்பே சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் சுவாரஸ்.
“கிலியான் மப்பேயைக் கொண்ட பிரான்ஸ் அணியை எதிர்த்துச் சிறப்பாக விளையாடுவோம்.
கிலியான் மப்பே சிறந்த வீரர் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், அவரை கட்டுப்படுத்தும் வகையில் எங்களிடம் சிறந்த திட்டங்கள் உள்ளன. அந்தத்திட்டங்களுக்குச்செயல் வடிவம்கொடுக்கவும்உறுதியுடன்உள்ளோம்” என்று மேலும் தெரிவித்தார் சுவாரஸ். (ம)





# பிரேசில்தான் வெற்றிபெறும்

## என்கிறது கருத்துக்கணிப்பு

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் இன்று இடம்பெறும் காலிறுதி ஆட்டமொன்றில் பெல்ஜியம் - பிரேசில் அணிகள் மோதவுள்ள நிலையில் இன்றைய ஆட்டத்தில் பிரேசில்தான் வெற்றிபெறும் என்கின்றன கருத்துக் கணிப்புக்கள்.
உலகக்கிண்ணத் தொடருக்கான உத்தியோக பூர்வ வலைத்தளமொன்றில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பில் 43 சதவீத வாக்குகள் பிரேசில் வெற்றிபெறும் என்று விழுந்துள்ளன.
28 சதவீதமான வாக்குகள் பெல்ஜியத்துத்துக்குச்சாதகமாகவும், 29 சதவீதமான வாக்குகள் ஆட்டம் சமநிலையில் (நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில்) முடியும் என்றும் பதிவாகியுள்ளன.
காயம் காரணமாக மெக்சிக்கோவுக்கு எதிரான காலிறுதிக்குத்தகுதிபெறும் ஆட்டத்தில் பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் மார்செலோ விளையாடவில்லை. அவர் தனது காயத்தில் இருந்து மீண்டுள்ளார். முழு உடற்தகுதியுடன் உள்ளார் என்று அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்தில் மார்செலோ விளையாட வாய்ப்புள்ளது.
அவ்வாறு மார்செலோ விளையாடினால் அது பிரேசிலுக்கு மேலும் பலமாக அமையும். (ம)

## உருகுவேயை ஊதுமாம் பிரான்ஸ்

உலகக்கிண்ண கால்பந்துத் தொடரில் இன்று நடைபெறும் காலிறுதியொன்றில் உருகுவே - பிரான்ஸ் அணிகள் மோதவுள்ள நிலையில் இந்த ஆட்டத்தில் பிரான்ஸ் வெற்றி பெறும் என்கின்றன கருத்துக் கணிப்புக்கள்.
உலகக்கிண்ணத் தொடருக்கான உத்தியோகபூர்வ வலைத்தளமொன்றில் மேற்கொள்ளப்பட்டகருத்துக்கணிப்பில் 46 வீதமான வாக்குகள் பிரான்ஸ்வெற்றிபெறும்என்று பதிவாகியுள்ளன.
24 சதவீதமான வாக்குகள் உருகுவே வெற்றிபெறும் என்றவாறாகவும், 30 சதவீதமான வாக்குகள் ஆட்டம் சமநிலையாகும் என்றவாறாகவும் பதிவாகியுள்ளன. (ம)











## கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் கால்பந்தாட்டத்தில் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஜூலை 6
நெஸ்லேலங்காநிறுவனமும், இலங்கைபாடசாலைகள் கால்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்திய வடமாகாணப் பாடசாலைகளின் 12 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை அணி சம்பியனானது. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை அமெரிகன்மிசன்தமிழ்கலவன்பாடசாலைஅணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. முதல் பாதியில் இரண்டு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யவில்லை. இரண்டாம் பாதியின் 4ஆவது நிமிடத்தில் அமெரிக்கன் மிசன் பாடசாலையின் கோலைப் பதிவுசெய்தார் சசிக்குமார். முடிவில் 1:0 என்ற கோல்கணக்கில் கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவுன் பாடசாலை அணி சம்பியனானது. (ம-23)

### விம்பிள்டனில் பேரதிர்ச்சி

# வெளியேற்றப்பட்ட மரிய செரபோவா



விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ரஷ்ய வீராங்கனை மரிய செரபோவா முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்டார்.

முதல் சுற்று ஆட்டத்தில் செரபோபாவை எதிர்த்து சக நாட்டவரான விடாலியா மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலாவது செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் விடாலியா. இரண்டாவது செற்றை பெரும் போராட்டத்துக்கு மத்தியில் 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தார் செரபோவா. முதலிரு செற்களின் நிறைவில் இருவரும் தலா ஒவ்வொரு செற்களில் வெற்றிபெற்றிருந்தனர். மூன்றாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் விடாலியா கைப்பற்றியதை அடுத்து அவர் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற வெளியேற்றப்பட்டார் செரபோவா. (ம)

# 12 பந்துகளில் 5 இலக்குகள்



பங்களாதேஷுக்கு எதிராக நடைபெற்று வரும் டெஸ்ட் ஆட்டத்தில் 12 பந்துகளில் 5 இலக்குகளை வீழ்த்தினார் மேற்கிந் தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் றோச். இந்த இரண்டு அணி களுக்கும் இடையிலான டெஸ்ட் ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி வெறும் 43 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. றோச் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். அவர், தான் வீசிய இறுதி 12 பந்துகளில் 5 இலக்கு களை வீழ்த்தினார். (ம)


பணியாளர்கள் தேவை
யாழ் - கொழும்பு ஆகிய பிரதேசங்களில் இயங்கும் சுப்பர் மார்க்கட்டுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
01) கணினி தரவு பதிவாளர்கள் (ஆண் / பெண்)
02) காசாளர் Till (ஆண் / பெண்)
03) விற்பனை உதவியாளர் (ஆண் / பெண்)
04) தொழிலாளர்கள் (ஆண்கள்)
05) பொதி செய்பவர்கள் (அனுபவமுள்ள பெண்கள்)
அன்னை நாகா பூட்சிட்டி
175, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விவரங்களுக்கு - 077 477 3483

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர்
மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கான இறுதி எதிர்பார்க்கை கருத்தரங்கு
சனி (7/7), ஞாயிறு (8/7)
காலை 9.00 - 3.00 மணிவரை
இருநாள்களுக்குமான மொத்தக்கட்டணம் 500/=
இருவினாத்தாள்களுக்குமுரிய அனைத்து விடயங்களும்
076 688 3394
D.M.I
(வெலிங்ரன் சந்தி)
SDB வங்கி எதிரில்
டானியல் கட்டட 2ஆம் மாடி)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.05.2018 புதன்கிழமை
அன்று இறைபதமடைந்த எமது குடும்பவிளக்கு
அமரர்
பரமேஸ்வரி தர்மலிங்கம்
(யமுனா)
அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (06.07.2018) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (08.07.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்துக்கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு. 076 461 9739
குடும்பத்தினர்.



விம்பிள்டன் ரென்னிஸ் தொடர்

# நடால் அதிரடி!



பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்க ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அபார வெற்றிபெற்றார் நடால்.

ஸ்பெய்ன் வீரர் நடாலை எதிர்த்து இஸ்ரேல் வீரர் துடிசெலா மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 6:3, 6:3, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய நடால் 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார்.

அண்மையில் முடிவடைந்த மற்றொரு பகிரங்கத் தொடரான பிரெஞ்சு தொடரில் நடால் சம்பியனாகியிருந்தார். இதனால் இந்தத் தொடரில் நடால் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்பு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நெய்மருக்கு எதிராக குவிகின்றன 'மீம்ஸ்'

'உலகக்கிண்ணத் தொடரில் நெய்மர் எதிரணிகளால் வீழ்த்தப்படுகிறார் என்பது போலிக் கருத்து. எதிரணிகளால் தான் அடிக்கடி தாக்கப்படுவதைப் போன்று அவர் நடிக்கிறார்' என்று ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் நிலையில் அவர் தொடர்பில் ஏகப்பட்ட 'மீம்ஸ்' வெளியிடப்பட்டு வருகின்றன.



குறிப்பாக மெக்சிக்கோவுக்கு எதிரான ஆட்டத்தில் நெய்மர் தொடர்ச்சியாக பல தடவைகள் நிலத்தில் வீழ்ந்தார். இதனால் பிரேசில் ஏகப்பட்ட பிரீகிக் வாய்ப்புக்களை வாங்கிக் குவித்தது. எனினும், நெய்மர் பெரிதளவில் எதிரணிகளால் தாக்கப்படுவதில்லை. அவர் நடிக்கிறார் என்கின்றனர் வலைத்தள வாசிகள். எதற்கெடுத்தாலும் மீம்ஸ் வெளியிடுவதில் வல்லவர்களான வலைத்தளப் பிரியர்கள் தற்போது நெய்மரையும் விட்டுவைக்கவில்லை. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.